பக்கங்கள் : பதினாறு+II

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 32 ஞயிற்றுக்கிழமை (16.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 230

## காலங்கடந்த வங்கிக் கணக்குகள் முடக்கப்படுவதை தவிர்க்க வழியுண்டு

### இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் விவரிக்கிறார்

யாழ்ப்பாணம், ஜூலை16

யாழ். குடாநாட்டில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளுடன் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகத் தொடர்பினைப் பேணாத வாடிக்கையாளர்கள் உடனடியாக அந்தக் கிளைகளுடன் தொடர்பு கொண்டு தமது சொத்துக்கள் முடக்கப்படுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கை வங்கியின் வட வலய உதவிப்பொது முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஏதாவது ஒரு வழியில் வாடிக்கையாளர்கள் தொடர்பினை மேற்கொண்டால் அவர்களின் சொத்துக்களைப் பாதுகாக்க இலங்கை வங்கிக் கிளைகள் உதவி புரியும் எனவும் அவர் தெரிவித்தார்.

வங்கிச் சட்ட விதி முறைப்படி 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்படாத சொத்துக்கள் கைவிடப்பட்ட சொத்துக்களாகக் கருதப்படுகின்றன. வங்கிகள் இவ்வாறான கைவிடப்பட்ட சொத்து விவரங்களை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின் அந்தச் சொத்துக்களை மத்திய வங்கி தன்வசப்படுத்திக்கொள்ளும்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பல கோடி ரூபா சொத்துக்கள் இவ்வாறு செயற்படுத்தப்படாத நிலையில் உள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. இவை பெரும்பாலும் நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளாக உள்ளமையும் தெரியவந்துள்ளது. அத்துடன் பாதுகாப்புப் பெட்டகங்களில் உள்ள பெருமளவான சொத்துக்களும் செயற்படாத நிலையில் உள்ளன. கடந்த பல வருடங்களாக நாட்டில் நிலவும் போர்ச் சூழ்நிலையால் இடம்பெயர்ந்த அல்லது புலம் பெயர்ந்த தமிழர்களின் சொத்துக்களே இவை என்று கூறப்படுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# மறைமுக ஊடுருவலை நடத்திய படையினர் பகிரங்கத் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்

## கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தமிழ்ச்செல்வன் நேற்று முறைப்பாடு

கிளிநொச்சி,ஜூலை,16

**இதுவரை காலமும் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் மறைமுகமாக ஊடுருவித் தாக்குதல் நடத்திய இராணுவத்தினர் தற்போது பகிரங்கமாக வலிந்து தாக்குதலை நடத்தியுள்ளனர்.**

**இவ்வாறு இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் முறையிட்டுள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்வ் ஹென்றிக்ஸன் நேற்றுச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் 5 மணிமுதல் சுமார் ஒன்றரை மணி நேரம் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் ஆகியோரும் உடனிருந்தனர்.

இச்சந்திப்பின்போது கண்காணிப்புக் குழுத் தலைவரிடம், இதுவரை காலமும் இரகசிய ஊடுருவலை மேற்கொண்ட படையினர் தற்பொழுது பகிரங்கமாக வலிந்து தாக்குதலை

(16ஆம் பக்கம் பார்க்க)



## போராளியின் வித்துடல் இன்று வன்னிக்கு

கிளிநொச்சி,ஜூலை16

மட்டக்களப்பு வாகனேரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகளின் போராளி கப்டன் நவலோஜிதனின் வித்துடல் இன்று வன்னிக்கு எடுத்துவரப்படுகின் றது.

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் எடுத்துவரப்படும் இவரின் வித்துடல் முல்லைத்தீவு மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

இதேவேளை -

இச்சம்பவத்தில் வீரச்சாவடைந்த ஏனைய போராளி களின் வித்துடல்கள் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டன என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளர். (1)

## படையினரின் சடலங்கள் கையளிப்பு

மட்டக்களப்பு வாகனேரியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்ட 12 படையினரின் சடலங்களும் படை அதிகாரிகளிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

இலுப்படிச்சேனையில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து நேற்றுக்காலை 9 மணிக்கு சடலங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் சடலங்களை எடுத்து வந்து கறுத்தப் பாலத்தில் வைத்து படை அதிகாரிகளிடம் கையளித்தனர்.

பின்னர் சடலங்கள் வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அங்கு மரண விசாரணை இடம்பெற்றது. (1)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ்.அலுவலகம் மீது கிரனேட் வீச்சு!

வலி.வடக்கு,ஜூலை16

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்ட தலைமை அலுவலகம் மீது இனந் தெரியாதவர்கள் நேற்று கைக்குண்டு வீசியுள்ளனர்.

யாழ்.கோயில் வீதியில் அமைந்துள்ள இந்த அலுவலகம் மீது நேற்று நண்பகல் 12.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அலுவலகத்தை நோக்கிக் கைக்குண்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்.

வீசப்பட்ட கைக்குண்டு அலுவலக வளாகத்தினுள் உள்ள தென்னை மரத்தில் பட்டுக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் பகுதியிலேயே வாகனேரி மோதல் இடம்பெற்றது

### கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை16

மட்டக்களப்பு வாகனேரியில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதல் சம்பவம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஜி.சோமஸன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடுகையில் -

வாகனேரியில் சம்பவ இடத்துக்கு எமது கண்காணிப்பாளர்கள் சென்று பார்வையிட்டனர். அந்தப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என [illegible] உறுதி செய்துள்ளனர் [illegible] (1)

## மாகாண மெய்வன்மைப் போட்டி வவுனியாவிலிருந்து திருமலைக்கு

### ஆளுநரின் பணிப்பின்பேரில் மாற்றம்

திருகோணமலை, ஜூலை16

வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண [illegible] போட்டிகள் திருகோண[illegible] மாதம் 3ஆம் திகதியில் இருந்து 16ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளை வவுனியாவில் நடத்துவது என முன்னர் முடிவு செய்யப்பட்டது. திட்டமிட்டபடி கடந்த மாதம் 30ஆம் திகதி

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்களுக்கான மனிதாபிமான சேவையை முடக்கும் முயற்சியே கைக்குண்டு வீச்சு!

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவிப்பு

வலி.வடக்கு,ஜூலை16

மக்களுக்கான மனிதாபிமான சேவையை முடக்கும் முயற்சியே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ்.அலுவலகம் மீதான கைக்குண்டுத் தாக்குதல்

இவ்வாறு யாழ்.மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில மேலும் கூறப்பட்டுள்ளதாவது-

இத்தகைய செயல்கள் எம்மை மக்கள் சேவைக்கு மேலும் செல்லத் தூண்டுமேயன்றி நாம் மேற்கொள்ளும் மனிதாபிமான சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தமுடியாது.

பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக உள்ள மக்களின் கண்ணீர் துடைக்கும் எமது செயற்பாடுகளை இத்தகைய அநாகரிகமான ஈனச் செயலை எமது நிறுவனத்தின் மீது மேற்கொள்வதன் மூலம் நிறுத்திவிடமுடியாது என இத்தகைய ஈனச் செயல்களில் ஈடுபடுவர்களுக்கு உறுதியாகக் கூறுகிறோம்.

கடந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் எமது ஊழியர்களை கடத்தியவர்களும் எம் மீது தாக்குதல்களையும் மேற்கொண்டவர்களும் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களுமே நேற்றைய கைக்குண்டு வீச்சுக்கும் காரணமானவர்கள் என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை.

இத்தகைய செயல்கள் எம்மையும் ஊழியர்களையும் எமது நிறுவனத்தையும் பாதிப்படையச் செய்யப்போவதில்லை. மாறாக வளர்ச்சிப் பாதைக்கே மேலும் இட்டுச் செல்ல முடியும் என்பதே காலத்தின் நியதியாகும்.

மனிதாபிமான அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையில் ஈடுபட்டுள்ள எமது அமைப்பைப் பயமுறுத்தி தமிழ் மக்களை மேலும் துன்பத்திற்குள் கொண்டு செல்லும் இத்தகைய தீயவர்களையும் துரோகிகளையும் மக்களே இனங்கண்டு நடவடிக்கையெடுப்பார்கள் என்பதே உண்மையாகும் - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் மீதான கைக்குண்டுத் தாக்குதலுக்கு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கண்டனம் தெரிவித்துள்ளது. மக்கள் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அரசார்பற்ற நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு எதிரான இச்செயலை வன்மையாகக் கண்டிப்பதாக இணையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(68)

## ஊர்காவற்றுறையில் இன்று அறநெறி ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை16

தீவுப் பகுதி இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வருடாந்த செயலமர்வு இன்று காலை 8 மணி முதல் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தீவுப் பகுதியில் உள்ள இந்து அறநெறிப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் இந்தச் செயலமர்வில் பங்குபற்றவுள்ளனர்.

செயலமர்வின் இறுதியில் சான்றிதழ் வழங்கல், சீருடை,இசைக்கருவி வழங்கல் என்பன இடம்பெறும் என்று தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தெரிவித்தார்.

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறவிருந்தபோது

# ஜே.வி.பியினர், படைத்தளபதிகள் பிரசன்னம்; வவுனியா செயலகத்தில் நேற்றுப் பரபரப்பு!

வவுனியா,ஜூலை16

வன்னிமாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவிருந்தபோது அங்கு ஜே.வி.பி. தலைவர்களும் படைத் தளபதிகளும் பிரசன்னமாகியிருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

வன்னிமாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வடக்கு - கிழக்கு ஆளுநர் மொஹான் விஜேவிக்கிரம மற்றும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று வவுனியா செயலகத்தில் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

இந்தக் கூட்டத்துக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களும் திணைக்களத் தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுச் செயலகத்தில் கூட்டம் ஆரம்பமாகி இருந்த நேரத்தில் ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, வடமத்திய மாகாண ஆளுநர் பேர்ட்டி லால், பதில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் நந்த மல்லவராய்சி ஆகியோர் அங்கு பிரசன்னமானார்கள். இவர்கள் ஒருங்கிணைப்புப் குழுக் கூட்டத்தில் பங்கேற்க வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

''வன்னி மாவட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் திணைக்களத் தலைவர்களும்தான் வழமையாகக் கலந்துகொள்கின்றனர்.

''இம்முறை வேறு மாவட்ட எம்.பிக்களும் படை அதிகாரிகளும் கலந்துகொள்வது என்? இந்த மாவட்டத்தின் பிரச்சினையை ஆராய்வது இந்த மாவட்ட எம்.பிக்கள்தான்.

''வேறு மாவட்ட எம்.பிக்கள் கலந்துகொள்வதை ஆட்சேபிக்கின்றோம். அவர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கமுடியாது'' - இவ்வாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான கிஷோர், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் தெரிவித்தனர்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளத் தாங்கள் வரவில்லை என்றும் வன்னி மாவட்டத்தின் குடிதண்ணீர் மற்றும் கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் பங்கேற்கவே வந்துள்ளோம் என்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜக்ஷ தெரிவித்தார்.

இதன்பின்னர் அவர்கள் பங்கேற்ற கூட்டம் நண்பகல் வரை நடந்தது. அவர்கள் சென்ற பின்னர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

(1)

## திருத்தி வாசிக்கவும்

இன்றைய உதயனில் ஐந்தாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'ஐயா! பொதுசன்மே!!... காத்திருப்பீர்!!! என்ற,தலைப்பிலான ஆக்கத்தின் கடைசி,வரி, ஐயா! பொது சனமே! நீவிர் மனசாட்சி காத்திருக்கவேண்டியதுதான் என்று தவறுதலாக அச்சாகியுள்ளது. அதனை ஐயா! பொது சனமே! நீவிர் காத்திருக்க வேண்டியதுதான் என்று திருத்தி வாசிக்கவும்.

இந்த ஆக்கத்தை எழுதியவர் பெயர் 'மனசாட்சி'

# புலிகளிடம் சிக்கிய கோப்ரலை விடுவிக்க அரசு பிரயத்தனம்

மட்டக்களப்பு, ஜூலை16

மட்டக்களப்பு வாகனேரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலின்போது விடுதலைப் புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்ட இலங்கை இராணுவக் கோப்ரல் விஜயபால கருணாரட்ணவை விடுவிக்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

பிரஸ்தாப சிப்பாயை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவைக் கேட்டுள்ளது.

இதனை அடுத்து கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு அலுவலக அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறையினருடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளினால் சிறை வைக்கப்பட்டுள்ள கோப்ரலை நேரில் சந்தித்துப் பேசிய கண்காணிப்புக் குழுவினர் அரசின் கோரிக்கையை அரசியல்துறையினருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

அரசின் கோரிக்கைக்கு புலிகள் தரப்பில் இருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

(1)

# தனியார் வைத்தியநிலையங்களிலிருந்து காலாவதியான மருந்துகள் மீட்பு

யாழ்.மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் மாலை யாழ் நகரில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது திகதி காலாவதியான மருந்துகள் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் வைத்திய நிலையங்களில் நேற்றுமுன்தினம் இந்தத் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும்-

இந்த நடவடிக்கையின் போது தனியார் வைத்திய நிலையங்கள் சிலவற்றிலிருந்து திகதி காலாவதியான மருந்துகள் மீட்கப்பட்டன என்றும் -

மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் தெரிவித்தார்.

# 'லைசென்ஸ்' பெற விண்ணப்பித்தோருக்கு செயல்முறைப் பரீட்சைத் தினம் மாற்றம்

சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்தவர்களுக்கான செயல்முறைப்பரீட்சைத் திகதிகள் மாற்றப்பட்டுள்ளன என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதன்படி நான்கு தினங்களில் நடத்தப்படவிருந்த செயல்முறைப்பரீட்சைகள் இரு தினங்களில் நடத்திமுடிக்கப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமையும் நாளைமறுதினம் புதன்கிழமையும் பிற்பகல் 2 மணிக்கு செயல்முறைப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் 29ஆம் திகதி முற்பகல் 9 மணிமுதல் இப்பரீட்சை நடைபெறும்.

இதேபோன்று எதிர்வரும் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் பிற்பகல் 2 மணிக்கு செயல் முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் 30ஆம் திகதி முற்பகல் 9 மணிமுதல் இப்பரீட்சை நடைபெறவுள்ளது.

# வெட்டுக்காயங்களுடன் சடலம் கொக்குவில் பகுதியில் மீட்பு!

வலி.வடக்கு,ஜூலை16

கொக்குவில் கிழக்குப் பகுதியில் வெட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டது.

சாரதா மகளிர் கல்லூரிச் சந்தியில் மெத்தையில் சுற்றப்பட்ட நிலையில் சடலமும் அதனருகே சைக்கிள் ஒன்றும் கிடப்பதைப் பொதுமக்கள் கண்டனர். இத்தகவல் கிராம அலுவலர் ஊடாக யாழ்.பொலீஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் க.கேசவன் பொலீஸாருடன் சடலம் கிடந்த இடத்திற்கு நேற்று பகல் நேரில் சென்று விசாரணை நடத்தினார்.

அப்போது இறந்தவர் யாழ்.ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்தவரானசூரியகுமார் சுகிர்தராஜன்(வயது 28) என்பவர் என அடையாளம் காணப்பட்டார்.

சடலத்தின் அருகே சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதனால் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாக மக்கள் படை என்ற பெயரில் எழுதப்பட்ட அட்டையொன்றும் காணப்பட்டது.

இதனையடுத்து சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவர் மீது யாழ். நீதிமன்றில் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக யாழ்.பொலீஸார் தெரிவித்தனர்.

(86-190)



கொக்குவில் பகுதியில் மெத்தைக்குள் சுருட்டிக்கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சடலத்தையும் அதில் கொலைக்கு உரிமை கோரி கட்டப்பட்டிருந்த அட்டையையும் படத்தில் காணலாம்.

(படம் : நேசன்)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
New way of Flying
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979

யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# நீறுபூத்த நெருப்பை வீறுகொள்ள வைக்கும் முயற்சி

இலங்கையின் அரசமைப்பு என்ற இறுக்கமான இரும்புச் சட்ட வேலிக்குள் இலங்கையின் அரசியல் முறைமையை அடக்கி, குறுக்கிவைத்துக்கொண்டு, இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய - நீதியான - தீர்வைக் காண்பது என்பது இயலாத காரியம்.

2002 இலும், 2003 இலும் ஆட்சியிலிருந்த ரணிலின் அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்திய அமைதி முயற்சிகள் - சமாதானப் பேச்சுகள் - முன்நகர முடியாமல் முடங்கிப் போனமைக்கு இந்த அரசமைப்புக் கட்டுப்பாடுகளும், கெடுபிடிகளும் கூடக் காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

நெகிழ்ந்து கொடுக்காத இறுக்கமான அரசமைப்பு, தார்மீக நியாயம் கருதியேனும் அரசமைப்பைப் புறமொதுக்கி நீதி செய்யமுடியாத நீதித்துறைக் கட்டமைப்பு, அதிகார வறுமையில் மூழ்கிக்கிடந்த ரணிலின் அரசு... என்று பல்வேறு காரணங்களில் அப்போதைய பேச்சுகள் பயனின்றி அவமாயின.

அரசமைப்பு என்ற நான்கு சுவர்களுக்குள் தனது செயலின்மையை முடக்கிப் போட்டிருக்கும் சிங்கள அரசினால் இரண்டு தசாப்த கொடூரப் போரினாலும், பின்னர் வந்த ஆழிப்பேரழிவினாலும் அவலப்பட்டு, அல்லற்பட்டு நிற்கும் ஈழத்தமிழர்களின் அவசர, அவசிய, அன்றாட, மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்வதற்காக முன்மாதிரி நடவடிக்கைகளை எடுக்கவேமுடியாது என இப்பத்தியில் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வந்தோம்.

ஆழிப்பேரலையால் அள்ளுண்டு அவலப்பட்ட மக்களின் அவசர - அவசிய - மனிதாபிமானத் தேவைகளை நிறைவுசெய்வதற்கான ஆற, அமர, ஆறுமாதம் கழித்தேனும் உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு, இலங்கை அரசமைப்பின் பெயராலும், நீதித்துறையின் ஆதிக்கத்தாலும் அடிபட்டுப் போயிற்று.

அதேபோன்ற மோச விளைவுகளைத் தரக்கூடிய பேரினவாத நகர்வு தென்னிலங்கையில் மற்றொரு வடிவத்தில் தற்போது முன்னெடுக்கப்படத் தொடங்கியிருக்கின்றது.

காலனித்துவப் பிடியிலிருந்து இலங்கை விடுபட்ட பின்னர், அதைக் குடியரசாக்கும் நோக்கோடு 1972இலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஏற்படுத்தும் இலக்கோடு 1978இலும் இரண்டு அரசமைப்புகள் ஒன்றின்பின் ஒன்றாகக் கொண்டுவரப்பட்டன. அவை இரண்டுமே இந்தத் தீவின் சிறுபான்மையினரான தமிழர்களின் இணக்கத்துடனோ, பங்களிப்புடனோ அல்லது கலந்தாலோசனையுடனோ கொண்டு வரப்பட்டவையல்ல. பௌத்த - சிங்களப் பேரினவாதத்தை முன்னிறுத்தி, முதன்மைப்படுத்திய இரண்டு அரசமைப்புகளுமே பெரும்பான்மை இனம் என்ற வலுவை வைத்துக்கொண்டு - சிறுபான்மையினரான தமிழர்கள் மீது அவர்களது வலுவான எதிர்ப்பையும் மீறி - சிங்களத் தரப்பினால் பலவந்தமாகத் திணிக்கப்பட்டன.

காலனித்துவப் பிடியிலிருந்து 1948 இல் இலங்கை விடுபட்ட சமயம் நடைமுறையில் இருந்த சோல்பரி அரசமைப்பின் 29ஆம் பிரிவின் கீழ், சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள், சிறப்புரிமைகள் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்காக செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள், பின்னர் தமிழினம் மீது பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட இரு அரசமைப்புகளிலும் அடியோடு நீக்கப்பட்டன; சிங்களம் தனித்து ஆட்சிமொழி ஆக்கப்பட்டது. பௌத்தமே அரசமைப்பு ரீதியாக மேலாதிக்க - மேலான - மதமாகத் திணிக்கப்பட்டது.

இத்தகைய அரசமைப்பு ரீதியான அடக்குமுறைத் திணிப்பும் இனமுறுகலில் - முரண்பாட்டை - மிகவும் மோசமாக்கி இன்றைய நிலைக்கு கொண்டுவந்தது என்பது தெளிவு.

அதே அரசமைப்பையும், நீதித்துறையையும் பயன்படுத்தி இனப்பிணக்கை இன்னும் மோசமடைய வைக்கும் எத்தனம் மற்றொரு வடிவத்தில் இப்போது தொடங்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் தமிழர்களின் மரபு வழித் தாயகமான வடக்கையும், கிழக்கையும் துண்டாடுவதற்கு 1950களின் நடுப்பகுதியில் இருந்து தொடர்ந்து வந்த சிங்கள அரசுகளினால் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் வலிந்து முன்னெடுக்கப்பட்டன.

எனினும், 1987இல் கைச்சாத்தான இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி இலங்கையின் வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் தமிழர்களின் பாரம்பரிய தாயகமாக எழுத்தில் ஒப்புக்கொள்ளவேண்டிய இக்கட்டுக்குள் - கட்டாயத்துக்குள் - தள்ளப்பட்ட சிங்கள ஆட்சித் தலைமை, அதே காரணத்துக்காக வடக்கையும், கிழக்கையும் இணைத்து நிர்வகிக்கும் நெருக்கடிக்கும் தள்ளப்பட்டது.

சுமார் பத்தொன்பது ஆண்டுகாலம் நீடித்த இந்நிலைமையைச் சிதறடித்து, வடக்கையும், கிழக்கையும் பிரித்து தமிழர் தாயகத்தைத் துண்டிக்க அரசமைப்பு உதவியோடு நீதித்துறை முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

மேற்படி பிரிப்புக்கான - துண்டிப்புக்கான - செயலதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரியது. அதுவும் கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியே அது குறித்து அவர் தீர்மானிக்கலாம். அதுவரை அவர் ஒன்றும் செய்யமுடியாது; வாக்கெடுப்புக்கான நிலைமை சீரடைந்து அது நடைபெறும்வரை அதை ஒத்திவைத்து, இணைப்பு நீடிப்பதை அனுமதிப்பதைத் தவிர.

அரசமைப்புத் தொடர்பான ஏனைய விடயங்களின் - சர்ச்சைகளின் போது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்துக் கேள்விக்கு உள்ளாக்கும் அதிகாரம் தனக்குக் கிடையாது என்பதைத் தனது தீர்ப்புகள் மூலம் இதுவரை தொடர்ந்து உறுதிப்படுத்திவரும் உயர் நீதிமன்றம், வடக்குக் கிழக்கை - தமிழர் தாயகத்தை - துண்டித்துப் பிரிக்கக் கோரும் பேரினவாதிகளின் தற்போதைய முயற்சி தொடர்பில், ஜனாதிபதியின் செயற்பாட்டை எப்படிக் கையாளப்போகின்றது என்பதை உலகம் பார்த்திருக்கின்றது.

சட்டத்தின் பெயரால் தார்மீகத்தையும், இயற்கை நீதியையும் புறக்கணித்து, விதிகளின் நுணுக்கங்களைத் தூக்கிப்பிடித்து, விளைவுகள் குறித்துச் சிந்திக்காமல் விபரீத முடிவுகள் எட்டப்படுமானால், தென்னிலங்கை சட்டவாட்சி நிர்வாகத்துக்கு எதிரான தமிழரின் கிளர்ச்சி முனைப்பிலும் ஆபத்து உள்ளது. 'நீறுபூத்த நெருப்பாக' அடங்கிக் கிடக்கும் விடுதலை வேட்கையை வீறுகொண்டு எழ வைக்கும் ஊக்கியாக அது அமைந்துவிடும்.

சாதக, பாதகங்களை சீர்தூக்கிப் பார்த்துத் தீர்மானம் எடுக்க வேண்டியவர்களுக்கு இது சமர்ப்பணம்.

# நெடுமாறன், சுப.வீரபாண்டியன் உட்பட ஐவர் மீதான 'பொடா' வழக்குகள் வாபஸ்!

சென்னை,ஜுலை16

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவா நெடுமாறன், புதுகை பாவாணன், சாகுல் ஹமீட், பேராசிரியா சுப.வீரபாண்டியன், மருத்துவா தாயப்பன் உட்பட 5 பேர் மீதான பொடா வழக்குகளை தமிழ்நாடு அரசாங்கம் திரும்பப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பாக இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

வழக்கு நடைபெறும் பூவிருந்தவல்லி 'பொடா' நீதிமன்றத்திற்கு இத்தகவல் தெரிவிக்கப்பட்ட பின்னர் 'பொடா' வழக்குகள் இரத்துச் செய்யப்படும் - என்று கூறப்படுகிறது.

மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மீதான வழக்கு இந்தியத் தலைமை நீதிமன்றில் நிலுவையில் இருப்பதால் அதுகுறித்த முடிவை தமிழ்நாடு அரசு இன்னமும் தெரிவிக்கவில்லை.

'பொடா' வழக்குகள் திரும்பப் பெறப்பட்டமை குறித்து சுப.வீரபாண்டியன் கூறியதாவது:-

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் நாள் தமிழீழத் தேசியத் தலைவா பிரபாகரன் அவர்கள் உலகம் முழுமையும் உள்ள பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தார். அந்தப் பேட்டி குறித்து தமிழக மக்களுக்கு விளக்குவதற்காக 2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் நாள் தமிழ் முழக்கத்தின் சார்பில் சென்னையிலே கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டு அந்தப் பேட்டி பற்றியும், தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும் பேசியதற்காக எங்களின் மீது 'பொடா' வழக்கு தொடரப்பட்டது.

2002ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் நாள் பழ.நெடுமாறனும், 16ஆம் நாள் நானும் கைது செய்யப்பட் டோம். அதே கூட்டத்தில் வரவேற்புரை நிகழ்த்தியமைக்காக மருத்துவர் தாயப்பன் ஒக்ரோபர் மாதமும், ஏற்பாடுகளைச் செய்த தமிழ் முழக்கம் சாகுல் ஹமீட் 2003 ஆம் ஆண்டு மாச் மாதமும் கைது செய்யப்பட்டார்கள். ஏற்கனவே ஒரு வழக்கில் கைதுசெய்யப்பட்டிருந்த புதுக்கோட்டை பாவாணனை இந்த வழக்கிலும் சேர்த்து 2002ஆம் ஆண்டு ஜுலையிலிருந்தே 'பொடா' வழக்குத் தொடரப்பட்டது.

2003 டிசெம்பரிலிருந்து ஒவ்வொருவராக பிணையில் வெளிவந்தோம். 2004ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஏறத்தாழ ஐவரும் பிணையில் வெளிவந்துவிட்டோம்.

2003 டிசெம்பரில் பிணையில் வந்தேன். ஆனாலும் நெடுமாறன் அவர்களுக்கும், எனக்கும் புதுகை பாவணனுக்கும் சில கடுமையான முன்நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. மருத்துவர் தாயப்பனுக்கும் அது பொருந்தும்.

"கலைஞரின் கனிவுமிகுந்த அரசு இன்றைக்கு 'பொடா' வழக்கைத் திரும்பப் பெற்றுள்ளது. அடக்குமுறைகள் ஒருநாளும் வென்றதில்லை என்பதை இன்றைய நிலை எடுத்துக்காட்டுகிறது".

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ மீதான வழக்கு புதுடில்லி உச்சநீதிமன்றில் நிலுவையில் உள்ளது. 'பொடா' மறு ஆய்வுக் குழு தொடர்பான விடயத்தில் முன்னைய தமிழ்நாடு அரசு எங்கள் ஐவர் மீது ஒரு நிலைப்பாட்டையும், வைகோ வழக்கில் வேறு ஒரு நிலைப்பாட்டையும் எடுத்திருந்தது. தமிழ்நாடு உயர்நீதிமன்றில் தமிழக அரசு தொடுத்த வழக்கு என்பதால் எங்கள் மீதான வழக்கு திரும்பப் பெறப்பட்டுள்ளதாக கருதுகிறேன். வைகோ உள்ளிட்ட 9 பேர் மீதான வழக்கு உச்சநீதிமன்றில் உள்ளது. ஆகையால் தாமதமாகலாம் என்று கருதுகிறேன்.

இன்று உள்ள தமிழக அரசும், மத்திய அரசும் ஈழத்தமிழா போராட்டத்தை முழுமையாக ஆதரிக்கவேண்டும் என்று விரும்புகிறவர்களில் நானும் ஒருவன். ஆனால் யதார்த்தத்தில் இந்த அரசுகள் அப்படியான ஆதரவை அளிக்கின்றன என்று கூறமாட்டேன்.

குறைந்தபட்சம் சிறிலங்கா அரசாங்கத்துக்கு ஆதரவாக நின்று ஈழத்தமிழ் மக்களின் படுகொலைகளுக்கு துணை போய்விடக்கூடாது என்கிற அளவிலாது ஓர் அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும் என்று கருதுகிறோம். இன்று தகவல்கள் வருகின்றன. 'ராடார்' போன்ற கருவிகளை மத்திய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு எதிரான எங்களின் கடுமையான கருத்துகளை பதிவுசெய்து போராட்டங்களை முன்னெடுக்கிறோம்.

ஈழத் தமிழர்களின் போராட்டத்துக்கு மத்திய அரசு ஆதரவாக இருக்க வேண்டும் என்று தமிழர்கள் அனைவரும் கருதுகிறோம். அப்படி மத்திய அரசு நிலைப்பாடு எடுப்பதற்கான அழுத்தத்தை தமிழ்நாடு அரசு கொடுக்க வேண்டும் என்று கோருகிறோம். எங்கள் கருத்துகளை தமிழ்நாடு அரசிடம் தெரிவித்துள்ளோம்.

முழுமையாக ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு வந்துவிடும் என்று நாங்கள் கருதவில்லை. என்றாலும் கூட சென்ற அரசைப்போல் கடுமையாகவும், கொடுமையாகவும் ஒருநாளும் நடந்துகொள்ளாது என்று நம்புகிறோம். நம்முடைய தொடர்புகள் - உறவுகள் மூலமாக மத்திய அரசை - தமிழ்நாடு அரசை நம் ஆதரவு நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்பதே அனைவரது விருப்பமாக இருக்கிறது என்றார் சுப.வீரபாண்டியன். (ஐ)

# கதிர்காமத்தில் பெரும் தேடுதல் தமிழர்கள் 22 பேர் வெள்ளியன்று கைது!

கதிர்காமத்தில் பொலீஸார் நேற்று முன்தினம் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின் போது தமிழர்கள் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை இந்த தேடுதல் நடத்தப்பட்டது. 300 இற்கும் மேற்பட்ட பொலீஸார் இணைந்து இந்தத் தேடுதலை நடத்தினர். கைது செய்யப்பட்டவர்களில் வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் கதிர்காமம் நகருக்குள் ஊடுருவியிருக்கின்றனர் என்ற தகவல் ஒன்றையடுத்தே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டதாக கதிர்காமம் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று கதிர்காமம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறினார். (ஐ)

## சிப்பியுடன் மணல் அகற்றப்படுவதால்

# கல்லுண்டாய் வயல் பகுதியில் கடல் நீர் உட்புகும் அபாயம்!

நவாலி,ஜூலை16

கல்லுண்டாய் கடற்கரைப் பகுதியில் சிப்பி அள்ளுபவர்கள் நாளுக்கு நாள் அதற்குரிய மண்ணையும் ஏற்றிச் செல்வதால் அப்பகுதியில் வயல்களுக்குள்ளும், குடிமனைகளுக்குள்ளும் கடல் நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த சிலரது உதவியுடன் அவசர அவசரமாக ஏற்றிச் செல்லப்படும் மணல் வேறோர் இடம் ஒன்றில் குவிக்கப்படுவதாகவும்-

பின்னர் இம் மண்ணை அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய மனிதாபிமானமற்ற செயலினால் கடல்நீர் விளைநிலங்களுக்குள் புகுவதுடன் எதிர்காலத்தில் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலையும் உருவாக நேரிடுகிறது.

மேலும்,அயலிலுள்ள நன்னீர் கிணறுகள் விரைவில் உவர்நீராக மாறும் தன்மையும் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. (100)

## மத்தியஸ்த சபையின் அறிமுக நிகழ்வுகள்

தெல்லிப்பழை மத்தியஸ்த சபையின் அறிமுக நிகழ்வுகள் மூன்று இடங்களில் நடைபெறவுள்ளன.

முதலாம் நாள் நிகழ்வு இன்று பி.ப. 3 மணிக்கு அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் மத்தியஸ்த சபையின் பிரதம மத்தியஸ்தர் ந.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் பி.ப. 3 மணிக்கு நடைபெறும். இந்த நிகழ்வுக்கு தெல்லிப்பழை மத்தியஸ்த சபையின் பிரதம மத்தியஸ்தர் மு.சிவராசரத்தினம் தலைமை வகிப்பார்.

மூன்றாம் நாள் நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை கட்டுவன் புலம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

## நாளை

ஆடி - 01
திங்கட்கிழமை
17.07.2006
திதி : ஸப்தமி
மாலை: 05.59
நட்சத்திரம் : ரேவதி
பின்னிரவு : 03.07
ஆடிப்பிறப்பு
எமகண்டம் : 12.00 - [illegible]
ராகுகாலம் : 07.30 - 09.00

# மண்டைதீவு தெற்கில் வீடுகளுக்கு இரவுநேரத்தில் கல்வீச்சு எனப் புகார்!

யாழ்ப்பாணம்,ஜூலை16

மண்டைதீவு தெற்குப் பகுதியில் 8ஆம் வட்டாரத்தில் மீளக்குடியமர்ந்தவர்கள் வசிக்கும் சில வீடுகள் மீது இரவு நேரத்தில் - நள்ளிரவில் கற்கள் வந்து விழுவதாகவும் - இதனால் ஓடுகள் உடைவதாகவும் அங்குள்ளவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மண்டைதீவில் மீளக்குடியமர்ந்துள்ளோர் அசாதாரண சூழ்நிலையை அடுத்து குடும்பம் குடும்பமாக இணைந்து ஒரே வீட்டில் இரவுப் பொழுதைக் கழித்து வருகின்றனர். இந்த நிலையில் அண்மைய நாள்களாக தொடர்ச்சியாக இவ்வாறு கல்வீச்சு இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி இரவில் வீடுகளை விட்டு வெளிவருவதில்லை. இதனால் இந்த இரவுநேர விஷமத்தனத்தின் சூத்திரதாரிகளை கண்டுகொள்ளமுடியவில்லை என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு தரப்பினரும் கரையோரங்களில் உள்ள முகாம்களை விட்டு வெளியேறுவதில்லை என்றும் -

இதனைச் சாதகமாகக் கொள்ளும் சிலர் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இந்தச் செயலுடன் சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் இனங்காணப்படுவர் என்று பாதுகாப்பு தரப்பினரும், பொதுசன தொடர்பாளர்களும் பொதுமக்களுக்கு உறுதியளித்துள்ளனர்.

நல்லதண்ணீர் கிணறுகளில் விலங்குக் கழிவுகளைக் கொட்டுதல், தண்ணீர்த்தொட்டிகளின் குழாய்களை உடைத்தெடுத்தல், வேலியில் உள்ள முட்கம்பிகளை அகற்றிவிட்டு எல்லையில் உள்ள உயிர் உள்ள மற்றும் பட்ட பூவரசுகளைத் தறித்தெடுத்தல் -

கயிறு கட்டி இரகசியமாக தேங்காய் குலைகளை வெட்டி இறக்குதல், காணிச் சொந்தக்காரர் கண்டுவிட்டால் அவர்களிடம் உறுதி இருக்கிறதா என்ற கேட்டு அச்சுறுத்தல் போன்ற விஷமச் செயல்களின் உச்சக் கட்டமாக தற்போது நித்திரையில் இருப்பவர்களின் வீடுகளுக்கு கல் எறியும் சம்பவங்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (88)

## உதயவாக்கு

ஒருவன் சோம்பலுடன் நூறு ஆண்டு காலம் வாழ்வதைக் காட்டிலும் வீரத்துடன் முயற்சிசெய்து ஒருநாள் என்றாலும் வாழ்வதே மேலான வாழ்க்கையாகும்.
-புத்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Sony Digital Vidio Camara 990, Digital 200m, Samsony Camara Digimasc, A4/Ceytav 40, D.C 3.3V என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P.No.021 222 2573 (சி-50205)

Digital வீடியோ கமரா (Canon XL1S), Focus Light -2, உழவு இயந்திரம் Massey Ferguson (270 - 28 XX) என்பன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு : S.இரத்தினசிங்கம், ஐயனார் கோயிலடி, கொடிகாமம். T.P.: 077 488195, 077 9773693. (52225)

உயரம் 48'' X அகலம் 30'' (3X8) 24 லாச்சி, இரண்டு கதவு, டென்டுக்கல் இரும்புப் பெட்டி விற்பனைக்குண்டு.தொடர்புகளுக்கு இ.யோகராசா (சித்தப்பா), இல.980, K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி. (52262)

## காணி விற்பனைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக 6½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:T.P. 0773114495, 0115527708 (52246)

யாழ்.ராசவீதி, சந்தியில் (Dr.ராமசாமி வைத்தியசாலைக்கு அருகில்) முருகன் வீதியில் 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P. 0773114495, 0115527708 (52245)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் தேவையான அளவில் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/50183)

புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: நல்ல சமாரியன் ஆலயம், கோண்டாவில் கிழக்கு, ஆணிபக்ரறி அருகில். T.P.077 6670175 (52274)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Poomeranian, Great dane X Dobber man நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. German Shepperd Greatdane நாய்கள் குறைந்த கட்டணத்தில் Crossing விடப்படும்.Pet Club (Pragash), 95, Palay Road, Jaffna. (அம்மன் றோட்டுக்கும், இலுப்பையடிச் சந்திக்குமிடையில்) (52234)

இரு பொமினேரியன் வெள்ளை பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.நாகேந்திரன், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு அருகில். T.P.0777726234 (52289)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் (இல.180 கைலாசபிள்ளையார் சந்திக்கு அண்மையில்) நல்லவசதிகளுடன் கூடிய 5 அறைகள் உள்ள (2 அறைகள் குளிரூட்டப்பட்டன) வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மிகப்பொருத்தமானது. தொடர்பு: T.P. 222 3130, 0714220003 (52285)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்குப் பகுதியில் நன்னீர் உட்பட சகல வசதிகளுடன் பகுதி வீடு வாடகைக்குண்டு. பல்கலைக்கழக மாணவிகளுக்கு அல்லது பெண்கள் மட்டும் உள்ள சிறிய குடும்பத்துக்கு கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி எண்ணுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2914, C/o உதயன். (52267)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம்,1972 ரேவதி, 8இல் செவ்வாய், கிரகபாவம் 43, அரச திணைக்களமொன்றில் உயர் பதவி வகிக்கும் B.A. (Special) மணமகளுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல: 2911, மே/பா, உதயன். T.P. 0773715652 (52645)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972 ஆம் ஆண்டு பிறந்த, அவிட்டம் முதலாம் பாதம் நட்சத்திரமுடைய யாழ்ப்பாணத்தில் கடை, வீடு மற்றும் கூடிய ரொக்கத்து ஒரே வாரிசான பெண்ணுக்கு படித்த அரச உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. தொடர்பு: தர்ஷன் T.P. 0779046498 (52283)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், தற்போது லண்டனில், B.Sc. கொமிஸ்னராக கடமை புரியும் திருவோணம் 2ஆம் பாதம் நட்சத்திரமுடைய மணமகனுக்கு படித்த, அழகான பெண் உடன் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்து அழைத்துச் செல்வார். (மணமகன் 6 அடி உயரம், 35½ கிரகபாவம் உடையவர். தொடர்பு: தர்ஷன் T.P. 0779046498 (52284)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், மிருகசீரிடம் லக்கினத்தில் செவ்வாய், B.Sc. வருமானம் 14 ஆயிரம் உடையவருக்கு மணமகள் தேவை. (25 வயதிற்குட்பட்ட) தொடர்பு: விளம்பர இல.2912, மே/பா உதயன் (குறிப்புடன்). (52155)

இந்துகௌரவ 30 வயது, பட்டதாரி அரச பணியில் இருக்கும் 5' 2'' உயரமுடைய, சதய நட்சத்திர மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: K.விசு, இல.655, 7ஆம் யூனிற், கல் மடுநகர், கிளிநொச்சி. (சி/50230)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 17.07.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சந்நிதி பாம் - தொண்டைமானாறு, கரன் - ஆலடி - உடுவில், முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49995)

பகிரா புறொயிலர் குஞ்சுகள் 19.07.06 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச்சந்தி, தாரகை - பருத்தித்துறை, P.ரவி - சாவகச்சேரி, றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம் - மாதகல் வீதி, பண்டத்தரிப்பு, நாகம்ஸ் பாம் - வட்டுக்கோட்டை, மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சுன்னாகம், கோண்டாவில், கோப்பாய் ஆகிய கால்நடைச் சங்கக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். T.P. 222 3529, 222 2867. (52000)

## வடமராட்சிப் பாடசாலைகளில் கோட்ட மட்ட ஆங்கிலதினப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை16

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியிலும், கரவெட்டி கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியிலும், மருதங்கேணி கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அப்பால் உள்ள பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும், அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் குடத்தனை அதக பாடசாலையிலும் நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (117)

## மெய் வன்மைப்போட்டி

வலி வடக்கு, ஜூலை16

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய கலைமகள் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று காலை 9 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் மா.ஆனந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதிய கல்விசார் முகாமையாளர் டாக்டர் அ.பேரின்பநாதனும் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற பாடசாலை உபஅதிபர் ஆ.இரத்தினசிங்கம் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (86)

## அம்புலன்ஸ் கிடைத்தது

குருநகர், ஜூலை16

சுனாமி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 'யுனிசெப்' அமைப்பு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (51)

## உதவியாளர் தேவை

றெஜிபோமில் உருவங்கள், எழுத்துகள் வடிவமைப்பதற்கு உதவியாளர்கள் (பெண்கள்) தேவை.சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்.
தொடர்பு: 0773253023

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும் உபஉணவுமாகும். குரு... குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்... தும் காரணியுடன் விற்றமின் A,C உடன் இரும்பு, ... குரோமியம், கல்சியம், நார்ப் பொருள்கள் ... நன்மை பயக்கக்கூடிய பொருள்களும் உண்டு.

**BIOTEC INTERNATIONAL**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி
(பாம் ஸ்கூல் அருகில்)
T.P. 021 4590907
32/5, ரெயில்வே அவனியூ, கொழும்பு-...
(51292) T.P. 0112 852269 (21.14.1...

## வீடு வாடகைக்கு

1. வைமன் வீதி சூழலில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு வழங்கப்படும். ரெலிபோன் உட்பட.
2. சிறு குடும்பத்திற்குரிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. கலட்டி ஒழுங்கை, கோண்டாவில்.

## வாகனம் விற்பனைக்கு

மொறிஸ் மைனர் - 5 SRI 3767
Super cub 90.CC.LANCER
தொடர்பு: 021 222 8333
(சி/50244) (32.19.14.26)

## நெல்சன் சாரதி பயிற்சிப் பாடசாலை

சகலவிதமான வாகனங்களுக்கும் சிறந்த முறையில் அனுபவமிக்க பயிற்சியாளர்களால் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள யாழ்.மண்ணில் சிறந்த ஸ்தாபனம்!

T.P.:0777 942312

'நெல்சன் லேனர்ஸ்'
இல.109, Y.M.C.A. கட்டடம்,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
(52290) (26.19.14)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975 ஆம் ஆண்டு, கார்த்திகை 3 ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாய், கிரக பாவம் 56 உள்ள பிரான்ஸ் நாட்டில் இருக்கும் மணமகனுக்கு வெளிநாடுகளில் உள்ள மணப்பெண்ணைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
(52288) (33) தொடர்பு: 0779994647.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
### வல்லிபுரம் அன்னம்மா

தோற்றம் 20.03.1922 | மறைவு 17.06.2006

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உதவிகள் நல்கியவர்கள், இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு அவரின் இல்லத்தில் இன்று (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

43, வங்களா வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

குடும்பத்தினர்,
பூ.நாகலிங்கம் (மருமகன்).

(52287) (39.19.14.26)

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணபிள்ளை மேனன்

அரியாலை, நொத்தாரிஸ் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமாகிய கிருஷ்ணபிள்ளை மேனன் 14-07-2006 லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பேரம்பலம் பேரின்பசுந்தரி (பேரம்பலம்) ஆகியோரின் அன்பு மருமகனும் நர்மதாவின் அன்புக் கணவரும் மயூன், மதினிஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி (லண்டன்), மோகன் (லண்டன்), ரதி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சகாதேவன் (லண்டன்), லதா (லண்டன்), கீதா (இலங்கை), சைதா(இலங்கை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் வன்னியசிங்கம் தேவகுமாரன் (இந்திரன்-இலங்கை) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

51, புங்கன்குளம் றோட்,
யாழ்ப்பாணம். (சி/50241)(26.19.14)

தகவல்:
பேரின்பசுந்தரி (மாமி).

ஓம் சக்தி கணபதி துணை!

உங்கள்
## பெயரிலே பேரதிர்ஷ்டம்

உங்களின்
சகல குறைபாடுகள், கவலைகள், பிரச்சினைகள்
அறவே நீங்க நாடுங்கள்: T.P.:0777884163

## ரவீன் பியூரோ (The Raveen Bureau)

நியூமொரலோஜி எனப்படும் அதிர்ஷ்டவிஞ்ஞான எண் கணித சோதிடம் அதிசக்தி வாய்ந்ததாகும். அது உங்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் நிறைந்திருந்து அதிர்ஷ்டமான பெயர்களுக்கு வெற்றியையும், மகிழ்ச்சியையும் துர் அதிர்ஷ்ட பெயர்களுக்கு தோல்விகளையும், துன்பத்தையும் சிலருக்கு திடீர் மரணத்தையும் தந்து கொண்டிருக்கின்றன. இதில் மிகப்பெரிய விடயம் யாதெனில், உங்கள் பெயர் அதிர்ஷ்டமாக இருக்கின்றதா துர்அதிர்ஷ்டமாக இருக்கின்றதா என்பதனை நீங்கள் ஐயந்திரிபற அறிந்துகொள்ளாமல் இருப்பதுதான்.

உங்கள் பிறந்த திகதி, பெயர் எண், வாழும் இடத்தின் பெயர் விவரம் இவைகளின் அடிப்படையில் காலபலன்களை அறிந்துகொள்ளவும்.

வியாபாரத்தில் இலாபம் ஒன்றையே இலக்காக அடைய, காலாகாலத்தில் கல்யாணம் நடக்க, காலதாமதமின்றி மகப்பேறு கிடைக்க, மருத்துவத்தினால் கைவிடப்பட்ட நோய் கூட பூரணகுணம் பெற, பலவீனங்கள், குறைபாடுகள் தீர, கல்விகேள்விகளில் சிறந்து விளங்க, வாழும் வீடு சகல வழிகளிலும் நிம்மதி பெற உங்கள் பெயரையே பரிசோதித்து பூரண வெற்றி பெறுங்கள்.

முன் பதிவு செய்து கொள்ளத் தொடர்பு கொள்ளுங்கள்: 0777 884163
**ரவீன் பியூரோ,**
பழம் வீதி, கோப்பாய் தெற்கு, இருபாலை.
(52287) (39.19.14.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வேயை வெளியேற்ற ராஜபக்ஷ திட்டம்! இழுத்த இழுப்புக்கு இந்தியா வருமா?

தும்பை விட்டு வாலைப் பிடிக்கிற கதை யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ... நிச்சயம் சிங்கள பேரினவாத அரசுக்குப் பொருந்தும்! இல்லையென்றால், 'நானும் இலங்கைக்காரன். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் இலங்கைக்காரர். ஆகவே, நாங்கள் இருவரும் எங்களுடைய பிரச்சினையைப் பேசித்தீர்க்கவேண்டும். பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாராக இருக்கிறேன்'' என்று இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருப்பாரா?

இதுவே ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இலங்கை அரசால் அறிவிக்கப்பட்டிருந்தால்... இவ்வளவு உயிரிழப்புகள், யுத்த கொடூரங்கள் நிகழ்ந்திருக்குமா என வெறுத்துப்போய் சொல்லும் ஈழத் தமிழர்கள், ராஜபக்ஷவின் இந்த அறிவிப்பை கொஞ்



சமும் நம்பத் தயாராக இல்லை என்பதுதான் நிதர்சனமாக இருக்கிறது.

இப்படித்தான் கடந்த வாரம், 'சிங்களமும் தமிழும் சமத்தன்மையுள்ள ஆட்சி மொழிகளாக ஆக்க பரிசீலிக்கப்படும்' என்று இலங்கை அரசு ஓர் அறிவிப்பை வெளியிட்டது. இதையும் ஒருவிதமான அருவருப்பான சலுகையாகவே தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். காரணம், 1948இல் ஆங்கிலேயர்கள் இலங்கையை விட்டு வெளியேறியபோது சிங்களவர்கள் ஆட்சிக்கு வந்ததும் அவர்கள் அவசர அவசரமாகக் கைவைத்தது

## இலங்கைப் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு நேர்மையான அணுகுமுறையைப் பின்பற்றவேண்டும்

இந்திய வம்சாவழித் தமிழர்களின் குடியுரிமையில்தான்! அத்தோடு, சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்றும், பௌத்தமே அரச சமயம் என்றும் அறிவிக்கப்பட்டது. இதுதான் ஈழத் தமிழர்களைப் போராட்டக் களத்தில் குதிக்கவைத்தது. அதாவது, இப்போது எதையெல்லாம் ஈழத்தமிழர்களுக்கு சிங்கள அரசு தருவதாகச் சொல்கிறதோ, அதெல்லாம் மறுக்கப்பட்டதால்தான் இத்தனை ஆண்டுகள் இலங்கை ரணகளமாக இருக்கிறது!

இன்று பிரபாகரனும் சரி, ஈழத்தமிழ் மக்களும் சரி ... விரும்பினால்கூட ஒரு இலங்கைக்காரனாக வாழமுடியாது என்பதே இன்றைய தேதியில் எதார்த்தமான ஒன்றாக இருக்கிறது. அந்த அளவுக்குத் தமிழ் மற்றும் சிங்கள இனங்கள் இடையே அங்கே பெரிய இடைவெளி ஏற்பட்டுவிட்டது.

இதைப்பற்றிக் கொழும்பில் வசிக்கும் மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் 'தமிழ் மக்களுக்கும் சம அந்தஸ்து கொடுங்கள்' என்று 1950 களில் அமைதிவழிப் போராட்டம் மூலம் தந்தை செல்வா சொன்னபோது, அதை ஏளனப்படுத்திய சிங்களப் பேரினவாதம், இப்போது அடிமேல் அடிவாங்கியபிறகு சமாதானத் தூது விடுகிறது போராளிகளுக்கு.

### ஈழப்போராட்டம் ஓர் இன விடுதலைப் போராட்டம்

இன்றும் முப்பதாண்டுகளைத் தொட்டுவிட்ட ஈழத் தமிழரின் ஆயுதப் போராட்டம் அதன் முக்கியமான வரலாற்றுக் காலகட்டத்தை எட்டியுள்ளது. பலஸ்தீனம், அயர்லாந்து, கிழக்குத் தீமோர் பிரச்சினைகளைப் போல ஈழப்போராட்டம் இன்று சர்வதேச அளவில் விவாதிக்கப்படுகிற ஓர் இன விடுதலைப் போராட்டமாகிவிட்டது. காரணம், ஐரோப்பிய நாடுகள் நோர்வேயின் தலைமையில் ஈழத்தில் அமைதிக்காகத் தலையிட்டதுதான்.

இப்போது அதிபராக இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பத்தில் 'ஒற்றையாட்சி முறைக்குள்ளேயே தீர்வு' என்றுதான் ஆட்சிக்கே வந்தார். வந்தவுடன் அவர் சரத்பொன்சேகாவை இராணுவத் தளபதியாக்கினார். கடந்த காலங்களில் தமிழ்மக்களின் மீதான இன வெறித்தாக்குதலுக்கு சரத் பொன்சேகாவும் ஒரு காரணம் என்ற ஒரு குற்றச்சாட்டு ஏற்கனவே உண்டு. [இப்போது பொன்சேகா கொழும்பில் நடைபெற்ற தாக்குதலில் படுகாயமுற்று செயல்படமுடியாத நிலையில், சிங்கப்பூரில் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்].

இந்நிலையில், சிங்கள அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் நிலவிய சுமார் நான்காண்டு கால சமாதானம், இலங்கை அரசின் பிடிவாதத்தால் மீண்டும் நீர்த்துப்போக ஆரம்பித்தது. இதனால், சமாதானம் மீறப்பட்ட கடந்த சில மாதங்களில் மட்டும் காணாமல் போனோர், கொலை செய்யப்பட்டோர், பாலியல் வன்முறைக்குள்ளானோர் என்று ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தொடும். சில இடங்களில் தமிழ் மக்களின் மீதான இராணுவத் தாக்குதலுக்குப் பதிலடியாக அப்பாவி சிங்கள மக்களும் கொல்லப்படுகிறார்கள்.

இந்நிலையில், இலங்கைப் பிரச்சினையில் மீண்டும் தன் கவனத்தைக் கொஞ்சம் அதிகமாகக் காட்டத் தொடங்கியிருக்கிறது இந்தியா. அதன் பிரதிநிதியாக ஷியாம்சரண், இலங்கைப் பிரதமரைச் சந்தித்திருக்கிறார். இந்தியாவின் இந்த அக்கறைக்குத் தூண்டுதலே சிங்கள அரசாங்கம்தான் என அரசியல் பார்வையாளர்களிடையே பேச்சு அடிபடுகிறது'' என்கிறார் அந்தப் பத்திரிகையாளர்.

தொடர்ந்து, பேசியவர், ''சமாதானப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் நோர்வே அரசாங்கத்தை எப்படியாவது வெளியேற்றிவிடவேண்டும் என்பதுதான் இலங்கை அரசின் ஆசை. சிங்களத் தீவிரவாத கட்சியான ஜே.வி.பியின் விருப்பமும் இதுதான். நோர்வையை வெளியேற்ற வேண்டுமானால், இந்தியாவை கொல்லைப்புறம் வழியாக இதில் இழுத்துவிட்டு வேடிக்கை பார்க்கவேண்டும் என்பதுதான் இலங்கை அரசின் தற்போதைய நோக்கம். அதனால்தான் எடுத்ததற்கெல்லாம் புதுடில்லிக்கு ஓடுகிறார்கள்.

நோர்வே நாட்டின் சமாதானத் தூதுவர்கள் இலங்கையில் இருக்கும்வரை தமிழர்களுக்கு எதிராகப் பெரியதொரு தாக்குதலைத் தொடுக்க முடியாது என நினைக்கிறது இலங்கை அரசு. அதனால், அவர்களை எப்படியாவது வெளியேற்றத்தான், இந்தியாவை மத்தியஸ்தராக அது அழைக்கிறது. உண்மையில் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளும் எண்ணம் இலங்கை அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. சொல்லப்போனால், முன்பு ராஜீவ்காந்தி உதவியுடன் தமிழர்



களின் மீது ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தாக்குதல் நடத்திய அதே உத்தியைத்தான் இப்போதும் கடைப்பிடிக்கப்பார்க்கிறது இலங்கை அரசு. தான் இழுத்த இழுப்புக்கு இந்தியா வந்துவிட்டால், அதன் பிறகு தந்திரமாக இந்தியாவையும் வெளியேற்றிவிட்டு திருகோணமலையில் இராணுவத் தளம் அமைக்க விரும்பும் அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டு தமிழர்களை நசுக்கிவிடலாம் என்பதுதான் ராஜபக்ஷவின் திட்டம்'' என்கிறார் இலங்கை இனப்பிரச்சினையை அதன் தோற்றத்திலிருந்தே நுணுக்கமாகக் கவனித்துவரும் அந்த மூத்த பத்திரிகையாளர்.



இந்நிலையில், 'இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான மத்திய அரசு, இலங்கைப் பிரச்சினையில் நேர்மையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும்' என்பதுதான் தமிழர்களின் விருப்பம். இலங்கையில் சிங்கள மற்றும்தமிழ் தேசிய இனங்கள் இணைந்து வாழ்வதென்பது இனி சாத்தியமில்லாத விடயம். தமிழர்களின் தன்னாட்சித் திட்டத்தைச் செயற்படுத்த இந்தியா உதவவேண்டும் என்பதே அங்குள்ள தமிழர்களின் ஆசை. அதேசமயம் புலிகளைப் புறக்கணித்துவிட்டு இத்தகைய பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் பிரயோசனம் ஒன்றும் இல்லை. ஏனென்றால், இன்று புலிகள் மட்டும்தான் ஈழத்தமிழ் மக்களிடம் ஆதரவு பெற்ற ஒரே அமைப்பாக இருக்கிறார்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

லத்தீன் அமெரிக்கப் புரட்சியாளன் சேகுவேரா சொன்னான், 'நாம் எதார்த்தமானவர்கள். அதனால் அசாத்தியங்களைக் கனவு காண்கிறோம்!'

இதுதான் புலிகளின் நிலையுங்கூட. ஏனென்றால், ஈழத்தில் ஒரு தனி அரசையே அவர்கள் மூன்றில் ஒரு பங்கு நிலத்தில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்!

### 'பாகிஸ்தானுடன் சேராதே...'

இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் ஷியாம் சரண், சமீபத்தில் இலங்கை சென்று அந்நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துவிட்டு வந்துள்ளார். 'இலங்கை அரசை விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு இணங்க வைத்து, அதிகாரப் பகிர்வின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்' என்ற இந்தியப் பிரதமரின் திட்டத்தைத்

[14ஆம் பக்கம் பார்க்க]

# ஐயா! பொதுசனமே!!..... காத்திருப்பீர்!!!

''போ! போ பிள்ளை!! இஞ்ச நிண்டு முழிச்சு என்ன பிரியோசனம்? போய் எங்கையாவது தேடிப் பார்!''

சுமார் 55 வயது மதிக்கத்தக்க பெரியவர், ஓர் இளம் பெண்ணைப் பார்த்து இப்படி, திட்டும் அல்ல அன்புமல்ல என்ற ரீதியில் சொல்லிக்கொண்டிருந்தார்.

அந்தப் பெண்ணுக்கு 25 வயதுக்குமேல் மதிக்க முடியாது. ஏக்கத்துடன் நகரில் உள்ள அரச அலுவலக வாயிலில் நின்றுகொண்டிருந்தார். அவர் மீதான பரிதாபம் மனதைத் தைக்க நெருங்கி விசாரித்தோம்.

தான் ஏற்கனவே அந்த அலுவலகத்தில் கொடுத்த விண்ணப்பம் ஒன்றைத் தற்போது காணவில்லை என்றார். தான் அப்படி ஒரு விண்ணப்பத்தையே தரவில்லை என்று அதிகாரிகள் இப்போது சாதிக்கிறார்கள் என வருத்தப்பட்டார்.

விண்ணப்பத்தைக் கையளித்தமைக்கான ஆதாரம் எதுவும் இல்லாமையால் மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாத தனது கையறு நிலைமையை எண்ணிப் பச்சாத்தாதப்பட்டார்.

வடக்கு - கிழக்கு எங்கும் இருக்கும் அரச அலுவலகங்களில் இப்படி எத்தனை நிகழ்வுகள் நாளாந்தம் நடக்கின்றன?

ஏன் இந்த நிலை?

தமிழ் மக்கள் அரச திணைக்களங்களுடன் தொடர்புகளைப் பேணுவதில் கடந்த பல வருடங்களாகப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். இதில் ஒன்று, அரச திணைக்களங்கள், அலுவலகங்களில் பொதுமக்களால் நேரில் சமர்ப்பிக்கப்படும் கடிதங்கள், ஆவணங்கள், முறைப்பாடுகள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தும் எந்தவொரு பதில் கடிதமும் வழங்கப்படுவதில்லை என்ற பிரச்சினை.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இருந்தே பொதுமக்களின் கடிதங்களை ஏற்றுக்கொண்டமைக்கு ஆதாரமாக பதில் கடிதம் வழங்கும் இந்த நடைமுறை தொடர்ந்து வந்தது. ஆனால் மிக அண்மைய தசாப்தங்களில் அது மெல்ல மெல்ல மறைந்து போயிற்று. தற்போது உள்ளூர் அரச திணைக்களங்கள், அலுவலகங்களில் இதுமுற்று முழுதாகக் கைவிடப்பட்டுவிட்டது. ஆனாலும், அமைச்சு மட்டங்களில் இந்த நடைமுறை ஓரளவுக்காவது பின்பற்றப்படுகின்றது.

உண்மையில் இந்த நடைமுறை அவசியமானது தானா? இது கைவிடப்படுவ்தனால் ஏதாவது பாதிப்பு ஏற்படுகின்றதா?

அலுவலகத்தில் ஓர் ஆவணத்தை ஒப்படைத்த பின்னர் அது காணாமற்போனால் எந்த அலுவலரும் பொறுப்பேற்க மாட்டார். அப்போது மேற்குறித்த இளம் பெண்ணின் கையறு நிலையிலேயே அனைவரும் நிற்கவேண்டி ஏற்படும். அதே சமயம், அதிகாரிகளும் தமது கடமைகளை இலகுவாகப், பொறுப்புணர்வின்றித் தட்டிக்கழிக்க சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின்படி ஓர் அலுவலகம் ஒன்றுக்குக் கிடைக்கும் கடிதம் அல்லது முறைப்பாடு குறித்து மூன்று நாள்களுக்குள் குறித்த நபருக்கு, பொறுப்பான அலுவலர் பதில் அனுப்பிவைக்கவேண்டும். நடவடிக்கை தாமதிக்கும் பட்சத்தில், இடைக்காலப் பதில் ஒன்று அனுப்பப்படவேண்டும். ஆகக்குறைந்தது ஒருவர் தான் சமர்ப்பிக்கும் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றைத் தம்முடன் எடுத்துச் சென்றால் ,அதில் குறித்த விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதற்கான உறுதிப்படுத்தலை பொறுப்பான அலுவலர் மேற்கொள்ளமுடியும்.

பல நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் முறைப்பாடுகளுடன் அல்லாடும் திணைக்களங்களுக்கு ஒரு நபரின் விண்ணப்பம் சாதாரணமானதுதான்! ஆனால், அந்த நபருக்கோ அது வாழ்க்கைப் பிரச்சினை.

அதிகாரிகள் இதனைப் புரிந்துகொள்வார்களா?

அரசாங்க சேவை என்பது மக்களுக்கான சேவை. மக்களை கஷ்டங்களுக்கு ஆளாக்கி அவர்களை அல்லாட வைப்பதற்காகத் தங்களுக்கு மக்கள் வரிப்பணத்திலிருந்து சம்பளம் வழங்கப்படவில்லை என்பதை அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது மனதைத் தொட்டுக்கேட்டுப் பணிபுரியும் காலம் இனி எப்போது வரும்......?

ஐயா!, பொதுசனமே! நீவீர் மனச்சாட்சி காத்திருக்க வேண்டியது தான்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு : 12-04-1923 உதிர்வு: 16-06-2006

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் அங்கத்தவர்

**அமரர் சுப்பையாராஜா சதானந்தன் ஐயா**

(ஒய்வுபெற்ற தொழில் திணைக்கள/
விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்)
அவர்களின் 31ஆம் நாளினை நினைவுகூருகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சங்குவேலி அ.த.க.பாடசாலை.

(52280)
(26.19.14)



## ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை
55, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி நிறுவனத்திற்கு காப்புறுதி முகவர்கள் வெற்றிடம் நிரப்புவதற்கு ஆண், பெண் இரு சாராரும் விண்ணப்பிக்கலாம்.

**தகைமை:-**

I) G.C.E. சாதாரணப் பரீட்சை 6 பாடங்கள் சித்தி கணித பாடம் முக்கியம்.
II) வயது எல்லை 20 முதல் 50 வரை
III) வேறு காப்புறுதி முகவர்கள் தவிர்ந்த அனைவரும், அரசதிணைக்களங்களில் உள்ளவர்களும் பகுதி நேரமாக இணைந்து கொள்ளலாம்.

**நேர்காணலின்போது சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்**

I) G.C.E. பரீட்சை சித்தி எய்திய பெறுபேற்றுச் சான்றிதழ்
II) பிறப்பு அத்தாடசிப் பத்திர சான்றிதழ்
III) அடையாள அட்டைப் பிரதி
IV) 2 நற்சான்றிதழ் பத்திரம்
V) கிராம சேவையாளர் நற்சான்றிதழ் பத்திரம்
VI) இரண்டு போட்டோ பிரதிகள் (கடவுச்சீட்டு போட்டோ பிரதி அளவு)

நேர்காணலிற்கு 20-07-2006, 21-07-2006, 24-07-2006 ஆம் திகதிகளில் நேரில் சமுகம் தரலாம்.

**ஆயுட்காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை**

(சி/50229) (26.19.14)


## அறநெறிப்பாடசாலை ஆண்டுவிழா

நீர்வேலி,ஜூலை16

நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலையின் இரண்டாம் ஆண்டு விழாவும், பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.பகல் ஒரு மணிக்கு புதிய திருமுருகன் மணிமண்டபத்தில் அறநெறிப் பாடசாலைத் தலைவர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் இ.குணநாதனும், சிறப்பு விருந்தினராக புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி ஆசிரியர் ச.லலீசனும் கலந்துகொள்வர். (1-72)

## பொதுசன உதவிப்பணம்

நவாலி,ஜூலை16

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் காசநோய், தொழுநோய் ஆகியவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களுக்கும் ஜூன் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் அந்தந்தப் பகுதித் தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் கொடுப்பனவை உடன் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (100)

## பாடசாலை மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகள்

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர்களுக்கிடையிலான பாடசாலை மட்ட தமிழ்த்திறன் போட்டிகளை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் நடத்துமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். கோட்டமட்ட, வலயமட்டப் போட்டிகளை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் பாடசாலை மட்டப்போட்டிகளில் தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் விவரங்களைப் பாடசாலை மட்டப் போட்டிகள் முடிந்தவுடன் அனுப்பிவைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (117)


8 வது புதிய பிரிவு...

**ஒரு வார கால முழுநேர Computer Hardware இலவச கற்கைநெறி**

உங்களுக்காக 100% செய்முறைப் பயிற்சியினுடனான ஒரு வார குறுகிய கால Hardware கற்கைநெறி ஆரம்பமாகின்றது.

**ஆரம்பம்: 17.07.2006 காலை 9.00 மணி**

- Assembling
- Upgrading
- Troubleshooting
- Repairing
- Software Installation

அனுமதிக் கட்டணம் மட்டும்!

இவற்றுடன் மேலும் பல புதிய தொழில்நுட்பங்களுடன் கூடியதாக இக்கற்கைநெறி அமைகின்றது.

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வு கூடத்தில் அதிநவீன P4 கணினிகளில் செய்முறைகள் வழங்கப்படும்.

இக்கற்கைநெறி முடிவில் 100% பூரணமான அறிவினைப் பெற்றுக்கொள்ளும் உத்தரவாதம்!

இதில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு எமது நிறுவனத்திலேயே தொழில்சார் வசதிகள் வழங்கப்படும்.

**CICS Computer Technologies**
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

CICS யாழ். நகரில் Computer Hardware பயிற்சிக்கான தனித்துவம் வாய்ந்த ஒரு நிறுவனமாகும்.

**பதிவுகளுக்கு முந்துங்கள்!**



**கலாலயா பயிற்சியகம்**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித ஒருமாத / 3மாத பயிற்சிகள்

- கேக் ஐஸிங் * கூந்தல் அலங்காரம் * உணவு தயாரித்தல் * FABRIC PAINTING
- பூ வேலை * கைவேலை * FACIAL * சாறி பிளவுஸ், சல்வார், பஞ்சாபி தைத்தல்
- புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான தையல் வகுப்புகள்

இடைநிறுத்தப்பட்டிருந்த புதிய கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளுக்கான அனுமதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றன. புதிதாகச் சேர விரும்பும் மாணவிகள் தொடர்புகொள்ளவும்.

மேலும் விவரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பிற்பகல் 2 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

- பதிவாளர்.

(சி/50181) (24-19-14)



# நீர்வேலி கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில்...
# திருமுருகன்

* திருமண மண்டபம்
* பல்பொருள் அங்காடி



### திருமண மண்டபம்

சகல வசதிகளும் கொண்டது. விரும்பிய உணவு, சிற்றுண்டிகள், பானங்கள் வழங்கும் சேவையுடன் கூடியது. விசாலமானது.

### பல்பொருள் அங்காடி

- புடைவை வாணிபம்
- அன்பளிப்புப் பொருள்கள்
- அபிஷேகத் திரவியங்கள்
- ஐஸ்கிறீம் வகைகள்
- வீடியோ, போட்டோ
- ACD, VCD, $MP_3$,DVD வகைகள்
- காலணி வாணிபம்
- அழகுசாதனப் பொருள்கள்
- மருந்து வகைகள்
- போட்டோ கொப்பி, லமினேஷன்
- வீடியோ எடிற்றிங் மிக்சிங்

**யாவும் ஒரே கூரையின் கீழ்**
**யாழ். நகர விலைக்கே பெற்றுக்கொள்ளலாம்.**

**ஆரம்பம்: 16-07-2006 ஞாயிற்றுக்கிழமை**

- வீடுகளில் இடம்பெறும் திருமண வைபவங்களுக்கான பந்தல் சேவை, மங்கலப் பொருள்கள் வழங்கும் சேவை தொடர்ந்து இடம்பெறுகிறது.
- திருமண மண்டபம் தொடர்பாகத் தங்களுக்கு விருப்பமான சேவைகளைத் தனியாகவோ, கூட்டாகவோ [illegible] பெற்றுக்கொள்ளலாம்.
- பதிவுகளை இன்று முதல் மேற்கொள்ளலாம்.

**திருமுருகன் செட்டியார்**
தொ.பே.இல.: 021 4591455
கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி,
நீர்வேலி.

(52202) (24.19.14.26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜிடேனின் மூர்க்கத்தனம்:

# பிரான்ஸுக்கு ஏமாற்றம்! இத்தாலிக்கு மகிழ்ச்சி!!



வெற்றிக் களிப்பில் கன்னவரோ



ஜிடேனுக்கு 'ரெட் காட்'

இத்தாலியில் கால்பந்து வரலாற்றில் அது பொன்னான நாள். கடந்த 9ஆம் திகதி ஜேர்மனியில் பேர்லின் நகரில் இடம்பெற்ற 18ஆவது உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இத்தாலி அணி 'சமநிலை உடைப்பு உதை' மூலம் பிரான்ஸ் அணியை 5-3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இதன் மூலம் உலகக் கிண்ணத்தை நான்காவது முறையாக இத்தாலி தட்டிச் சென்றது.

ஆட்டத்தின் கடைசி நேரத்தில் பிரான்ஸ் அணித் தலைவர் ஜிடேன் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டமை அந்த அணிக்குப் பேரிடியாக அமைந்தது. இவர் இல்லாததால் சமநிலை உடைப்பு உதையில் கோட்டை விட்ட பிரான்ஸ் அணியினால் இரண்டாம் இடத்தையே பெறமுடிந்தது. கிண்ணத்தை வெல்லும் என்ற எதிர்பார்ப்புக்குள்ளாகியிருந்த பிரான்ஸ் அணி தோல்வியடைந்தமை உலக நாடுகளில் உள்ள கால்பந்தாட்ட ரசிகர்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

வரலாற்றில் இரண்டாவது தடவையாக உலகக் கிண்ண கால்பந்து இறுதியாட்டம் சமநிலை உடைப்பு உதை மூலம் முடிவுக்கு வந்தது. இதே போன்று 1994 இல் பிறேசில் இத்தாலி அணியை வென்றது.

ஜேர்மனியில் இம்முறை 18 ஆவது உலகக் கிண்ணப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. ஒரு மாத காலம் நடைபெற்ற இந்தத் தொடரில் உலகின் தலை சிறந்த 32 அணிகள் கலந்துகொண்டன.

பலராலும் அதிகமாக எதிர்பார்க்கப்பட்ட பிறேசில், ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா, இங்கிலாந்து அணிகள் வெளியேறிவிட இறுதியாட்டத்திற்கு பிரான்ஸ் - இத்தாலி அணிகள் தகுதி பெற்றன.

மூன்று முறை உலகக் கிண்ணம் பெற்ற இத்தாலி துணிச்சலுடன் களமிறங்கியது. மறுபுறத்தில் அணித் தலைவர் ஜிடேனின் மந்திரத்தை நம்பிப் பிரான்ஸும் களம் புகுந்தது. ஆட்டம் ஆரம்பமானது முதல் இரு அணிகளும் அனல் பறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. ஆட்டம் தொடங்கி ஏழாவது நிமிடத்தில் இத்தாலிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. பிரான்ஸ் வீரர் மலூடாவை பெனால்டி பகுதியில் வைத்து முரட்டுத்தனமாக மடக்கிய குற்றத்துக்காக பிரான்ஸ் அணிக்கு பெனால்டி வழங்கப்பட்டதும் பிரான்ஸ் அணியின் பெனால்டி நிபுணர் என வர்ணிக்கப்படும் அணித் தலைவர் ஜிடேன் பெனால்டி உதையை உதைத்து ஒரு கோலைப் போட்டார். ஆடிப் போனார்கள் இத்தாலி வீரர்கள். பிரான்ஸ் 1-0 என்ற முன்னிலை பெற்றது.

இதற்குப் பின் இத்தாலி அதிரடியாக ஆடியது. அவ் அணிக்கு கிடைத்த மூலை உதை வாய்ப்பை டில்ஸா அடித்தார். அதனை அப்படியே தலையால் முட்டிப் பிரான்ஸின் கோல் கம்பத்துக்குள் செலுத்தினார் இத்தாலியின் மாட்டராசி. இப்போது ஆட்டம் சமநிலை பெற்றது. இரு அணிகளும் கோல் போடப் பெரும் போராட்டமே நடத்தின. ஆயினும் முடியவில்லை. ஆட்ட நேரம் முடிவுற்றதால் ஆட்டம் மேலதிக நேரத்துக்குச் சென்றது.

### பிரான்ஸுக்குப் பேரிடி

110 ஆவது நிமிடத்தில் பிரான்ஸுக்குப் பேரிடி விழுந்தது. களத்தில் ஜிடேன், இத்தாலியின் மாட்டராசி இருவரும் ஏதோ பேசிக்கொண்டே வந்தனர். அப்போது கோபம் தலைக்கேற ஜிடேன் தனது தலையால் மாட்டராசியின் நெஞ்சுப் பகுதியைப் பலமாகத் தாக்கினார். இதனால் அப்படியே சுருண்டு வீழ்ந்தார் மாட்டராசி. இதைப் பார்த்த நடுவர் ஜிடேனுக்குச் சிவப்பு அட்டை காண்பித்து வெளியேற்றினார். இதனால் இடிந்து போனது பிரான்ஸ் அணி.

மேலதிக நேரத்திலும் கோல் எதுவும் போடாமையால் ஆட்டம் சமநிலை உடைப்பு உதைக்குச் சென்றது. இதில் இத்தாலி 5-3 என்ற கோல் கணக்கில் பிரான்ஸை வீழ்த்திக் கிண்ணத்தை வென்றது.

அணித் தலைவர் ஜிடேனின் முரட்டுத் தனம் பிரான்ஸின் உலகக் கிண்ணக் கனவைத் தகர்த்தெறிந்தது.

### யாரைப் பழித்தார் மாட்டராசி?

ஆட்டத்தின் போது பிரான்ஸ் அணித் தலைவர் ஜிடேனுக்கும் இத்தாலியின் மாட்டராசிக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் கோபமடைந்த ஜிடேன் மாட்டராசியை நெஞ்சுப் பகுதியில் பலமாகத் தன் தலையால் தாக்கினார். பொதுவாகவே எதையும் பெரிதாக எடுத்துக் கொள்ளாதவர் ஜிடேன். அப்படிப்பட்ட இயல்பைக் கொண்டவர் இவ்வாறு முரட்டுத் தனமாக நடந்து கொள்ளக் காரணம் என்ன? ஜிடேன் அப்படிக் கோபமடைய மாட்டராசி என்ன கூறினார்? அதுதான் தெரியவில்லை. ஆனாலும் மாட்டராசி கூறிய வார்த்தைகள் குறித்துப் பல்வேறு செய்திகள் வெளியாகியுள்ளன. ஜிடேனை ஒரு தீவிரவாதி என்றும், அவரது தாயைப் பழித்தார் என்றும் கூறப்படுகின்றது. உதட்டு அசைவு நிபுணர்களின் ஆய்வில் ஜிடேனின் சகோதரியைத் தான் மாட்டராசி தவறாகப் பேசினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனை மறுத்த மாட்டராசி தான் ஒருபோதும் தாய், சகோதரியைப் பழித்துப் பேசவில்லை என்றார். அதே நேரத்தில் ஜிடேனை திட்டியது உண்மைதான் என ஒப்புக்கொண்டார். வீரர்கள் களத்தில் வழக்கமாக சொல்லும் வார்த்தைகளில் திட்டியதாக விளக்கம் அளித்தார்.

தற்போது ஜிடேனின் மனைவியைத் தகாத வார்த்தைகளில் மாட்டராசி பேசியுள்ளார் என்ற விவரம் தெரியவந்துள்ளது. இதுபற்றி மாட்டராசியின் முகவர் பில் ஸ்மித், சிட்னியில் இருந்து வெளியாகும் 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது:-

வாக்குவாதத்தின்போது ஆத்திரப்பட்ட மாட்டராசி, ஜிடேனுடைய மார்புப்பகுதியைக் கிள்ளி, சட்டையைப் பிடித்து இழுத்துத் தள்ளியுள்ளார். உடனே ஜிடேன், ''சட்டை வேண்டுமானால், ஆட்டம் முடிந்ததும் தருகிறேன்'' என்று வெறுப்பாகக் கூறியுள்ளார். இதற்குப் பதிலடி கொடுத்த மாட்டராஸி, ''உன் சட்டை வேண்டாம்... உன் மனைவியின் சட்டையை வேண்டுமானால் கொடு'' என்று கூறியிருக்கிறார். தனது மனைவி வெரோனிக்கைப் பற்றிக் குறிப்பிட்டதும் சூடாகிப் போன ஜிடேன், அதிரடியாக மாட்டராசியின் நெஞ்சில் முட்டித் தள்ளி இருக்கிறார். இவ்வாறு பில் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

### பறிக்கப்படுமா தங்கப் பந்து?

ஜிடேனின் தங்கப் பந்து விருது பறிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது பற்றி சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் (பிபா) தலைவர் செப் பிளாட்டர் கூறியதாவது:-

தங்கப் பந்து விருதுக்கான வீரரை 'பிபா' தேர்வு செய்வது கிடையாது. பத்திரிகையாளர்கள்தான் தேர்வு செய்கிறார்கள். ஆனாலும், விளையாட்டு மரபுகள் மீறப்படும்போது, அதில் தலையிடும் உரிமை 'பிபா' செயற்குழுவுக்கு உண்டு. ஜிடேன் செயல் மிகுந்தகவலை அளிக்கிறது. எந்த ஒரு பதக்கம் பெறுவதற்கும் அவருக்குத் தகுதிகிடையாது.



இத்தாலிப் பிரதமர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆகியோருடன் அணித் தலைவர்

இவரது நடத்தை தொடர்பான விசாரணையின் முடிவைப் பொறுத்தே எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படும் - இவ்வாறு பிளாட்டர் கூறினார்.

### மன்னிப்புக் கோரினார் ஜிடேன்

இந்நிலையில் பாரீஸ் தொலைக்காட்சிக்கு ஜிடேன் அளித்த பேட்டியில் தான் அவ்வாறு நடந்துகொண்டதற்கு அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த குழந்தைகளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் - என்றார். இந்த நிகழ்ச்சியை உலகம் முழுவதிலும் உள்ள இருநூறில் இருந்து முந்நூறு கோடி பேர் வரை பார்த்திருப்பார்கள் என்றும் குழந்தைகள் மட்டுமே லட்சக்கணக்கில் பார்த்திருப்பார்கள் என்பதால் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாக அவர் தெரிவித்தார். அப்போதும் அவர் மாட்டராசி சொன்ன வார்த்தையைச் சொல்லவில்லை. இது மிகவும் தனிப்பட்ட விடயம் என்றும் அது தன் அம்மா மற்றும் சகோதரியைப் பற்றியது என்றும் சொன்னார்.

### பயிற்சியாளர்கள் விலகல்

இத்தாலி அணிக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்த பயிற்சியாளர் மார்செலோ லிப்பி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

உலகக் கிண்ணக் கால்பந்து தொடர் முடிவடைந்ததைத் தொடர்ந்து பயிற்சியாளர்கள் விலகும் படலம் ஆரம்பித்துவிட்டது. இதற்கு இத்தாலி பயிற்சியாளர் லிப்பியும் விதிவிலக்கல்ல. அவரும் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில், ''பயிற்சியாளராக இருந்து சாதிக்கவேண்டியதை அடைந்துவிட்டேன். இது எனக்கு போதும். என் மீது நம்பிக்கை வைத்த கால்பந்துக் கூட்டமைப்புக்கும் நாட்டு மக்களுக்கும் நன்றி'' இவ்வாறு அவர் தெரிவித்தார். இவர் கடந்த 2004 யூரோ தொடருக்குப் பின் இத்தாலி பயிற்சியாளராகப் பொறுப்பை ஏற்றார். இதற்கு முன்னர் யுவன்டஸ் அணியின் பயிற்சியாளராகச் செயற்பட்டு வந்தார். அடுத்த பயிற்சியாளராக நியமிக்கப்படுவதற்கு [illegible], கியான் லுகா வயலி மற்றும் அல்பர்டோ ஜாக்கருனி ஆகியோரிடையே கடும்போட்டி நிலவுகிறது.

உலகக் கிண்ணத் தொடரில் மூன்றாம் இடம்பிடித்த ஜேர்மனி அணி பயிற்சியாளர் கிளின்ஸ்மெனும் பதவியிலிருந்து விலகியுள்ளார். ஜேர்மனி கால்பந்துக் கூட்டமைப்புடன் இவரது ஒப்பந்தம் உலகக் கிண்ணத்துடன் முடிந்ததைத் தொடர்ந்து அவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யக்கூடும் எனப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. மேலும் அவர் அந்நாட்டு கால்பந்து கூட்டமைப்பின் துணைத் தலைவர் தியோ ஸ்வான் செய்கர் மற்றும் மனோஜர் ஆலிவர் பெயர்ஹாபை இருவரையும் சந்தித்தார். இதைத் தொடர்ந்து பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். உதவிப் பயிற்சியாளராக செயற்பட்டு வந்த ஜூவாசிம் லோவிற்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது.

கிளின்ஸ்மென் பதவியேற்ற பின் இளம் வீரர்களுக்கு அதிக வாய்ப்பளித்ததோடு, முன்னாள் வீரர்களை ஒன்று சேர்த்து பயிற்சிகள்அளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜேர்மனிக்குப் பெருமை

உலகக் கிண்ணம் என்னும் மாபெரும் பணியை ஜேர்மனி மிகப் சிறப்பாக நிறைவேற்றிவிட்டது. ஒவ்வொரு அரங்கத்தையும் பிரமாண்டமாக அமைத்து, காண்போரைப் பிரமிக்க வைத்தது. எதிரணி ரசிகர்களிடமும் ஜேர்மனி மக்கள் மரியாதையுடன் பழகிய விதம் அருமை. எந்த ஓர் அசம்பாவிதமும் நடக்காமல் தொடர் முழுவதிலும் சிறப்பாக நடந்ததற்கு முக்கிய காரணம் ஜேர்மனி பொலீஸார். ஒரு குறையுமின்றி 2006 உலகக் கிண்ணக் கால்பந்து தொடரிர் ரசிகர்களிடமிருந்து இனிதே விடை பெற்றுக்கொண்டது.

உலகக் கிண்ணத் தொடரில் இம்முறையும் ஐரோப்பிய அணிகளின் ஆதிக்கமே அதிகம் இருந்தது. சொந்த மண்ணில் விளையாடிய ஜேர்மனியின் ஆட்டம் அற்புதம். கோப்பையை வெல்லாவிட்டாலும் மூன்றாம் இடம்பெற்றது.

இந்த அணியின் பயிற்சியாளர் கிளின்ஸ்மேன் பாராட்டுக்குரியவர். போர்த்துகல் அணி இம்முறை புதிய அவதாரம் எடுத்தது. இளம் வீரர்கள் கூட்டணியில் அமர்களப்படுத்தியது. கிறிஸ்டியானோ றொனால்டோ, பாலோட்டா, அணித் தலைவர் பிகோ ஆகியோரின் ஆட்டம் நன்றாக இருந்தது.

ஆர்ஜென்ரீனா அணியின் ஆட்டமும் அருமையாக இருந்தது. காலிறுதியில் ஜேர்மனியிடம் தோற்ற போதிலும் ஆர்ஜென்ரீனா வீரர்கள் மீது குறை கூறிவிட முடியாது. டிவேஸ், ரோட்ரிக்ஸ், ரிக்கிளம், மெஸ்சி ஆகியோரின் துடிப்பான ஆட்டம் ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது. இந்த அணிக்கு நிச்சயம் அபாரமான எதிர்காலம் உண்டு. இம்முறை அதிகம் எதிர்பார்க்கப்பட்ட அணிகளில் செக் குடியரசும் ஒன்று. ஆனால் இந்த அணி சாதிக்கத் தவறியது. முதல் சுற்றிலேயே வெளியேறியது பரிதாபம்.

### அதிரன்

லீக் சுற்றைப் பொறுத்த வரையில், உக்ரைன், கானா, ஈக்குவடோர் அணிகள் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தின. கத்துக் குட்டிகள் என சாதாரணமாக எண்ணியிருந்த இந்த அணிகள் விஸ்வரூபம் எடுத்துவிட்டன. கானா, ஈக்குவடோர் அணிகள் இரண்டாம் சுற்று வரையிலும், உக்ரைன் காலிறுதி வரையிலும் முன்னேறி அசத்தியது.

ஸ்பெயின், இங்கிலாந்து அணிகள் வழக்கம்போல் சிறப்பான நிலையில் இருந்தும் வெற்றி பெறத் தவறிவிட்டன. லீக் சுற்றில் கலக்கிய ஸ்பெயின், இரண்டாம் சுற்றில் பிரான்ஸிடம் எளிதில் தோல்வியைத் தழுவியது ஆச்சரியம் தான். இங்கிலாந்து அணிக்கோ பெனால்டி உதை யமனாக அமைந்தது.

இம்முறை பிரான்ஸ் அணி இறுதிப்போட்டி வரை முன்னேறும் என்பது யாருமே எதிர்பார்க்காத ஒன்று. லீக் சுற்றில் முதல் போட்டியில் சுவிட்சர்லாந்து அணியிடமே திணறிய இந்த அணி அடுத்தடுத்து திடீர் முன்னேற்றம் கண்டது. ஸ்பெயின், பிரேசில், போர்த்துக்கல் என அடுத்தடுத்து மகத்தான வெற்றிகளை குவித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இதற்கு முழுக் காரணம் அணிதலைவர் ஜிடேன் தான் தனது சாதுரியமான ஆட்டத்தால் அணியை இறுதிவரை அழைத்து வந்தார். ஆனால் இத்தாலிக்கு எதிரான இறுதிப் போட்டியில் அணியின் தோல்விக்கு இவரே காரணமானது பரிதாபம்.

போட்டியின் கூடுதல் நேரத்தில் இவர், மாட்டராஸியை தலையால் முட்டியதால் இவரே சிவப்பு அட்டை பெற்று வெளியேறினார். இவருடன் பிரான்ஸின் வெற்றியும் சேர்ந்து வெளியேறியது. ஒருவேளை ஜிடேன் இருந்திருந்தால் பிரான்ஸ் கிண்ணம் வெல்லவும் வாய்ப்புண்டு. உலகக் கிண்ணம் வென்ற இத்தாலி அணிக்கு சாம்பியனுக்கு தேவையான அனைத்து அம்சங்களும் இருக்கிற முன்களம், மத்தியகளம், தற்காப்பு பகுதி என அனைத்திலும் நட்சத்திர வீரர்கள் உச்சகட்ட நிலையில் இருந்தனர். இவர்கள் அடுத்த நான்காண்டுக்கும் உலக சாம்பியனாக வலம் வருவதற்கு தகுதியான வீரர் கள்தான்.

சிறந்த அதிரடி வீரராக ஜேர்மனியின் குளோஸைக் கூறலாம். ஐந்து கோல்கள் அடித்து அணியின் வெற்றிக்கு உதவிய இவர், தங்கக்காலணி விருது பெற நிச்சயம் தகுதியானவர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுனாமி' பாதித்தோருக்கு உதவ 'ராப்' அமைப்பு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கரையோர மக்களின் நலன்களைப் பேணுவதற்கு வடக்கு - கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி நிறுவனத்தினால் 'ராப்' என்ற அமைப்பு புதிதாக நிறுவப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இந்த அமைப்பு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் சேவாலங்கா நிறுவனம் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து கரையோர மக்களின் மீள் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும்.

இதன் முதற்கட்டமாக வடமராட்சி வடக்கிலும், கிழக்கிலுமாக 32 கிராமங்கள் அடையாளப்படுத்தப்பட்டு 20 கிராமங்களுக்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'ராப்' நிறுவனம் கரையோர மக்களுக்கான உடனடித் தேவைகளையும் ஜீவனோபாயம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும்.

இனிவரும் காலங்களில் இந்நிறுவனத்தின் பணிகள் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அந்நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். (ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 09 - 11 - 1909 |  | 17 - 06 - 2006 |

### அமரர் ம.அ.சரவணமுத்து

எமது குடும்பத் தலைவரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (17.07.2006) திங்கட்கிழமை காலை 7 மணிக்கும் அதனைத் தொடர்ந்து சபிண்டீகரணக் கிரியைகள் முற்பகல் 10 மணிக்கும் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'குகவாசா'
வதிரி, கரவெட்டி. (52260) -குடும்பத்தினர்.

MINISTRY OF PUBLIC HEALTH OF RUSSIAN FEDERATION

## Kursk State Medical University

World - Class Education, Research Work and Health Care



- KSMU won the GOLD MEDAL as the BEST Medical University in Russia
- FIRST University in Russia to commence Medical Programs totally in English Medium
- Medicine (MD), Dentistry (DDS), Pharmacy (MSc.pharm)
- 14 Faculties, 28 affiliated hospitals with Research Laboratorie
- 56 Medical Specialities in postgraduate programs

Recognised by WHO, BMC, EU, Srilankan Medical Council ...etc.

புலமைப் பரிசில்களைப் பெறுவதற்கு விரைவில் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

A/L புள்ளி குறைந்த மாணவர்களுக்கு விசேட ஏற்பாடு

O/L மாணவர்களுக்கு பிரத்தியேக ஏற்பாடு



**Why Direct Admission?**

1. Oppertunities for Scholarships.
2. FREE Medical Insurance, Lab, Hospital, Library & Sport facilities.
3. No service or processing charges, No hidden charges.
4. Proper & professional guidance for Russian Visa
5. Flying in groups with the chancellor of KSMU or with senior students of KSMU.
6. Gurantee of students secure & responsible service untill finish your studies.

30.07.2006 BMICH இல் KSMU இன் துணைவேந்தர் Prof.A.I.Lazarer ஐ சந்திப்பதற்கான அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளுங்கள்

Contact:
Mr.M.Mylashan
Office of the sri lankan coordinator
Kursk state medical Univercity,
No. 2 Thiruvalluvar Lane, Arasady Rd,
Kantharmadam, Jaffna.
Mobile: 0777 250555
144/4, Sri Gnanendra Mawatha,
8th Lane, Nawala Juncation.
Tel: 011-2807686 Fax: 011-2806748 E-mail: ksmu@europe.com ksmu@sltnet.lk

Online Admission:
Kursk State Medical University
3, K. Marx Street, Kursk, Russia 305041
Tel/ Fax: 007-4712-562814
Web: www.ksmu.info

வியாபார நோக்க நிறுவனங்களினாலும் தனி நபர்களினாலும் ஏற்படுத்தப்படும் ஏமாற்றல்களையும், கட்டணக் குளறுபாடுகளையும் தவிர்க்கக் குர்ஸ்க் அரச மருத்துவ பல்கலைக் கழகத்தின், இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

## UNIT பிரத்தியேகப்படுத்துகின்றது

**Hardware** **Networking**

வேகப் பயிற்சி நெறி (பாடத்திட்டம் மாற்றமில்லாமல்)

Just Rs. 1000/- Only

Just Rs. 1500/- Only

வார நாட்களில்

Next Batch on 17.07.2006

இலவச பயிற்சிக் கோவை மற்றும் பல

மற்றவரிடமிருந்து வேறுபட்டு 100% செய்முறைப் பயிற்சிகளுடன்

For Complete Technology

UNIT Education
16/1, Killnar Lane,
K.K.S. Road, Jaffna.

பண்டிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் எதிர் ஒழுங்கை

Near Jaffna Hindu College
TP: 021-4590720 / 0773134737

Rush to Join Limited seats Only

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 01 - 04 - 1936 |  | 07 - 07 - 2004 |

### அமரர் வேலுப்பிள்ளை குமாரசாமி

ஆண்டுகள் இரண்டு ஆகிவிட்டதே
பப்பா நீங்கள் எம்மை விட்டுச்சென்று
நம்பமுடியவில்லை எம் அருகில் இருப்பதாய்
ஓர் உணர்வு!
அன்புடன் எமை அரவணைத்து
கண்டிப்புடன் கருணை உள்ளமும்
நல்ல பண்புகளுடன் பாசம் தந்து
இத் தரணியிலே எம்மை தலை நிமிர்ந்து
வாழ வைத்து ..... பாதியிலே
பரிதவிக்க வைத்துவிட்டு எங்கே சென்றீர்கள்
பப்பா நீங்கள் ஆசைப்பட்டபடியே நாம்
வாழ்வோம் இப்பூமியிலே
உங்கள் பெயர் வாழ
குமாரசாமியின் செல்வங்களாய்....

'உதய பவனம்'
கைதடி மேற்கு, கைதடி. (52256) -குடும்பத்தினர்.

## Trinity College and University USA

இனது கணினிப்பட்டதாரியாகும் அரிய வாய்ப்பு!!

O/L தகமையுடன் 1 தொடக்கம் 2 வருடங்களில் எமது நிறுவனத்தில் பயின்று

**B.Sc in Computer Science பட்டதாரியாகுங்கள்**

U.K Department of Education இனால் அங்கீகரிக்கப்பட்டது.

அலுவலர்களுக்கு சனி ஞாயிற்றுக்கிழமைகளில் விரிவுரைகள்.

எமது கற்கை நெறியினுள் அமையும் பாடநெறிகளை அங்கீகரிக்கப்பட்ட கணினி நிறுவனங்களில் பயின்ற சான்றிதழ்களைச் சமர்ப்பித்தால் உங்கள் கற்கை நெறியினை Semester 2 அல்லது Semester 3 இலிருந்து தொடரமுடியும்.

**O/L , A/L மாணவர்களுக்கான குறுகிய கால Online Diploma கற்கை நெறிகள் விசேட சலுகைக்கட்டணத்தில் ஆரம்பம்**

## NORTH LANKA

Institute of Information Technology
Main Street Chankanai
T.P:- 0214591647 or 0773583616 e-mail – northlanka[illegible]yahoo.com

## விமாகி டிரான்ஷ்போர்ட் டிவிஷன்

24 HOURS SERVICE

புத்தம் புதிய 40 அடி Trailer உடன் கூடிய லொறி வாடகைக்கு விடப்படும்.

இலங்கையின் சகல பாகங்களுக்கும் போக்குவரத்து சேவை

Prime Movers With 40 Feet Trailers




VEMAKE TRANSPORT SERVICE

U.S. Adv.

விமாகி டிரான்ஸ்போர்ட் டிவிஷன்
79 C ஜெம்பெட்டா லேன், கொழும்பு-13.
தொ. பே : 5344031 நவ்ஷோட் : 077 3289 849

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "கனடாவுக்கு வாருங்கள் அப்பா என்று மகள் வற்புறுத்துகிறார் ஆனால்; சொந்த மண்ணை விட்டுச் செல்ல இஷ்டமில்லை"

1934ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். மகாத்மா காந்தியடிகள் ஊர்காவற்றுறைக்கு வருகைதந்தார். அவரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்தின் அதிபராகவும், கிராம சபை உறுப்பினருமான இளையதம்பி மருதையினர் செய்தார். அவருடன் நானும், பரியாரி வைத்திய நாதர் சிதம்பரப்பிள்ளை, பரியாரி கறுவல், மூப்பர் என அழைக்கப்படும் வர்த்தகர் ஒருவர் ஆகியோர் உரிய ஒழுங்குகளைக் கவனித்துக்கொண்டோம்.

காந்தியடிகளை நாங்கள் வரவேற்றது

## நூறு வயதைக் கடந்த வேலணை முதியவர் சொல்கிறார்

எனது வாழ்வில் மறக்கமுடியாத ஒன்றாகும். ஊர்காவற்றுறை துறைமுகத்திற்குச் சமீபமாக நீதிமன்றம் இருந்த இடத்தில்தான் அந்த வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. "இந்தியாவுக்கு சுயராச்சியம் வந்தால் இலங்கைக்கும் கிடைக்கும்" என மகாத்மா காந்தியடிகள் கூறியது இன்றும் எனது நினைவில் நிற்கிறது.

கடந்த வாரம் தனது நூறாவது பிறந்ததினத்தைக் கொண்டாடிய வேலணை மேற்கு செல்லமுத்து வீரகத்திப் பிள்ளையிடம் நூறு வருடங்களைக் கடந்து நிற்கும் உங்கள் வாழ்வில் நீங்கள் மறக்கமுடியாது என்று கருதும் முக்கிய சம்பவங்கள் இருக்கிறதா என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முதியவர் வீரகத்திப்பிள்ளையிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு உற்சாகத்துடன் அவர் பதிலளித்தார்.

*கேள்வி:* நூறு வருடங்களைத் தாண்டிய இறுமாப்புத் தெரிகிறது. ரொம்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் போலும்?

பதில்:- ஆம்... நூறு வருடங்கள் வாழ்ந்தேன் என்கின்றபோது ஒரு சந்தோஷம் மனதில் இருக்கத்தான் செய்கிறது.

*கேள்வி:-* இப்போது கூட நீங்கள் தளர்வின்றி நடமாடுகிறீர்கள். திடகாத்திரமுள்ள ஒருவர் போல் தென்படுகிறீர்கள் அந்த ரகசியத்தைக் கூறலாம்தானே?

*பதில்:-* அது ஒன்றும் பெரிய ரகசியமல்ல. கிராமத்து உணவு முறை, எங்களது உழைப்பு அதுதான் நாங்களே நம்மைப் பாதுகாக்க உதவியது. எனது தந்தையார் ஒடியல், குரக்கன் என்று சின்னவயதில் இருந்தே எமது கிராமத்தில் கிடைக்கக்கூடிய உணவு பழக்கங்களையும், தனது விவசாயத் தொழிலில் எமக்கு அக்கறையையும் தந்திருந்தார். அதுதான் இன்று எனக்கு உதவுகிறது.

*கேள்வி:* ஒருகட்டுக்கோப்பான வளர்ப்பு என்பதால் நோய், மருந்துகள் என்று ஆஸ்பத்திரிகளை நாடியிருக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

*பதில்:* 70 வயதில் வாதத்திற்கும் பின்னர் கண்ணிற்கும் மருந்துகள் இரண்டொரு மாதம் எடுத்திருக்கிறேன். அதுதவிர வேறு நோய்கள் என்று இதுவரை எந்த மருந்துமே உட்கொள்ளவேண்டியேற்படவில்லை.

*கேள்வி:* 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்கிறார்கள். உங்களைப் பொறுத்தவரை குறைவற்ற செல்வத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள் உங்களைப்போன்று நூறு வருடங்கள் வரை வாழ்ந்து கொண்டவர்கள் யாரையாவது சந்தித்ததுண்டா?

*பதில்:* இங்கே புளியங்கூடலில் ஒருவர் மிகவும் நெருக்கமாக நூறுவருடங்களை அண்மித்துக்கொண்டிருக்கிறார். அவரைத் தவிர நான் எனது விவசாய வேலைகளுக்கென நெடுந்தீவுக்கு மாடுகள் வாங்க செல்வதுண்டு. அப்போதெல்லாம் நூறு, நூற்றிஇருபது வருடங்கள் வாழ்வதாகச் சொல்லும் இரண்டொருவரைச் சந்தித்திருக்கிறேன். வீரகத்தி வேலுப்பிள்ளை என்று ஒருவர் இருக்கிறார் புளியங்கூடலில்.

*கேள்வி:* சரி, உங்கள் சிறிய வயது பாடசாலை வாழ்க்கை பற்றி ஏதாவது கூற முடியுமா?

*பதில்:* நான் 12 வயதில் வியாபாரம் பழகும் பொருட்டு கடையில் சேர்ந்துவிட்டேன். காலி, ஹிந்தோட்ட, ஹிக்கடுவ, அம்பாலாங்கொடை ஆகிய இடங்களில் 10 வருடங்கள் தொழில் செய்து அதன் பின்னர் ஹிந்தோட்டவில் சொந்தமாக ஒரு கடையை நடத்திவந்தேன். திருமணத்தின் பின். எனது சொந்தக் கிராமத்திற்கு வந்து நிரந்தரமாக விவசாயத் தொழிலிலே ஈடுபட்டுவிட்டேன்.

### மகாத்மா காந்தியை சந்தித்தது மகிழ்வைத் தருகிறது

*கேள்வி:* காந்தியடிகளை வரவேற்பதில் பங்களித்திருக்கிறீர்கள். நாடாளுமன்ற தேர்தல்களில் ஜி.ஜி. பொன்னம்பலம் பின்னர் பண்டிதர் கா.பொ.இரத்தினம் ஆகியோருக்கு ஆதரவாக நின்றிருக்கிறீர்கள். வேலணை கிராம சபைத் தேர்தலிலும் மருதையினர் அவர்களின் வெற்றிக்குப் பாடுபட்டிருக்கிறீர்கள் அப்படியானால் அரசியலில் உங்களுக்கு தீவிர ஈடுபாடு இருந்ததா?

## கட்டுக்கோப்பான வளர்ப்பு முறையால் வைத்தியசாலை வாசலை நாடவில்லை

*பதில்:* அரசியலில் எனக்கு எந்த ஈடுபாடும் கிடையாது. அவ்வப்போது அவர்கள் சொன்ன கருத்துக்கள் நியாயமாக என் மனதில் பட்டது. அவ்வளவுதான்.



கிராமசபைத் தேர்தலைப் பொறுத்தவரை மருதையினர் எனது நண்பர்.

*கேள்வி:* வியாபாரத்திலும் பின்னர் விவசாயத்திலும் உங்களது முழுக் கவனத்தையும் செலுத்தி வந்துள்ளீர்கள் அதே போன்று சமூகப்பணிகளில் எந்த அளவுக்கு பங்களிப்புச் செய்திருக்கிறீர்கள்?

*பதில்:* வேலணை, புங்குடுதீவு பாலம் போடுவதற்கு முன்னர் இரண்டு கரைகளிலும் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு வீதி அமைக்க புங்குதீவு அம்பலவாணர் சகோதரர்கள் முயற்சியெடுத்து பொதுமக்களின் உதவியுடன் அந்த வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள். அந்தப் பணியில் நானும் கலந்துகொண்டு எனது பங்களிப்பை வழங்கினேன். தவிர, ஆலயங்களின் வளர்ச்சிக்கும் ஏனைய பணிகளுக்குமான உதவிகள் கோரி வருபவர்களுக்கு இயன்ற வரை உதவிகள் செய்துள்ளேன்.

சமூகப் பணி என்று முழுமையாக அதில் ஈடுபடக்கூடிய வாய்புகள் இருக்கவில்லை. எனது தொழில் முயற்சிகளைக் கவனிக்கவே போதிய நேரம் கிடைப்பதில்லை. இந்த நிலையில் முழு நேர சமூகப்பணியில் ஈடுபடுவதென்பது இயலாமல் போய்விட்டது. எனினும்

சந்திப்பு: **நெடுந்தீவு லக்ஸ்மன்**

பொதுப்பணி என்று வரும்போது முடிந்த அளவு பங்களிப்பை வழங்கியுள்ளேன்.

*கேள்வி:* மகிழ்ச்சியும் மனநிறைவும் முதியவர்களையும் இளமையாகக் காட்டும் மனைவி இல்லை எனினும் உங்கள் குடும்பத்தினர் உங்களை அன்பாகக் கவனித்துக் கொள்கிறார்கள் போலும். குடும்பத்தினர் பற்றி கூறமுடியும்?

*பதில்:* இப்போது என்னுடைய மூன்றாவது மகள் சர்வேஸ்வரி குணரத்தினத்துடன் தான் இருக்கிறேன். ஒரு மகள் கனடாவில்

(12ஆம் பக்கம் பார்க்க)

---

# ஆளணி பற்றாக்குறையே கிளிநொச்சி மருத்துவமனை எதிர்கொள்ளும் முக்கிய சவால்!



**நோ**யாளரை ஏற்றிய வாகனம் தனது அதியுச்ச வேகத்தில் ஏ9 வீதியில் விரைந்து கொண்டிருக்கிறது.

அந்த வாகனத்தினுள் மகப்பேற்று வலியில் பெண்ணொருவர் துடிதுடித்தபடியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் இருந்து உயிராபத்தான நிலையில் மகப்பேற்றுக்குரிய பெண் யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகின்றார்.

மகப்பேற்று வலியால் துடிக்கும் பெண்ணுக்கு மருத்துவர், தாதியர் சிகிச்சை அளித்தபடியுள்ளனர்.

ஆனையிறவு வெளியை நோயாளர் வண்டி நெருங்கிய நிலையில் மகப்பேற்றுக்குரிய பெண் உயிரிழந்துவிடுகின்றார்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் மகப்பேற்று நிபுணர் பணியில் இருந்திருந்தால் மகப்பேற்றுக்குரிய பெண்ணின் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டிருக்கும்.

இச்சம்பவத்தின் பின்னணியில் இக்கட்டுரை அமைகிறது.

1996ஆம் ஆண்டு 'சத்ஜய' படை நடவடிக்கையினை மேற்கொண்டு கிளிநொச்சியினை ஸ்ரீலங்காப் படைகள் ஆக்கிரமித்த போது கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை இடம்பெயர்ந்து அக்கராயன் சுற்றயல் கூறு மருத்துவமனையில் இயங்கி வந்தது.

### அநியாய உயிரிழப்புகள்

வன்னியில் ஸ்ரீலங்கா படைகள் முற்றுகையிட்டு 41 நாள்கள் பாதைகளை மூடியிருந்த நாள்களில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலிருந்து வவுனியா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்கு கொண்டு செல்லமுடியாது சிறுவர்கள் உட்பட 7 நோயாளர்கள் உயிரிழந்தனர்.

போர் நெருக்கடியான காலகட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் மருத்துவர் ச. வி... யில் பணியாற்றி... இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்.

1998ஆம் ஆண்டு "ஓயாத அலைகள் - 02" நடவடிக்கை மூலம் கிளிநொச்சியை மீட்டெடுத்த பின்னர் கிளிநொச்சி நகரில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கினர்.

மீளக்குடியமரத் தொடங்கிய மக்களின் மருத்துவ தேவைகளை நிறைவுசெய்யும் நோக்குடன் கிளிநொச்சி நகரில் மீண்டும் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை இயங்கத் தொடங்கியது.

இந்த நிலையில், 2003ஆம் ஆண்டு மார்ச் 7ஆம் நாள் கிளிநொச்சி பொதுமருத்துவமனைக்கான அடிக்கல்லினை ஆசிய அபிவிருத்திச் சங்கத் தலைவர் "ராட ஒசியானோ" நட்டுவைத்தார்.

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் கட்டட வேலைகள் முடிவடைந்து கடந்த 10ஆம் திகதி முதல் அன்று பொது மருத்துவமனை இயங்கத் தொடங்கியுள்ளது.

### ஆளணிப் பற்றாக்குறை மிகப்பெரும் சவால்

கிளிநொச்சி பொதுமருத்துவமனை இனி வரும் நாள்களில் எதிர்கொள்ளவுள்ள சவால்களில் முக்கியமானது ஆளணி நெருக்கடி.

பொது மருத்துவமனையின் பணிக்கு 8 மருத்துவ நிபுணர்கள் தேவையான நிலையில் உடனடியாக நான்கு மருத்துவ நிபுணர்கள் தேவை.

1. மகப்பேற்று நிபுணர்.
2. வைத்திய நிபுணர்
3. சத்திர சிகிச்சை நிபுணர்
4. குழந்தை வைத்திய நிபுணர்.

**- கி.மைதிலி -**

ஆனால் ஒரு வைத்திய நிபுணர் கூட கிளிநொச்சியில் பணியில் இல்லை.

கிளிநொச்சி மாவட்ட மருந்துவமனை பொது மருத்துவமனையாக உருப்பெற்றுள்ள ... ஆளணி நெருக்கடி பெரும் ... இருக்கப்போகிறது.

கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு வேண்டிய முக்கிய ஆளணிவிவரம்:-

| | பணியில் இருக்க வேண்டியவர்கள் | தற்போது பணியில் |
|---|---|---|
| 1. மருத்துவ நிபுணர்கள் | 8 பேர் | ஒருவர் கூட இல்லை |
| 2. மருத்துவர்கள் | 14பேர் | 9 பேர் |
| 3. தாதியர்கள் | 120பேர் | 25 பேர் |
| 4. மருத்துவ மாது | 25 பேர் | 03 பேர் |

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாக பகுதிகளில் வசிக்கும் சுமார் 2 1/2 லட்சம் மக்களின் உயிர் நாடியாக உள்ள கிளிநொச்சி பொது மருத்துவமனையின் செயற்பாட்டுக்கு ஆளணி வளம் முக்கியமானது.

மருத்துவ நிபுணர்கள் பணியில் இல்லாததனால் நோயாளர்கள் உயிராபத் தான நிலையில் யாழ்ப்பாணம், வவுனியா மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். என்கிறார் கிளிநொச்சி பொது மருத்துவமனையின் பணிப்பாளர் இ.சதானந்தன்.

### நான்கு மருத்துவமனைகளுக்கு நிரந்தர மருத்துவர்கள் இல்லை

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் மருத்துவ நிபுணர்கள் இல்லையென்பது நெருக்கடியை உருவாக்கிய நிலையில், வன்னேரிக்குளம், வேரவில், பூநகரி, கண்டாவளை ஆகிய மருத்துவமனைகளில் நிரந்தர மருத்துவர்கள் பணியில் இல்லை என்றார்

**வன்னி மடல்**

கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார பணிப்பாளர் க.நந்தகுமாரன்.

தமிழ் மாவட்டங்களில் இருந்து மாணவர்களை மருத்துவப் பிரிவுக்கு கோட்டா முறையில் தெரிவுசெய்யும் நிலையில் தமிழ் மாவட்டங்களுக்கு மருத்துவர்களை அரசு நியமிப்பதில்லை என்று கூறுகின்றார் வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை.

கிளிநொச்சி மண்ணின் வளத்தை பயன்படுத்தி மருத்துவர்களாக வெளிவருபவர்கள் எமது மாவட்டத்தில் பணி புரிய முன்வர வேண்டும் என்கிறார் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம்.

மக்களைக் காக்கும் பணியில் போதியளவு மருத்துவர்கள் கடமையில் உள்ளபோது தான் கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதாரத் துறை முன்னேற்றம் அடையும். அத்துடன், கிளிநொச்சி பொது மருத்துவமனையின் பணிகளும் மக்களுக்கு நிறைவாகக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸுக்கு ஏமாற்றம்......

[07 ஆம் பக்கத் தொடர்சி]

இத்தாலி அணித்தலைவர் கன்னவரா சிறந்த தற்காப்பு வீரராகச் செயற்பட்டார். தனது 100ஆவது போட்டியில் அணிக்கு உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்து, ரசிகர்கள் மனதில் நீங்கா இடம்பெற்றுவிட்டார். சிறந்த வீரர் என்றால் அது ஜிடேன் தான். தொடரின் கடைசி நேரத்தில் இவர் தவறு செய்தாலும் கூட, ஓய்வுபெறப் போகும் தொடரில் தனது முழுத்திறமையையும் வெளிப்படுத்தியது அபாரம். அணியின் வெற்றிக்காக ஒவ்வொரு போட்டியிலும் உயிரைக் கொடுத்து விளையாடினார். சிறந்த கோல் காப்பாளராக இத்தாலியின் புபானைக் கூறலாம்.

சிறந்த இளம் வீரர்கள் என்ற பெருமையை போர்த்துக்கலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ, ஜேர்மனியின் பொடோல்ஸ்கி ஆர்ஜென்ரீனாவின் மெஸ் ஆகியோர் பெற்றுள்ளனர். இவர்கள் மூவரும் கால்பந்தில் புதிய சரித்திரத்தையே படைப்பார்கள். இத்தாலியின் பயிற்சியாளர் மார்செல்லோ லிப்பியை சிறந்த பயிற்சியாளராகக் கூறலாம். உலக கோப்பை தொட ருக்கு முன்னரே இத்தாலியை வலுவான அணியாக மாற்றியவர். தொடர்ந்து 25 போட்டிகளில் இத்தாலி தோல்வியை சந்திக்காமல் சாம்பியன் ஆனதற்கு முக்கிய காரணம் இவர்.

### ஏமாற்றம் அளித்தவர்கள்

இத்தொடரில் மிகப்பெரிய ஏமாற்றம் அளித்தவர்கள் பிரேஸிலின் ரொனால்டினோ. இங்கிலாந்தின் ரூனி ஆகியோர் உலக கோப்பை தொடர் தொடங்க முன், உலகமே எதிர்பார்த்த வீரர் றொனால்டினோ. ஆனால் இவரோ ஒரு கோல்கூட அடிக்கவில்லை. கிளப் போட்டிகளில் அசத்திய ரொனால்டினோ தனது நாட்டுக்காக இவ்வளவு மோசமாக விளையாடுவார் என சற்றும் எதிர்பார்க்கவில்லை. இத்தொடரின் சிறந்த போட்டி, பிரான்ஸ் ஸ்பெயின் இடையிலான இரண்டாம் சுற்று ஆட்டம் படுவிறுவிறுப்பாக இருந்தது. மொத்தத்தில் 2006 உலக கோப்பை தொடர் ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிய.ஒரு தொடராகவே அமைந்தது.

### சிறந்த அணிகள்

பிறேஸில் அணி காலிறுதியில் தோல்வியடைந்தாலும் 'பிபா' சிறந்த அணியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவ்விருது பிறேஸில், ஸ்பெயின் ஆகிய இரு அணிகளுக்கும் வழங்கப்படுகிறது. மைதானத்தில் வீரர்களின் நடத்தை, விளையாட்டில் 'வீரத் தன்மை' ஆகியவை இவ்விருதுக்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இரு அணிகளுக்கும் தலா 60 லட்சம் ரூபா மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். இவ்விருதை பிறேஸில் மூன்றாம் முறையாகவும், ஸ்பெயின் முதல் முறையாகவும் தட்டிச் செல்கின்றன.

### ஜிடேன் சாதனை

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் மூன்று கோல் அடித்த நான்காவது வீரர் என்ற மைல்கல்லை எட்டினார் பிரான்ஸ் அணித் தலைவர் ஜினடின் ஜிடேன். இத்தாலிக்கு எதிரான இறுதிப் போட்டியில் ஒரு கோல் அடித்த ஜிடேன், முன்னதாக 1998இல் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இரண்டு கோல்கள் அடித்திருந்தார். இதற்கு முன் பிறேஸிலின் பீலே, இங்கிலாந்தின் ஜியாப் ஹர்ஸ்ட், ஜேர்மனியின் பால் பிரய்ட்னர் ஆகியோர் இறுதிப் போட்டிகளில் பங்கேற்று மூன்று கோல்கள் அடித்துள்ளனர்.

### உலக சாதனை

எந்த உலகக் கிண்ணத்திலும் இல்லாத அளவிற்கு ஜேர்மனி உலககோப்பை தொடரில் சாதனை எண்ணிக்கையாக 28 சிவப்பு அட்டைகள் மற்றும் 345 மஞ்சள் அட்டைகள் காட்டப்பட்டுள்ளன. இதற்கு முன் 1998ஆம் ஆண்டு பிரான்ஸில் நடந்த உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் 22 சிவப்பு அட்டைகள் காட்டப்பட்டதே இதுவரை சாதனையாக இருந்தது.

கடந்த 2002 இல் சம்பியன் பட்டம் வென்ற பிறேஸில் அணி, சமீபத்தில் ஜேர்மனியில் நடந்த உலகக் கோப்பை தொடரிலும் சாதிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காலிறுதியிலேயே தோல்வியடைந்து வெளியேறியது.

இதைத் தொடர்ந்து அந்த அணியின் மீது விமர்சனங்கள் கடுமையாக எழுந்தன. இது பற்றி ரொனால்டோ கூறுகையில், ''பிறேஸில் தோல்வியடைந்ததற்கு மிக அதிகமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது தேவையற்றது. எங்களது ஆட்டம் சிறப்பாக இல்லை என்பதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். இதில் மாற்றுக் கருத்து இல்லை. ஒவ்வொரு முறையும் உலகக் கிண்ணத்தை வெல்லுவது என்பது இயலாத ஒன்று. நான்கு வருடங்களுக்கு முன்பு கோப்பை கைப்பற்றிய போது ரசிகர்கள், பத்திரிகைகள் என அனைவரும் எங்களைப் பாராட்டினர். ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக உள்ளது. தோல்வியடைந்ததற்கு பயிற்சியாளரை மட்டுமே குறை கூறக்கூடாது'' - என்றார்.

### ரொனால்டினோ மன்னிப்பு

பிறேஸில் தோல்விக்கு மற்றொரு நட்சத்திர வீரர் ரொனால்டினோ மன்னிப்புக் கோரியுள்ளார். இதுபற்றி ரொனால்டினோ தனது இணையத்தளத்தில் கூறியிருப்பதாவது:-

உலகக் கிண்ணத் தொடரில் பிறேசில் அணி சிறப்பாக விளையாடும் என ரசிகர்கள் ஆவலுடன் இருந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பை எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனது ஆட்டமும் திருப்தியளிக்கவில்லை. எங்களது முழுத் திறமைக்கு ஏற்ப விளையாடாததால் தொடரிலிருந்து வெளியேற நேரிட்டது. இதற்காக ரசிகர்களிடம் நான் மன்னிப்பு கோருகிறேன். அடுத்த உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடுவோம் - என்று தெரிவித்தார்.

18 ஆவது உலகக் கிண்ணம் கால்பந்தாட்ட ரசிகர்கள் அனைவரும் எதிர்பார்த்ததைப் போல் அல்லாமல் இத்தாலியின் கைக்கு சென்றுவிட்டது. இது பிறேசில், ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த ரசிகர்களுக்கு சொல்ல முடியாத சோகம்தான். அடுத்த உலகக் கிண்ணப் போட்டி 2010ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற வுள்ளது. அதுவரை பொறுத்திருப்போம். ★

# மிதிவெடியகற்றிய நிலம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டுப்பிரிவினால் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள் பிரதேச செயலகங்களூடாக மக்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். அத்தியடி புகையிரத நிலையப் பகுதியில் 7 ஆயிரத்து 326 சதுர மீற்றர் நிலமும் -

நாவாந்துறை வடக்குப் பகுதியில் 25 ஆயிரத்து 410 சதுர மீற்றர் நிலப்பரப்பும் மிதிவெடியகற்றப்பட்டு யாழ். பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த இரு இடங்களிலும் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தால் இருநூற்றுக்கும் மேற்பட்ட மிதிவெடிகள் அகற்றப்பட்டன என்று மிதிவெடி செயற்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்தனர். (190-ரி)

# இலங்கை அகதிகள் 20 பேர் தனுஷ்கோடிக்கு வருகை

இராமேஸ்வரம், ஜூலை 16

தனுஷ்கோடி - அரிச்சல்முனை கடற்கரைப் பகுதிக்கு ஈழத்தமிழ் அகதிகள் 20 பேர் கடந்த புதன்கிழமை வந்தடைந்தனர். இவர் களுடன் இதுவரை தமிழகம் வந்த அகதிகளின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 636 ஆக உயர்ந்துள்ளது.

இலங்கையில் வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி, மன்னார் பகுதிகளிலிருந்து 11 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆண்கள், 9 பெண்கள், 2 குழந்தைகள் என 20 பேர் இரு 'பைபர்கிளாஸ்' படகுகளில் மன்னார் - பேசாலை கடற்கரையிலிருந்து செவ்வாய்க்கிழமை இரவு புறப்பட்டு தனுஷ்கோடி - அரிச்சல்முனை கடற்கரை பகுதிக்கு வந்து சேர்ந்தனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)


## ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கத்துக்கு வாழ்த்து

எமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும் சங்க செயற்பாடுகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவருமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் அவர்கள் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெற்றதையிட்டு அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் சட்டத்துறையிலும், நீதி நிர்வாகத்துறையிலும் மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சைவவித்தியா விருத்திச் சங்கம், (சி/50228) தலைவர்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி. பணிப்பாளர்சபை உறுப்பினர்கள்.




## கண்ணீர் அஞ்சலி

இமையாணன், பிறவளவைப் பிறப்பிடமாகவும் சவுதி அரேபியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

**தர்மலிங்கம் ரதீஸ்குமார்**

அன்பின் உறைவிடமாய்
அறிவின் இருப்பிடமாய்
அகிலமதில் அவதரித்த - என்
ஆருயிர் தோழனே!
அன்னையவள் அரற்றழுத
அப்பனவன் தவிதவிக்க
அண்ணனவன் ஆர்ப்பரிக்க
அன்புத் தம்பிமார்கள் ஏங்கிநிற்க
ஆசைத் தங்கையவள் கதறியழ
அயலவர்கள் திகைத்து நிற்க
அறியாத இடம் தேடி
எமைவிட்டுப் போனதேனோ?

உன் ஆத்மா சாந்தியடைவதாக....

ஆதியாமலை, உடுப்பிட்டி.
ஆருயிர்த் தோழன்: கு. கவநேசன் (லண்டன்).




மீண்டும் புதுப்பொலிவுடன் வெளிவந்திருக்கிறது

**பூங்கனி**

சிறுவர் மாத இதழ்

நாடுமுழுவதும் பரபரப்பான விற்பனையில்




அறிவுள்ளோரின் சிறந்த தெரிவு

**றோயல் குளுக்கோஸ்**

100 % சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By: ROYAL INDUSTRIES COLOMBO-12 ☎0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப்பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 2567

100g றோயல் குளுக்கோசின் ஆகக்கூடிய சில்லறை விலை 23.90



## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1978ஆம் ஆண்டு 5' 8'' உயரம், ரேவதி நட்சத்திரம் இலங்கையில் A/L சித்தி எய்தி தற்பொழுது அமெரிக்காவில் படித்துக் கொண்டு தொழில் பார்க்கும் அமெரிக்க குடியுரிமையுள்ள பெண்ணுக்கு 1ஆம், 2ஆம் இடத்தில் ராகு, கேது தோசம், செவ்வாய் பாவம் இல்லாத ஓரளவுக்கு படித்த மணமகனை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகம் மற்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இரவு 7 மணிக்குப் பின் 077 - 3058640 தொடர்புகொள்ளவும்.

மேலதிக விவரங்களை
C/O 2913,
உதயன்.

(சி/50210)



## STUDENT VISA

Russia (ரஷ்யாவின்) பிரபல்யமான பல்கலைக் கழகங்களில் மருத்துவ, பொறியியல் பட்டப்படிப்புகளுக்கான அனுமதிகளும் VISA, பயண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

O/L மாணவர்களுக்கும் A/L மார்க்ஸ் குறைந்த மாணவர்களுக்கும் பிரத்தியேக ஏற்பாடுகள்.

கட்டணக் குறைபடிகள், தூரப்பயணம், பாதுகாப்புப் பற்றிய பயம் என்பவற்றைத் தவிர்க்க இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளருடன் தொடர்புகொள்ளுங்கள்.

**Office of the SriLankan Co-ordinator**

T.P. 0777 250555

(பிற்பகல் 4 மணிக்குப் பின்தொடர்பு கொண்டு சந்திக்கவும்)

(51898)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 20 - 10 - 1950


மறைவு 16 - 06 - 2006

**அருணாசலம் காராளசிங்கம்**

மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்றதேனோ?
மீளாத்துயரில் நாம் வாழ்கின்றோம்
மாதம் ஒன்று ஆனாலும் மாறவில்லை உம் நினைவு
மீண்டும் மண்ணுலகம் மலர்ந்திட மாட்டீரோ?

கைதடி வடக்கு,
கைதடி.
(52198)
சகோதரி, மருமக்கள்,
மகன்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 07 ★ 01 ★ 1924

உதிர்வு 16 ★ 06 ★ 2006

**திருமதி இரத்தினம் தணிகாசலம்**

"மாதம் ஒன்று மறைந்தது
- மறக்கமுடியவில்லை
நேயம் நிறைந்த
- உங்கள் முகம்
ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டாலும்
மாண்டார் வரமாட்டார் என்ற
நிலையாமை தாமுணர்ந்து
காலங் காலமாய் கருத்தினில்
- வைப்போம்
கோல எழிலின் உங்கள் முகம்"

16.06.2006இல் காலமாகிய எமது அன்புத் தெய்வத்தின் மறைவைக் கேட்டு ஓடோடி வந்து உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளை நடத்த தோளோடு தோள் நின்ற நல்லுள்ளங்களுக்கும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு எமது துயரில் பங்கு கொண்ட நேச உள்ளங்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

பிலாவடி, தும்பளை,
பருத்தித்துறை. (சி/50166) (24)
- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பெரும் போர் ஒன்றை எதிர்நோக்கும் மத்திய கிழக்கின் இன்றைய நிலை



இஸ்ரேலிய விமான தாக்குதலில் தமது சகோதரன், தாய் மற்றும் சிலர் கொல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டபோது மூன்று பிள்ளைகள் கதறி அழும் காட்சி.

## இந்தியாவின் தோல்விக்கு சதிவேலை காரணமா?

கடந்த சில வாரங்களில் ஆசிய நாடுகள் இரண்டு வெகுதூரம் சென்று குறித்த இலக்குகளைத் தாக்கக்கூடிய ஏவுகணைகளை விண்ணில் செலுத்தி சோதனை நடத்தியுள்ளன.

இவைகளில் இந்தியாவின் இரண்டு சோதனைகள் தோல்வியில் முடிவுற்றிருப்பது அந்த நாட்டுத் தலைவர்களுக்கு மட்டுமல்ல விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப அறிஞர்களுக்கும் கவலையைக் கொடுத்திருக்கின்றது. கோடிக் கணக்கான ரூபாய்களை அள்ளிக் கொட்டி நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகளும் தொழில்நுட்பவியாளர்களும் ஒருங்கிணைந்து மேற்கொண்டமுயற்சி பயனற்றுப்போனமை கவலைக்குரியதுதான். இந்தத் தோல்விக்கான காரணம் இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை.

கடந்த பத்தாம் திகதி திங்கட்கிழமை ஆந்திராவின் ஏவுதளத்திலிருந்து புறப்பட்ட இந்தியாவின் மிக பாரம் கூடிய விண்கலத்தை ஏந்திய ஏவுகணையானது ஒருசில வினாடிகளில் எரிந்து புகைமண்டலமாக கடலில் வீழ்ந்தது. பல்வேறு விஞ்ஞான நுட்பங்கள் அடங்கிய இவ்விண்கலத்தின் மூலம் விஞ்ஞானிகள் இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சியை உலககுக்கு எடுத்துக்காட்ட மட்டுமன்றி பொருளாதார ரீதியிலும் பல வெற்றிகளை சாதிக்கலாம் என்றுகனவு கண்டிருந்தனர். அவை அனைத்துமே சில நொடிகளில் சிதறிச் சாம்பலாகிவிட்டன.

இந்திய விண்வெளித்துறைக்கு இது ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதற்கு ஏற்கனவே இந்தியாவின் அக்னி 111 ஏவுகணையின் தோல்வியும் ஒரு காரணமாகும். 49 ஆயிரம் கி.மீ தூரம் பாயக்கூடிய இந்த அக்னி 111 ஏவுகணை அணு ஆயுதங்களை சுமந்து செல்லக்கூடியதுமாகும். ஏவுகணை விண்வெளியில் இணைப்புகளை விடுவித்துக் கொள்வதில் ஏற்பட்ட கோளாறே அதன் தோல்விக்கு காரணம் என்று விஞ்ஞானிகள் கூறிக் கொண்டார்கள். அந்தத் தோல்விக்கான காரணம் முறையாகக் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னரே இன்னொரு விண்வெளி சோதனைத் தோல்வியையும் இந்தியாவை திக்குமுக்காடச் செய்துள்ளது.

மிக மிக இரகசிய தகவல்களுடன் மேற்கொள்ளப்படும் இந்த விண்வெளி சோதனைகளில் எதிரிகளின் சதிவேலை ஏதும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வெளிப்படையாக இந்திய அதிகாரிகளால் தெரிவிக்கப்படாது போனாலும் அவ்வித சாத்தியப்பாடுகள் பற்றியும் ஆராயப்படும் என்பதில் சந்தேகமில்லை.

### மும்பையை குலுக்கிய குண்டுத்தாக்குதல்

விண்வெளி சோதனைகளில் ஏற்பட்ட தோல்விகள் பற்றிய விவகாரம் ஆறுவதற்கு முன்னரே மும்பை நகரைக் குலுக்கிய ரயில் தொடர்குண்டுவெடிப்புகள் இந்திய மக்களையும் தலைவர்களையும் உலுப்பி எடுத்துள்ளன.

மும்பை நகர் ரயில்களில் பல இடங்களில் தீவிரவாதிகளால் நிகழ்த்தப்பட்டுள்ள இந்தக் குண்டுவெடிப்புகளில் 190 இற்கும் அதிகமான அப்பாவிகள் மரணமடைந்துள்ளனர். 100இற்கும் மேலானோர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்துக்கு யாரும் உரிமை கொண்டாடாத போதிலும் ஒஸாமா பின்லேடன் தலைமையிலான அல்கெய்டா அமைப்பே பின்னணியில் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. ஆனால் பாகிஸ்தானை உறைவிடமாகக் கொண்டுள்ள தீவிரவாதிகளே காரணமாக இருந்திருக்கவேண்டும் என்று இந்திய உயர்மட்டத் தலைவர்கள் கருதுகிறார்கள். அதனால் பாகிஸ்தானிலுள்ள தீவிரவாத பயிற்சி முகாம்கள் அனைத்தையும் அழித்து ஒழித்துவிடும்படி இந்தியா பாகிஸ்தான் அதிகாரிகளை வற்புறுத்தியுள்ளது.

ரயில்களில் பிரயாணம் செய்யும் அப்பாவி பொதுமக்களை காரணம் இன்றி இலக்குவைத்துக் குண்டுகளால் தாக்குவதென்பது சர்வதேசத் தீவிரவாதத்தின் ஒரு போக்காகக் கருதப்படுகின்றது. காஷ்மீர் பிரச்சினை இந்தியா - பாகிஸ்தான் காஷ்மீர் மக்கள் ஆகிய முத்தரப்புக்குமிடையில் சுமூகமாகத் தீர்க்கப்படும்வரை காஷ்மீர் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது சாத்தியமில்லைபோல் தெரிகின்றது.

## ஏழு ஏவுகணைகளை செலுத்திய இறுமாப்பில் வடகொரியா

### வடகொரிய ஏவுகணை சோதனை

இந்திய ஏவுகணை சோதனைகள் இரண்டு தோல்வியில் முடிந்திருக்கும் நிலையில் வடகொரியா ஏழு ஏவுகணைகளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி உலகத்தை வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றது. இந்த ஏவுகணைகள் அணுகுண்டுகளைக் காவிச்செல்லக்கூடியவை என்பது ஒரு புறமிருக்க அதில் ஒன்று அமெரிக்காவின் வட எல்லையிலுள்ள ஹவாய் மற்றும் அலாஸ்கா வரை பாயக்கூடியது என்று கணிக்கப்பட்டுள்ளது.

உலக வலம்

மேனா

இந்த ஏவுகணை சோதனையால் மிகவும் கலக்கமடைந்திருப்பது ஜப்பானாகவே தெரிகின்றது.

வடகொரியாவுக்கெதிராக பொருளாதாரத் தடைகளை விதித்துத் தண்டிக்க வேண்டும் என்று ஜப்பான் முயன்றுள்ள அதேவேளை அப்படியான செயற்பாடு வடகொரியா மீதான போர்ப் பிரகடனமாகவே கருதப்படும். இறைமையுள்ள ஒரு நாடு என்ற முறையில் ஏவுகணை சோதனைகளை நடத்தும் உரிமை தங்களுக்கு உண்டு என்று வடகொரிய ஆட்சியாளர்கள் அடித்துக் கூறிவருகின்றார்கள்.

இந்நிலையில் பாதுகாப்புச் சபையில் வடகொரியாவுக்கெதிரான தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற ஜப்பான் எடுக்கும் முயற்சியை அமெரிக்காவும் பெரிய பிரித்தானியா மற்றும் பிரான்ஸூம் தாமதமடையச்செய்யும் முயற்சியில் இறங்கியிருப்பதாக தெரியவந்துள்ளது. வடகொரியாவுடன் பேரம்பேசி ஒத்திவைக்கப்பட்டுள்ள 6 நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்வதற்குச் சீனா முயலும் என்ற எதிர்பார்ப்பிலேயே பாதுகாப்புச் சபையில் வடகொரியா மீதான தடைதீர்மானத்தை தாமதமடையச்செய்ய இந்த நாடுகள் விரும்புகின்றன.

அவ்வாறு [illegible] மானால் பொருளாதார சிக்கலுக்குள்ளாகும் வடகொரியாவின் நிலைமை சீனாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுவதால் வடகொரியாவை 6 நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்ளச்செய்வதில் சீனா அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இஸ்ரேலிய படைவீரன் கடத்தல்

இஸ்ரேல் - காஸா எல்லையில் கடந்தமாத இறுதியில் இஸ்ரேலிய இராணுவ நிலையொன்றின்மீது தாக்குதல் நடத்தி இருவரைக் கொன்றதோடு படைவீரன் ஒருவரையும் பலஸ்தீன ஹமாஸ் இயக்கத்தினர் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம், மீண்டும் மத்திய கிழக்கில் போர் பூசலைக்கிளப்பியிருக்கின்றது.

பலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப்பை அம்மக்கள் எப்பொழுது பதவியில் அமர்த்தினார்களோ அன்றிலிருந்தே இஸ்ரேலியருக்கும் பலஸ்தீனியருக்குமிடையிலான முறுகல்நிலை மேலும் மோசமடையத் தொடங்கிவிட்டது.

அதிபர் அப்பாஸின் கட்சி ஆட்சியிலிருக்கும்வரை இஸ்ரேலிய அரசு பிரச்சினைகள் எதுவும் ஏற்படுத்தாவிடில் ஓரளவுக்கு ஒத்துழைத்தும் வந்தது. காஸாவிலிருந்து முற்றாக இஸ்ரேலிய குடியிருப்பாளர்களை அகற்றியது மட்டுமின்றி தனது படையணிகளையும் வாபஸ் பெற்றது. மேற்குக்கரையிலும் இஸ்ரேலிய படைகளை வாபஸ்பெறுவதற்கு ஆயத்தம் செய்தது.

ஆனால், இடையில் வந்த பலஸ்தீன தேர்தல் ஹமாஸ் அமைப்பை பதவிக்குக் கொண்டுவந்தது. அப்பாஸின் கட்சியில் ஊழல்கள் மலிந்து போனமையால் மக்கள் அக்கட்சியை ஒதுக்கிவிட்டு ஹமாஸ் கட்சியைப் பதவியில் அமர்த்தினார்கள்.

ஆனால், ஹமாஸைப் பொறுத்தவரை இஸ்ரேல் என்ற ஒரு நாடு இருப்பதையே அங்கீகரிக்க மறுப்பதுடன், இஸ்ரேல் மண்ணிலிருந்தே அழித்தொழிக்கப்படவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருக்கின்றது. இதனால் முறுகல்நிலை அதிகரித்ததுடன், இஸ்ரேல் நிலப்பகுதிமீது ரொக்கட் தாக்குதல்களும் அவ்வப்போது நடத்தப்பட்டுவந்துள்ளன. இப்பொழுது இஸ்ரேலியப் படைவீரன் கடத்தப்பட்டதன் விளைவாக இஸ்ரேல் தனது டாங்கிப்படைகளை காஸாவுக்குள் நிறுத்தி மேற்குக்கரையில் தாம் விட்டுச்சென்ற பகுதிகளின் குடியிருப்புகள் மீது விமானக் குண்டுத்தாக்குதல்களை நடத்தியுள்ளது.

சில தினங்களுக்கு முன் ஹமாஸ் தலைவர்கள் கூட்டம் நடத்திக்கொண்டிருந்த வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட படைவீரன் சிலாத்ஷாவித் விடுவிக்கப்படும்வரை இஸ்ரேலியரின் தாக்குதல் தொடரும் என்று அந்நாட்டின் பிரதமர் எகிட் ஒல்மேர்ட் அறிவித்துள்ளார்.

மேற்கு மற்றும் தெற்கு காஸாவில் கனரக வாகனங்களுடன் நுழைந்துள்ள இஸ்ரேலியப் படையணிகள் ஆட்டிலறித் தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் நடத்தியிருந்தன.

காஸாவில் மின் நிலையம் ஒன்று தாக்கப்பட்டு பத்துலட்சம் மக்களுக்குமேல் மின்சார வசதியை இழந்துள்ளார்கள். மருத்துவமனை, சுகாதார அமைப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

காஸா மீதான இஸ்ரேலியரின் தாக்குதல் தொடர்ந்துகொண்டிருக்கும் அதேவேளை லெபனான் மீதும் இஸ்ரேலிய படையினரின் கவனம் திரும்பியிருக்கிறது. எல்லைக்காவல் நிலையம் ஒன்றைத் தாக்கிய ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் எட்டுப் பேரைக் கொன்று இரு இஸ்ரேலியர்களைக் கடத்திச்சென்றுள்ளார்கள். இதனால் சீற்றமுற்றுள்ள இஸ்ரேலியர்கள் லெபனான் தலைநகர் பெய்ரூட் விமான நிலையத்தையும் தாக்கி நாசம் செய்துள்ளனர். நிலைமை இவ்வாறு நீடிக்குமானால் மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு பெரும் போர் வெடிக்கும் போல் தெரிகின்றது.

இஸ்ரேலியரை கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளும்படி ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனான் கோரியுள்ளார். போர் வீரர் கடத்தப்பட்டதையும் அவர் கண்டித்துள்ளார்.

காஸா மீதான இஸ்ரேலிய தாக்குதலை நிறுத்தவும் கடத்தப்பட்ட படைவீரர்களை விடுவிக்கவும் ஏற்கனவே எகிப்து எடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ளது.

* * *

### பட்டுப்பாதை திறந்துவைப்பு

புராதன காலத்தில் இந்தியாவையும் சீனாவையும் மட்டுமல்ல சீனாவை மேற்கு நாடுகளோடும் தரை வழியாக இணைத்துக்கொண்டிருந்த நாதூலா காணவாய்ப்பாதை மீண்டும் திறக்கப்பட்டிருப்பது இவ்விரு நாடுகளுக்குமிடையில் பிணக்குகள் குறைந்து பொருளாதாரம் மேம்படுவதற்கு உதவியாய் இருக்குமென்று கருதப்படுகின்றது.

திபெத் - சிக்கிம் பிரதேசத்தை மேலும் செழிப்புள்ள பகுதியாக மாற்றுவதற்கு இப்பாதை திறப்பு உதவியாகவிருக்கும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை ஆறு மணியுடன் மூடப்படும் வீதி

கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகச் செல்லும் வீதியூடாக தினமும் மாலை 6மணிக்குப்பின் பயணம் செய்வதற்கு பொலிஸார் அனுமதி மறுத்து வருகின்றனர்.

குறிப்பாக, தினமும் மாலை 6 மணியுடன் இந்த வீதி மூடப்படுவதை அடுத்து, மக்கள் தமது போக்குவரத்தை இராஜபாதையூடாக மேற்கொள்ளமுடியாது டச்சு வீதியூடாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. டச்சு வீதியூடாகச் செல்லும் மக்கள் மீண்டும் கோண்டாவில் இருபாலை வீதியைப் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது. (17)

# கனடாவுக்கு வாருங்கள்....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறார். ஆண்பிள்ளைகள் கிளிநொச்சி, வவுனியா பகுதிகளில் இருக்கிறார்கள். அடிக்கடி பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் வந்து தங்கி நின்று பார்த்துச் சொல்கிறார்கள். என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் எல்லோருமே பாசமுடன் இருக்கிறார்கள். கனடாவில் உள்ள மகள் தன்னுடன் வந்து இருக்குமாறு கேட்கிறார். அது என்னால் முடியாமல் இருக்கிறது.

*கேள்வி:-* மகள் வற்புறுத்துகிறார் நீங்கள் போயிருந்தாலென்ன?

*பதில்:-* 1991இல் இடம்பெயர்ந்து சென்றபின் கொழும்பில் மகளுடன் தங்கியிருந்தேன். எனக்கு எனது சொந்த மண்ணை விட்டு எங்கும் சென்று தங்க இஷ்டமில்லை. நான் வாழ்ந்த மண். என்னை வளர்த்த மண். இதையெல்லாம் விட்டுவிட்டு வேறு எங்காவது போய்....என்னாலை முடியாது!

*கேள்வி:-* உங்களுக்குச் சகோதரர்கள் என்ற யாராவது இருக்கின்றார்களா?

பதில்:- இரண்டு சகோதரர்களும் 2 சகோதரிகளும் இருந்தார்கள். இன்றைக்கு நான் மட்டும்தான் இருக்கிறேன். அவர்கள் இறந்துபோய்விட்டார்கள்.

### கிராமப்புற இளைஞர்கள் முதியவர்களை மதிக்கின்றார்கள்

*கேள்வி:-* நீங்கள் நடந்துசெல்லக்கூடிய அளவிற்கு (எவரின் உதவியுமின்றி) இருக்கிறீர்கள். சுற்றாடலில் சிலதூரம் நடந்து சென்று திரும்புவீர்கள். இளைஞர்களைச் சந்திப்பீர்கள். முதியவர் என்ற முறையில் அவர்கள் உங்களை எவ்வாறு மதிக்கிறார்கள். அநேகமான இளைஞர்கள் முதியவர்கள் பற்றி நினைப்பது இல்லைத்தானே?

*பதில்:-* நகரப்புறங்களில் அந்த நிலை இருக்கிறதோ இல்லையோ இது ஒரு கிராமம். இங்கே முதியவர்களையும் மூத்தவர்களையும் மதிக்கும் தன்மை இளைஞர்களிடம் இருக்கிறது.

*கேள்வி:-* ஒரு நூற்றாண்டைக் கண்ட மனிதர் என்ற வகையில், இப்போதைய இளம் பிள்ளைகளுக்கு உங்களால் என்ன அறிவுரைகளைக் கூறமுடியும்?

பதில்: ஒரு நல்ல வாழ்க்கை எதிர்காலம் அமையக் கூடியதான வழிமுறைகள் - கல்வியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டால் அது தான் உங்களுக்குக் கைகொடுக்கும்.

கேள்வி:- இறுதியாக ஒன்று இன்றைய நாட்டுச் சூழல்கள் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்:- அதுதான் அரசியல் குறித்த ஆர்வம் என்னிடம் இருந்ததில்லை என்று ஏற்கனவே சொல்லிவிட்டேனே..

தங்களது நூற்றாண்டு கால வாழ்வியல் குறித்து 'உதயன்' பத்திரிகையினூடாக வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டமைக்காக எங்கள் நன்றியைத் தெரிவிப்பதுடன் தங்களுக்கு வேலணை முடிப்பிள்ளையாரின் அருள் கிடைக்கவேண்டுகின்றேன் நன்றி - என்று கூறிவிடை பெற்றேன். ✱

## மரண அறிவித்தல்

### முத்ததம்பி செல்லத்துரை



உடுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு, பாலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி செல்லத்துரை (ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை மின்சார சபை) அவர்கள் 14.07.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் கதிர்காமதேவியின் கணவரும் கிருபாமூர்த்தி (ஹொலண்ட்), சுந்தரமூர்த்தி (லண்டன்), சத்தியமூர்த்தி (தொழில்துறை திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவலோகநாயகி (மூளாய்), லோகநாயகி, கணேசமூர்த்தி (மலேசியா), முருகமூர்த்தி (மின்னிணைப்பாளர், கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயராணி (ஹொலண்ட்), மதிவதனா (லண்டன்), தவராசா (உரிமையாளர், காஜானனன் தொலைத்தொடர்பு சேவை - மூளாய்), யுகபாலன் (பெயின்ரர்), சுமித்திரா (கைதடி), ஸ்ரீகாந்திமதி (சுழிபுரம்), சுசிலாதேவி (கோண்டாவில்) ஆகியோரின் மாமனும் நிறோஷன் (ஹொலண்ட்), சபேசன் (லண்டன்), சுதர்சன் (லண்டன்), பிருந்தா (லண்டன்), சித்திரகலா, விலோஷினி, பிரகாசினி, ஜெனித்தா கோகுலன், திவாகரன், விஜித்தா, சண்முகப்பிரியன் சஜீவன், காயத்திரி, அனோஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
**காங்கேசன்துறை வீதி,**
**மருதனார்மடம், சுன்னாகம்.** (52282) (24-11-14)

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 ★ 11 ★ 1919 — உதிர்வு 22 ★ 11 ★ 1995

அமரர் **செல்லையா பொன்னுத்துரை**



மலர்வு 15 ★ 07 ★ 1930 — உதிர்வு 01 ★ 07 ★ 2002

திருமதி **இராசம்மா பொன்னுத்துரை**

**அன்னையும் தந்தையும் அவனிவிட்டு சென்றதெங்கே?**
**ஆதரவு இல்லாமல் கதறி அழுகின்றோம்**
**ஒன்றாகக் கூடி ஒற்றுமையாய் வாழ்கையிலே**
**இவ்வுலகம் விட்டு இறைவனடி சேர்ந்தீரோ?**

**உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:**

*25/07, மானிப்பாய் வீதி,*
*ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.* (52277) (24-11-14)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


**சனி ஞாயிறு மற்றும் வார நாட்களில்**
**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

**CERTIFICATE IN ENGLISH**
O/L, A/L பூர்த்தி செய்த மாணவர்களுக்கான விஷேட வகுப்பு

**DIPLOMA IN BUSINESS ENGLISH**
உத்தியோகஸ்தர்கள் ஆசிரியர்களுக்கான விசேட வகுப்பு

**DIPLOMA IN ENGLISH**
ஆங்கில அறிவை விருத்தி செய்து கொள்ள

**IELTS**
ஆங்கில அறிவை வளர்க்கவும், வெளிநாடு செல்ல இருப்போருக்குமான விசேட வகுப்பு. உங்கள் வசதிக்கேற்ப வகுப்புக்களில் இணைந்து கொள்ளலாம்.

**BBS**

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்
- Pre-Foundation
- Foundation
- Lower Intermediate
- Intermediate
- Upper Intermediate

5+ to 14+ சிறுவர்களுக்கான வகுப்புக்கள்

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை

வயது 2+ முதல் வயது 3 வரை **Play Group**
வயது 3+ முதல் வயது 4 வரை **Montessori**
வயது 4+ முதல் வயது 5+ வரை **Pre-School**

2+ to 5+ குழந்தைகளுக்கான வகுப்புக்கள்

**BRITISH BUSINESS SCHOOL**
இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | Dr.ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை, புலோலி. | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆவரங்கால் சந்தி,மானிப்பாய்.
HOT LINE : 021-222-5796 e-mail: british.businessschool@gmail.com



**சுதன் ஆட்ஸ்**



**இந்தியா, நாகபட்டினத்தைச் சார்ந்த புகழ்பெற்ற ஓவியவல்லுநர் நாராயணசாமி அவர்களிடம் பல ஆண்டுகளாக சிறப்பாக ஓவியம் மற்றும் வர்ணக் கலையை முறையாகப் பயின்று இப்போது எமது நாட்டிலே பல சிறப்பான ஆலய வர்ண வேலைகளையும் ஓவியங்களையும் சிறப்புறச் செய்து கொடுக்கின்றார். அத்தோடு, பல மாணவர்களுக்கு ஓவியம் மற்றும் வர்ண வேலைகள் சம்பந்தமான பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார். எனவே, உங்கள் எண்ணங்களுக்கு ஏற்றவாறு ஓவியங்களையும் வர்ணவேலைகளையும் சிறப்புறச் செய்து நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.**

(52266) (26-24-11-14)

**ஆ.சுதன்**
**சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.**
**தொ.பே.: 077 9181016**

**YAARL TECH SYS.**
**AIMST University-Malaysia**
Sir Pon Ramanathan Road, Kaladdy Junction
(Near Jaffna University) - 0779 004129

**மாபெரும் கட்டணச்சலுகைகளுடன் பின்வரும் புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்**

| Professional Dip in Digital Video Production | Advance Dip in Multimedia & Film Technology | Advance Dip in 3D Modeling & 3D Animation | Advance Dip in Graphic Design & 2D Animation |
|---|---|---|---|
| Adobe Premier 6.5& Pro | Adobe After Effects 6.5 | Introuction to 3D Software | Adobe Photoshop CS2 |
| Pinnacle Studio 10 | Dicreet Combustion 4.0 | Alias Maya 7.0 | Adobe Illustrator CS2 |
| Hollywood & Indian Fx's | Particle Illusion 3 | 3D Object Modeling | Corel Draw 12 |
| Particle Illusion 3 | Swiss Max | 3D Charactor Modeling | Ulead Photo Impact 10 |
| 3D Album Pro | Cool 3D Studio | 3D Scenaries Modelling | Ulead Photo Express 4 |
| Cool 3D Studio | Sony Vegas 6.0 | 3D Object Animation | Ulead Cool 3d Studio |
| Bluff Titler DX 9 | Sony Sound Forge 8.0 | Poser 6.0 | Macromedia Flash 8 |
| VCD&DVD Converters | Inter Video Win DVD Creator | 3D Charactor Animation | Swiss Max |
| VCD & DVD Cutters | Intoduction to Poser 6,0 | Introduction to 3D's Max 8 | Intoduction to Maya 7.0 |

**கற்கை நெறிக்காலம் 20 நாட்கள். ஒரு பிரிவில் 5 பேர்- மட்டுமே.**
**இப் பிரிவுகளுக்கு மட்டும் அநுமதிக்கட்டணம் இலவசம்**
**100 % PRACTICAL & ONLINE CLASSES**




எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.
Distributor Eastern Province
Main Street, Maruthamunai.
Tel: 077 3040623, 077 6180567
Sole Agents:
Sari Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் அவலம் கண்டும் இன்னுமா பாராமுகம்?

ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பின்னர் சந்திர சேகர் இந்தியப்பிரதமராக இருந்தவேளை அது.... அப்போதும் பர்னாலாதான் தமிழகத்தின் ஆளுநர். கருணாநிதி தமிழக முதல்வர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழகத்தில் பரபரப்பாகப் பேசப்பட்ட சமயம் அது. விடுதலைப் புலிகளை காரணம் காட்டியே தி.மு.க. அரசைக் கவிழ்த்தது அப்போதைய இந்திய அரசு.

அதன் பின்னர் இலங்கைத் தமிழர் பிரச்சினையோ, விடுதலைப் புலிகள் விவகாரமோ தமிழக ஊடகங்களில் தலைப்புச் செய்தி ஆகியதில்லை.

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது.

இப்போது அதே பர்னாலா மீண்டும் தமிழக ஆளுநர். அதே கருணாநிதி தமிழக முதல்வர். மீண்டும் தமிழக ஊடகங்களில் இலங்கைப் பிரச்சினை தலைப்புச் செய்தியாகிறது.



இந்த இரு காலகட்டங்களுக்குமிடையே வேறுபாடு இல்லையா? ஏனில்லை? என்று கேள்வி எழுப்புகிறார் தமிழகத்தின் பிரபல ஆங்கிலப் பத்திரிகையின் செய்தியாசிரியர் ஒருவர்.

அன்று ஈழத்தமிழர் பிரச்சினை, விடுதலைப் புலிகள் விவகாரம் எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டுக்குழப்பினார்கள் தமிழக அரசியல் வாதிகள். இப்போது அவர்கள் சூடுகண்ட பூனைகள்.

அதனால் வெகுசுலபமாக விடுதலைப் புலிகள் விவகாரம், அகதிகள் வருகை, ஈழத்தமிழர் பிரச்சினை என்று மூன்று அங்கங்களாகப் பிரித்துக் கையாளத்தொடங்கிவிட்டார்கள் என்று கூறுகிறார் அந்தச் செய்தியாசிரியர்.

ராஜீவ் படுகொலைக்குப் பின்னரும் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வைகோ, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் ஆகியோர் விடுதலைப் புலிகள் ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை. தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு உதவ நிதி சேகரித்தது உட்பட ஈழப்பிரச்சினையில் வெளிப்படையாகவே களமிறங்கியிருந்தார். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவுடன் நட்புப் பாராட்டிய காலகட்டம் தவிர, மற்றைய காலங்களில் விடுதலைப் புலிகளைப் பாராட்டிப் பேசினார். விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல்.திருமாவளவன் ஆரம்பத்தில் அக்கறை காட்டாவிட்டாலும் பின்னர் ஈழத்தமிழர் பிரச்சினையை கையிலெடுத்தார். இறுதியாக ஜெயலலிதா எதிர்ப்பையும் கருணாநிதி நழுவல் போக்கையும் கைக்கொண்டு வந்தனர்.

இந்தச் சூழ்நிலையில்தான் இலங்கையிலிருந்து இந்த ஆண்டு தமிழகத்துக்கு ஈழத்தமிழர்கள் அகதிகளாக மீண்டும் குவியத் தொடங்கினார்கள்.

சுமார் ஐயாயிரம் பேர் அகதிகளாக வந்துள்ளனர் என்று சராசரிக் கணக்கெடுப்பு ஒன்றில் அறியமுடிகிறது. அகதிகள் வருகை அதிகரித்ததே தமிழக அரசியல்வாதிகளைத் தட்டியெழுப்பியுள்ளது.

அகதிகள் என்ற பெயரில் விடுதலைப் புலிகள் தமிழகத்துக்குள் ஊடுருவலாம் என்ற பத்தாண்டு காலப் பல்லவியையே மத்திய அரசு, மாநில அரசுக்கு ஓதியது. மாநில அரசும் கொஞ்சம் கவனமாக இருங்கள் என்று பொலிஸாரைக் கேட்டுக்கொண்டது. தமிழகப் பொலிஸாரும் 'சட்டையைக் கழட்டு உடலில் காயம் இருக்கிறதா?' என்று துருவித் துருவி ஆராய்ந்தார்கள். ஆனால், பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு எதிப்புக் கிளம்பியது. 'சட்டையைக் கழற்றச்சொல்லி சோதிப்பது அநாகரீகம். மனித உரிமை மீறல் என்று எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின.

'அப்படியொன்றும் நாங்கள் மோசமாக நடந்துகொள்ளவில்லை. சந்தேகத்திற்கு இலக்கான இளைஞர்களை மட்டுமே அதிகம் விசாரிக்கின்றோம். அவதிப்பட்ட பின்னர் அலறுவதை விட முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது இல்லையா? என்று கேட்டார் பொலிஸ் அதிகாரி ஒருவர்.

**இந்தியாவிலிருந்து**
**இந்திரஜித்**

அகதிகள் முகாம்களில் அடிப்படை வசதிகள் இல்லையென்று குரல் எழுப்ப ஆரம்பித்தன அரசியல் கட்சிகள். உலகத் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் கருணாநிதியின் ஆட்சியில் அகதிகள் அல்லற்படலாமா? என்று கேள்விகளும் முழங்கின..

கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் மண்டபம் அகதி முகாமுக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டனர். அதன்பின் தொடராகத் தலித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி சென்று பார்த்து பரபரப்பை ஏற்படுத்தினார். போதாக்குறைக்குச் சோனியாவின் காங்கிரஸ் கட்சிச் சட்டமன்ற உறுப்பினர் ஹசன் அலி கூட அகதி முகாமில் அக்கறை செலுத்திப் பார்வையிட்டார்.



இனியும் பார்த்துக் கொண்டிருந்தால் முதலுக்கே மோசம் என்று நினைத்தோ என்னவோ தமிழக முதல்வர் கருணாநிதி, அமைச்சர்கள் பெரிய கருப்பன் மற்றும் சுப.தங்கவேலன் ஆகியோரை மண்டபம் முகாமுக்கு அனுப்பினார்.

குறிப்பிட்ட சில குறைகளை மட்டுமே அமைச்சர்களிடம் கூறவேண்டும் என்று அகதிகளிடம் அதிகாரிகள் சாடைமாடையாகக் கூறியிருந்தனர் என்று 'தமிழன் எக்ஸ்பிரஸ்' சஞ்சிகை தெரிவித்திருந்தது. இதனை உண்மையாக்குவதுபோல் அகதிகள் தரப்பு கொஞ்சம் அடக்கியே வாசித்திருக்கிறது.

'மலசலகூடம், தெருவிளக்கு வசதி தேவை, அகதிப்பணம் போதாது என்று அகதிகள் முறையிட்டனர்.

'உலகத் தமிழர் தலைவரின் ஆட்சிதான் நடக்கிறது. உங்களுக்கு எல்லா வசதியும் கிடைக்கும் என்று கூறிவிட்டு அகதிகளிடம் விடைபெற்றனர் அமைச்சர்கள். இது நடைபெற்று மாதம் ஒன்றுக்கு மேலாகியும் நிலைமையில் பாரிய மாறுதல்கள் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை என்று மண்டபம் முகாம் வட்டாரங்கள் கூறுகின்றன.

அகதிகள் எண்ணிக்கை அதிகரிப்பதால் அதனைச் சமாளிக்க இந்தியாவில் உறவினர்கள் இருந்தால் அவர்களுடன் சென்று அகதிகள் தங்கலாம் என்று இப்போது ஒரு சலுகை வழங்கப்பட்டுள்ளதாம். அகதிகள் எண்ணிக்கை மலையென உயரத்தொடங்கியதும் தமிழக மக்களிடமும் இது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள [illegible] மதுரை சமூகவியல் மருத்துவர் [illegible] தமிழக மக்களைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகள் விவகாரம் என்று இதனைப் பார்க்காமல் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றனர் என்ற கவலையே அவர்களிடம் எழுந்துள்ளது என்கிறார் அவர்.

1983ஆம் ஆண்டுக்குப் பின் இந்தியாவில் தங்கிய ஈழத்தமிழர்களுடன் தமிழகத் தமிழர்கள் வியாபாரத் தொடர்பு முதல் திருமண உறவு வரை ஒன்றுக்குள் ஒன்றாகிவிட்டனர். ஈழத் தமிழர் ஒருவரின் தாய் என்பவர் தமிழகப் பெண்ணின் மாமியாராகிறார். ஆகவே, இலங்கையில் தமிழருக்கு ஏற்படும் ஆபத்து தமிழக வீடுகள் பலவற்றிலும் எதிரொலிக்கிறது.

இவ்வாறு சுட்டிக்காட்டுகிறார் அந்த மருத்துவர். ஆனால், இந்த விஷயத்தில் அகதிகளுக்கு உதவவேண்டும் என்று கருணாநிதி நினைக்கிறார். ஆனால், விடுதலைப் புலிகள் விவகாரத்தில் ஒதுங்கி இருக்கவே விரும்புகின்றார் என்கின்றன தி.மு.க. வட்டாரங்கள். அத்துடன், ஈழத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசின் நிலைப்பாட்



டோடு இணங்கிச் செல்லவேண்டிய கட்டாயமும் அவருக்கு உண்டு.

சோனியாவின் ஆதரவுடன் இயங்கும் மத்திய காங்கிரஸ் அரசு, அந்த அரசின் தயவுடனும் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடனும் உள்ள மாநில அரசு காங்கிரஸையோ, மத்திய அரசையோ பகைக்கமுடியாது என்ற யதார்த்தம் ஒருபுறம், தி.மு.கவை கூட்டணியிலிருந்து விலக்க மறுத்த அப்போதையை பிரதமர் குஜ்ராலை ஆதரவை விலக்கிக் கவிழ்த்து காங்கிரஸ் தந்த வடு மறுபுறம். இரண்டுக்கும் இடையே விழிபிதுங்கி நிற்கிறார் கருணாநிதி.

இதனைத் தனக்குச் சாதகமாக்குகிறார் ஜெயலலிதா. ஆட்சியில் இல்லாததும் அவருக்கு ஒரு வகையில் சாதகமாகவே உள்ளது. தி.மு.க. தலைவர் கருணாநிதி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஏடாகூடமாக ஏதாவது செய்தோ அல்லது பேசியோ வம்பில் மாட்டமாட்டாரா என்று காத்திருக்கிறார் ஜெயலலிதா.

மீதியுள்ள கட்சிகளில் பாட்டாளி மக்கள் கட்சி இப்போது தி.மு.க. கூட்டணியில் உள்ளது. அதன் நிறுவுநர் டாக்டர் ராமதாஸின் மகன் டாக்டர் அன்புமணி மத்திய சுகாதார அமைச்சர். ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள அவருக்கு தலைவலி வந்துவிடக்கூடாது என்பதில் டாக்டர் ராமதாஸ் கவனமாக இருக்கிறார். 'தார்மீக ஆதரவு' என்பதைத் தாண்டி 'தடாலடியாக' எதனையும் செய்ய அவர் தயாரில்லை என்றே கருதவேண்டியுள்ளது. ம.தி.மு.கவுக்கு இப்போது அந்தக் கவலை ஏதுமில்லை. அதனால் வைகோ இலங்கைத் தமிழர் பிரச்சினையில் புகுந்து விளையாடுகிறார். இவரது நிலையில் இருக்கும் தொல்.திருமாவளவன், வீரமணி, பழ.நெடுமாறன் ஆகியோரும் தமது பங்குக்கு ஈழத்தமிழர் பிரச்சினையில் நேசக்கரம் நீட்டியுள்ளனர்.

இதற்கிடையில் அக்னி ஏவுகணை, இன்சாட் செயற்கைக்கோள் ஏவும் முயற்சி ஆகியவற்றில் தோல்வியைத் தழுவியதால் தார்மீக ரீதியில் ஆட்டம் கண்ட மத்திய அரசு, மும்பைத் தொடர் குண்டு வெடிப்புகளால் நிலைகுலைந்துள்ளது.

இதில் உச்சக் கட்டமாக, நூற்றுக்கணக்கான பொதுமக்களைக் கொன்ற தீவிரவாதிகளுடனும் உதவி செய்த பாகிஸ்தானுடனும் எல்லாவற்றையும் மறந்து நட்புக்கரம் நீட்டலாமென்றால் ஒரேயொரு அரசியல் தலைவரின் கொலைக்காக ஈழத்தமிழரின் அவலத்தைக் கண்டும் காணாமலும் எந்தவிதத்தில் நியாயம்? என்று நியாயமான கேள்வி சமீப நாள்களாக இந்தியாவில் குறிப்பாகத் தமிழகக் காங்கிரஸாரிடம் எழுந்துள்ளது. இக்கேள்வி விஸ்வரூபம் எடுக்குமா? அல்லது நசுக்கப்பட்டுவிடுமா? இதற்கான பதிலிலேயே ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழகத்தின் நிலை தெரியவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரம்புக்வெலவின் கண்டி இல்லத்துக்கு அருகே 2 கிளைமோர்கள் மீட்பு! 10 தமிழர்கள் கைது!!

கொழும்பு,ஜூலை 16

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் கண்டி இல்லத்தின் சுற்றாடல் பகுதியில் இருந்து கடந்த வியாழன் இரவு சக்தி வாய்ந்த இரண்டு கிளைமோர் குண்டுகளை பொலிஸார் மீட்டிருக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தமிழர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும், அமைச்சருமான ரம்புக்வெல வியாழனன்று கண்டிக்குச் செல்ல இருந்தார். எனினும், பின்னர் முக்கிய அலுவல்களின் நிமித்தம் அவர் கொழும்பிலேயே தங்கியிருந்தார். அச்சமயத்திலேயே அவரது கண்டி இல்லத்துக்கு அருகே புதைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கிளைமோர் கண்ணிகளை பொலிஸார் மீட்டனர் என்று கூறப்படுகிறது.

கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டிருப்பதை அமைச்சர் ரம்புக்வெல ஐ.ரி.என். தொலைக்காட்சிக்கு உறுதிப்படுத்தினார்.

மீட்கப்பட்ட கிளைமோர் குண்டுகள் பின்னர் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் வெடிக்க வைக்கப்பட்டன.

அமைச்சரின் கண்டி இல்லத்தின் சூழலில் நேற்று முன்தினம் காலை முதல் படையினரும் பொலிஸாரும் இணைந்து பெரும் தேடுதல் நடத்தினர். அப்போது அந்தப் பகுதியில் வெள்ளி போன்ற பொருள் ஒன்றும் மீட்கப்பட்டது. சுமார் 10 தமிழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். (ஐ)

## பின்னுறுதித் தீர்வை

*யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்*

சுந்தரலிங்கம் பெண் மஞ்சுளா
நவக்கிரி, புத்தூர் மேற்கு,
புத்தூர்.

வழக்காளி

வழ.இல.மணநீக்கம் / 665

எதிராக

வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்,
நவக்கிரி,
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

எதிராளி

இவ்வழக்கு 2006ஆம் ஆண்டு ஆனி மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி சி.வீரகத்திப்பிள்ளை அவர்களும் பிரசன்னமாயிருக்க மன்றின் கட்டளைப்படி 08.05.2006ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் அழைப்புக்கட்டளை விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்குப் பதில் சேவகம் செய்யப்பட்டு திரும்பல் திகதியாகிய 18.05.2006ஆம் திகதி எதிராளி மன்றில் சமுகமளிக்காமையால் ஒருமுக விளக்கத்திற்கு திகதி நியமிக்கப்பட்டதற்கு அமைய இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக் கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது, அணைக்கப்பட்ட வ1 ஆவணம் வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் மன்றில் பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப்பெற தகுதியுடையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 1994ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியை வேண்டுமென்றே விட்டுப் பிரிந்து வன்ம உறவறுப்பு செய்தார் என்ற அடிப்படையில் இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் பிறந்ததாக குறிப்பிடப்படும் தர்சிகா என்ற பிள்ளையின் பாதுகாப்பும் பராமரிப்பும் தொடர்ந்தும் வழக்காளியிடம் இருக்கலாமென்றும் வெளிப்படுத்தி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன் தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2006ஆம் ஆண்டு ஆனி மாதம் 22ஆம் திகதி

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி.

நீதிமன்றின் கட்டளைப்படி
து.சிறீமோகன்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

*வரைந்தது*
*சி.வீரகத்திப்பிள்ளை*
*வழக்காளியின்*
*சட்டத்தரணி.*

## மரண அறிவித்தல்கள்

### செல்வி கணவதிப்பிள்ளை வனசாம்பாள் (வனசம்)

சுன்னாகம் மேற்கு, பருத்திக்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கணவதிப்பிள்ளை வனசாம்பாள் (வனசம்) 07-07-2006 வெள்ளிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் கணவதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்)- இராசமணி தம்பதியரின் அன்பு மகளும் புவனேந்திரன் (அப்பன்-ஜேர்மனி), விநாயகேந்திரன் (செல்லம்-கனடா), டாக்டர் யோகேந்திரன் (கண்ணன்-கனடா), விக்கினேஸ்வரி (ஈசன்), விநாயகஜோதி (சோதி கடை), சசிலேகா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17-07-2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் பருத்திக்கலட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பருத்திக்கலட்டி,**
**சுன்னாகம் மேற்கு.** (52301)(26-11-17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### நடராஜா கண்மணியம்மா



கல்வியங்காட்டினைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கண்மணியம்மா (கண்மணி) 13-07-2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் நடராஜா (பண்டிதர்)வின் அன்பு மனைவியும் சிவயோகநாதன் (சுவிஸ்), கிருபாகரன் (கனடா), நகுலேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் கிருஷ்ணகுமார் (கனடா), சுசீலா(சுவிஸ்), நந்தினி(கனடா) ஆகியோரின் மாமியும் கீர்த்திகா, சர்மிகா, டினோகா, சங்கர், கீர்த்தனா, அஜித் தனா, துளசி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-07-2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விளையாட்டரங்க வீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.** (52300)(11-17)

தகவல்:
**இ.வன்னியசிங்கம்.**


மெகா
60% நேரடிக் கட்டணக்கழிவு
LIMITED STUDENTS ONLY
விசேட சிறப்புச் சலுகை



இம்முறை A/L பரீட்சை எழுதும் மாணவர்கள் மற்றும் கணினி உயர்கல்வியில் ஆர்வமுடையவர்கள் அனைவரும் பயனடையும் விதமாக ஏசியன் கொம்ப்யூட்டர்ஸ் மாணவர்கள் தெரிவு செய்யும் பாடநெறிகளுக்கு 60% நேரடிக் கட்டணக்கழிவை வழங்குகின்றது. அத்துடன் இலவச பாடநூல்கள், தவணைமுறையில் கட்டணங்கள் மற்றும் குறுகிய காலத்தில் பாடநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பும் வழங்கப்படவிருக்கின்றது. இச்சலுகை பற்றிய மேலதிக விபரங்களையும், இலவச ஆலோசனைகளையும் கீழ் கண்ட எமது பயிற்சி நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

EDUCATION PARTNERS
CSC COMPUTER EDUCATION ISO 9001:2000 Certified Institution
Tally Graduate Academy - India
TATA NEXT GENERATION
Computer Education for Success

1. Advanced Diploma in Software Engineering
2. Diploma in Office Automation
3. Professional Diploma in Graphic Design
4. Adv. Dip. In Macromedia Applications
5. Adv. Diploma in Hardware & Networking
6. Honours Diploma in Computer Application
7. Diploma in PC Professional
8. Dip. in Advanced Software Technology
9. Diploma in Web Design & Development
10. Tally Graduate Training

ASIAN COMPUTER SYSTEMS

யாழ்ப்பாணம் — 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677
யாழ்ப்பாணம் - CSC — 101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 6196
நெல்லியடி — கொடிகாமம் றோட், நெல்லியடி. 077-3122198
சாவகச்சேரி — கண்டி வீதி, சாவகச்சேரி. 077-3039587


## அதிபர்களின் பதவி உயர்வுக்கான நேர்முகப்பரீட்சை

அச்சுவேலி,ஜூலை16

அதிபர் சேவை தரம் 3இல் உள்ளவர்களுக்கு அதிபர் சேவை தரம்2: IIஇற்குப் பதவி உயர்வு வழங்குதவற்கான நேர்முகப் பரீட்சைகள் கல்வி அமைச்சில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளன.

முன்னரே கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் சேவை மூப்பு, திறமை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு அதிபர்கள் சேவை தரம் 3இல் உள்ளவர்கள் அதிபர் சேவை தரம் 2: II ,இற்குப் பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சின் அதிபர் சேவை பிரிவு உயர் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (11)

## திறப்புவிழா

வலி. தென் மேற்கு, ஜூலை16

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையில் ''நிகொட்'' திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத் திறப்பு விழா கடந்த 10ஆம் திகதி சிறப்புற நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொண்டு புதிய மாடிக் கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் - இவ் வித்தியாசாலையின் வளர்ச்சியிலும், அபிவிருத்தியிலும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஒன்றிணைந்து அக்கறையுடன் செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது.

குறிப்பாக, பெற்றோர்கள் தம்மாலான பங்களிப்பை வழங்கி பாடசாலையை கல்வித்தரத்தில் முன்னேற்றுவதற்கு தமது ஒத்துழைப்பை நல்கிவருவது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தப் புதிய கட்டடத்தை நன்கு பயன்படுத்தி பராமரித்து வருவதுடன் இக்கட்டடத்தை பேணிப் பாதுகாத்து தாம் பெற்ற வசதியை எதிர்கால சந்ததியினரிடம் வழங்க வேண்டும்- என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட யாழ். கல்வித் திணைக்கள பொறியியலாளர் கு. சிவபாலன், ''நிக்கொட்'' மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் க. நவரட்ணராசா, சண்டிலிப்பாய்கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் அதிபர் அ.நடராசா ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். சுமார் 60 இலட்சம் ரூபா செலவில் இந்த மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

(135)

## நோர்வேயை...

*[05ஆம் பக்கத் தொடர்ச்சி]*

*தெரிவிப்பதே பயண நோக்கம் என்று சொல்லப்பட்டாலும், உண்மை அது இல்லையாம்.*

*பாகிஸ்தானிடம் ''வான்வெளியைக் கண்காணிக்கும் ராடார் வேண்டும்'' என இலங்கை அரசு கேட்டிருந்ததாம். இரு நாடுகளும் இராணுவ நடவடிக்கைகளில் ஒன்றுசேர்வது எதிர்கால ஆபத்தாக முடியலாம் எனக் கருதிய இந்தியா, தானே முன்வந்து ராடர்களை இலங்கைக்கு வழங்கமுடிவெடுத்ததாம். இதனை முறைப்படி ஒப்படைக்கவே சரண் சென்றாராம். இந்தத் தகவல் தெரிந்து தமிழகப் புலி ஆதரவுத் தலைவர்கள் துள்ளிக் கொண்டு இருக்கிறார்களாம் - சரோஜ் கண்பத்.*

*இலங்கைக்குச் சென்ற ஒரு பத்திரிகையாளர், விடுதலைப் புலிகள் வட்டாரங்களைச் சந்தித்தபோது - அதிர்ச்சிகரமான ஒரு தகவல் சொன்னார்களாம். ''விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்துசென்ற சில தலைவர்களுக்கு இலங்கை அரசு உதவுகிறதோ இல்லையோ... இந்தியாவின் 'றோ' அமைப்பு பின்னணியிலிருந்து உதவுகிறது'' எனப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகின்றனராம்.*

*நன்றி: ஜூனியர் விகடன்.*


தேவை பார்மசிஸிற்

உடன் சுயதரவுகளுடன் தொடர்பு கொள்ளவும்.

''சிவன் மாளிகை லிமிட்டெட்''
இல.166, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.
(52299) தொ.பே.இல. 2996.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூக சேவையாளர் அமரர் கந்தையா இராமநாதன் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பெ.கனகசபாபதி சுடர் ஏற்றுவதையும் அம்பாள் ஆலய பரிபாலன சபை உபதலைவர் சி.மாதவகுமார், பிரதமகுரு ச.ஸ்ரீசந்தனக்குருக்கள், வளர்மதி நிறைவாழ்வக போஷகர் அ.பஞ்சலிங்கம், கோண்டாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மகாவித்தியாலய அதிபர் ச.வாமதேவன் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: இனியவன்)*

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 16

பருத்தித்துறை, பொலிகண்டி குழந்தையேசு தேவாலய திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலி நற்கருணை வழிபாடு என்பன இடம்பெறும்.

மறுநாள் 22 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு நவநாள் திருப்பலி, திருச்சொரூபபவனி என்பன இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை16

ஆனைக்கோட்டை காத்தவராயர் ஆலயத்தின் வருடாந்த வேள்வியாகம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. (204-185)

* * *

அரியாலை, ஜூலை16

ஈச்சமோட்டை, கலட்டிபுலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இந்தத் திருவிழா தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும். (204-17)

* * *

சுழிபுரம், ஜூலை16

பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமான் கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சங்காபிஷேக கிரியைகள் பிரம்ம ஸ்ரீ ரவிக் குருக்கள் தலைமையில் நிறைவுசெய்யப்படும். நண்பகல் அன்னதானம் நடைபெறும். பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இவ் வைபவத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். (28)

* * *

வடமராட்சி, ஜூலை16

அல்வாய் கிழக்கு மாலிசந்திப் பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (204-173)

தென்மராட்சி, ஜூலை16

சரசாலை தெற்கு மகிழ்நின்ற வளவு இராமாவில் பிள்ளையார் ஆலய மணவாளக் கோலவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் நடைபெற்று திருஊஞ்சலும்விநாயகப்பெருமான்திருவீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும்.

விழாக் கிரியைகள் சிவஸ்ரீ சு.நடராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறுமென ஆலய குரு சிரியா சிரோமணி சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக்குருக்கள் தெரிவித்துள்ளார். (204-117)

* * *

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் வருடாந்த சின்ன ஆண்டியப்பர் பூசை இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனையொட்டிவிசேட பூசை அபிஷேகங்கள் இடம்பெறும். (173)

* * *

வலி.தென்மேற்கு,ஜூலை16

பண்டத்தரிப்பு காலையடி ஞானவேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேகம் தின அஷ்டோத்தர சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி சங்கபிஷேகம், விஷேடபூசை, சண்முக அர்ச்சனை, திருவூஞ்சல் ஆகியன நடைபெற்று சுவாமி திருவீதி உலாவரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (204-135)

* * *

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய வருடாந்த பெந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 24 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணைத் திருவிழாவும் 25 ஆம் திகதி காலை 7மணிக்கு திருநாள் திப்பலியும் அதனையடுத்து திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளன.

யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜே.நிக்கலாஸ் அடிகளார் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார். இதற்கான ஏற்பாடுகளை சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு ஜூட் நிக்சன் அடிகளார் செய்துள்ளார். (204-135)

## அழைப்பு

அன்புடையீர்,

மறைந்த எனது தந்தை, கலைஞர் , கவிஞர்

**பிரான்சிஸ் மிக்கேல்பிள்ளை**


அவர்களின் மறைவின்13ஆவது ஆண்டு நினைவு மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

ஒன்று கூடும் இடம்:
குருநகர் சனசமூக நிலைய
கலாசார மண்டபம்,
காலம்: 16.07.2006 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 11 மணி (52127)

கவியரசரின் மைந்தன்
மிக்கேல் யேசுதாசன்,
யேசுக்குட்டி(சந்திர சூரியன்).

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
20 - 02 - 1946



விண்ணில்
07 - 07 - 2004

**அமரர் ஆறுமுகம் சிவராஜா**

(மல்லிகா மிக்ஷர் உரிமையாளர், பிரபல தொழிலதிபர்)

சந்திரனே இல்லாத வானமொன்று
சகத்திலே இருப்பதனால் அழகும் உண்டோ?
சுந்தரனே நீ பிரிந்து போன பின்பு
சுகமும் உண்டோ வாழ்வும் உண்டோ சொல்லும் ஐயா?
அந்தரத்தில் நாம் பிரிந்து அல்லலுறுகிறோம்
உம் திருமுகம் தான் தினம்காண ஏங்குகிறோம்!

*இல. 17, சங்கரப்பிள்ளை வீதி,*
*மானிப்பாய்.* (52304)

உன் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன்.

## விளையாட்டு விழா

கைதடி கலைநகர் ஜான் மழலைகள் கல்விப் பூங்கா மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்விப் பூங்கா மைதானத்தில் கல்விபூங்கா வளர்ச்சிக்குழுத் தலைவர் சி.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்து கொள்வார். (75)

**BARATHY**
சித்தன்கேணி
G.AQ., B.A. Part I Paper Class
மற்றும் துரிதமீட்டல்
BY: Mr.K.Nishanthan (Dip. in Eng.)
ஆரம்பம்: 17.07.2006 திங்கள்
At 5 p.m.
(திங்கள், செவ்வாய் 5 p.m.)
Spoken English with Grammar
ஆரம்பமாகி விட்டது.
திங்கள், செவ்வாய் 4 p.m

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
வடிவேல், மனோரமா நடித்த
இம்சை அரசன் 23ஆம் புலிகேசி
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-47139)

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்
ரிச்சட், மதுமிதா, நாசர் நடித்த
**நாளை**
(சி-49188)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி விக்கிரமாராச்சி

யாழ்ப்பாணம்,கச்சேரி கிழக்கு ஒழுங்கை, 14ஆம் இலக்கத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், நயினாதீவை அடியாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி விக்கிரமாராச்சி நேற்று (15.07.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற விக்கிரமாராச்சி (மாத்தறை) அவர்களின் அன்பு மனைவியும் ஜெயபாலனின் பாசமிகு தாயும் கிருஷாந்தியின் (புஷ்பா) அன்பு மாமியும் தனலஷ்மி (கொழும்பு), காலஞ்சென்ற தனபாலசிங்கம், தயாநிதி (தாதி - யாழ். போதனா வைத்தியசாலை), லோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் கே.கே. இரத்தினசிங்கம் (பிரதம ஆசிரியர், சுடர் ஒளி), கோமளேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற குணபாலசிங்கம், (J.P.) சுசீலா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்கபல் 4 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*No.14, Kachcheri East Lane,*
*Jaffna.*

தகவல்:
*மகன்.*

## பாலகரன் அஜந்தன்

தெய்வமனை, அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அஜந்தன் அவர்கள் நேற்று (15.07.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பாலகரன் -இளங்கோதை (மருந்துக் கலவையாளர் - இந்திராணி வைத்தியசாலை - வல்வெட்டித்துறை) தம்பதியரின் அன்பு மகனும் ஜீவலக்சுமிகா, ஆர்ணீகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயக்குமாரின் (பிரான்ஸ்)அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10 மணியளவில் அல்வாய் பங்குவம்படி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'தெய்வமனை'*
*அல்வாய்.* (52307)

தகவல்:
*தி.திருஞானசேகரன்*
*(ஆசிரியர்).*

## சின்னையா நடராசா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நடராசா அவர்கள் நேற்று (15.07.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தாதேவி, சற்குணவதி, சற்குணராசா, தியாகராசா, சுபாஸ்கரன், சற்குணசீலன், செல்வராசா, சிறிகரன் அமிர்தாப் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசலிங்கம், (யாழ். போதனா வைத்தியசாலை), கணேசன், விஜயராணி (லண்டன்), அகல்யா, யோகராணி, நேசராணி ஆகியோரின் பாசமிகு மாமனும், வாகீசன், வித்யா, கௌதமன், கயேந்தினி, கதிர்ச்செல்வன், நிரூபன், மைதிலி, நிசாந்தினி, சுபாசினி, அஸ்வினி, மேல்றோய், றொசான், விதுஷா, விதுஷன்,வினுஷன், திவ்யா, கிசாந்தினி, துயசிகா, பியிதாப் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*301, கண்டி வீதி,*
*அரியாலை.* (52308)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## திருமதி இரங்கநாதன் செல்வபாக்கியம்

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது மானிப்பாயை இருப்பிடமாகவும் கொண்ட திருமதி இரங்கநாதன் செல்வபாக்கியம் அவர்கள் நேற்று(15.07.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற க.இரங்கநாதனின் அன்பு மனைவியும் ராஜ்குமார்(பிரான்ஸ்), திருமதி ராஜினி ஜெயதாசன் ஆகியோரின் அன்புத் தாயும் செ.ஜெயதாசன், திருமதி சர்மிளா ராஜ்குமார்ஆகியோரின் அன்பு மாமியும் சயிந்தன், தாமீரா, கௌதமி, ஆர்த்தி, அரிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இணுவில் வீதி, மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிப்பிலி மயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஜெயா* (Action Faim).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு, ஐ.தே.க. பங்கேற்காத சர்வகட்சி மாநாட்டால் பயனில்லை!

## நாட்டுப்பற்றாளர் தேசிய இயக்கம் கருத்து

கொழும்பு, ஜூலை16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் பங்கேற்காத சர்வகட்சி மாநாட்டால் பயனேதும் கிட்டாது.

இவ்வாறு நாட்டுப்பற்றாளர் தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர - இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

விடுதலைப் புலிகள் அமைப்புடனான சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்ளும் அரச தரப்புப் பிரதிநிதிகள் நாட்டின் உண்மையான பிரச்சினையைத் தெளிவாகப் புரிந்துகொள்ளாது பேச்சுவார்த்தைகளை வழமையான சந்திப்பாகக் கருதிச் செயற்படும் நிலையால் சமாதானப் பேச்சுக்களால் எந்தவித பயனும் கிட்டப் போவதில்லை. ஐ.தே.கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கு கொள்ளாத சர்வகட்சி மாநாடு உண்மையான சர்வகட்சி மாநாடாக அமையமாட்டாது.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான வழிவகை குறித்து ஆராயாது காலத்தை இவ்விதம் விரயம் செய்வது நாடு மிக விரைவில் பாரிய அழிவைச் சந்திப்பதற்கு வழிவகுப்பதாகவே அமையும்.

விடுதலைப் புலிகள் எத்தகைய தரப்பொன்றினாலும் முன் வைக்கப்பட்டும் தீர்வு யோசனைகளை ஏற்றுக்கொள்வரேன நம்ப இயலாது.

நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்படவேண்டுமானால், சர்வதேச சமூகம் மற்றும் நோர்வே ஆகிய தரப்புகள் அனுசரணைப் பணியிலிருந்து வெளியேற்றப்படவேண்டும். இத்தரப்புக்கள் இதுவரை காலமும் பயங்கரவாதிகள் தமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்கே வழியமைத்துக் கொடுத்துள்ளன. அது மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் தனிநாடொன்றை உருவாக்கும் முயற்சிக்கும் உதவி வந்துள்ளன.

உலகின் பல நாடுகள் விடுதலைப் புலிகளைத் தத்தமது நாடுகளில் தடை செய்திருக்கும் நிலையிலும் இலங்கை அரசு இது வரை விடுதலைப்புகளைத் தடை செய்ய முன்வரவில்லை. விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு இட்டுச் செல்லும் நோக்கிலேயே இலங்கை அரசு அவர்கள் மீது தடை விதிக்கவில்லை என்ற காரணம் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுகளுக்கு முன்வரப்போவதில்லை என்பது தெளிவான தொன்றாகும் - என்று கலாநிதி குணதாச அமரசேகர குறிப்பிட்டுள்ளார்.

## சில்லாலை தெற்கு வீதியை புனரமைக்கக் கோரி மகஜர்

வலி. தென் மேற்கு, ஜூலை16

சில்லாலை தெற்கு அம்மன் வீதியின் ஒரு பகுதியும், அதனோடு இணைந்துள்ள வீதியான சென்.ஜேம் வீதியும் கடந்த 40 வருட காலமாக திருத்தப்படவில்லை.

அம்மன் வீதியின் ஒரு குறிப்பிட்ட பகுதி மட்டும் கடந்த ஆண்டு வலி.தென் மேற்கு பிரதேச சபையினால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது என்றும்-

எஞ்சிய பகுதியும், அதனோடு இணைந்துள்ள சென்.ஜேம்ஸ் வீதியும் இதுவரை திருத்தப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

இதற்கிடையில் - போக்குவரத்து மிகவும் சீர்கெட்ட நிலையிலுள்ள இவ்வீதியை விரைவில் புனரமைப்புச்செய்து தருமாறு சில்லாலை தெற்கு சென்.ஜேம்ஸ் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் கி.எட்வேர்ட் பங்கிராஸ், வலிதென்மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடிதத்தின் பிரதி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (135)

# கொழும்பில் சிகிச்சை முடிவடைந்து வன்னி திரும்பினார் தயா மாஸ்டர்

கிளிநொச்சி,ஜூலை16

இருதய நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் உடல் நிலை தேறி நேற்று வன்னி திரும்பினார்.

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட தயா மாஸ்டர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார். கடந்த புதன்கிழமை அவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் வழித்துணையுடன் தரை வழியாக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவருக்கு அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

உடல் நிலை தேறிய அவர் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து புறப்பட்டு தரை வழியாக மாலை கிளிநொச்சி வந்துசேர்ந்தார். அவர் தற்சமயம் வீட்டில் ஓய்வு எடுத்து வருகிறார். (1)

## கூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை16

'கூடம்' காலண்டிதழின் கூடல் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு யாழ். வேம்படி வீதியில் திருக்குடும்பக் கன்னியர்மட பாடசாலை முன்பாக உள்ள கட்டடத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், சாந்தி சச்சிதானந்தம், தெ.மதுசூதனன், பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா, சி.பீஷ்மன், ச.சத்தியேந்திரா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா ''பின்நவீனத்துவம்'' என்ற பொருளில் கருத்துரை ஆற்றவுள்ளார்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழே வீழ்ந்து வெடித்தது. இதில் அலுவலகக் கட்டடத்தின் முன்புறத்திலும் பெயர்ப்பலகையிலும் குண்டுச் சிதறல்கள் பட்டுச் சேதம் ஏற்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து படையினரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் அங்கு வந்து பார்வையிட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (8-68)

## மறைமுக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வாகனேரி குளத்துமடு மோதலில் படையினர் எவரும் கொல்லப்படாமல் இருந்திருந்தால் கருணா குழுவினரே தாக்குதலை நடத்தியதாக வழமை போன்று படைத்தரப்பினர் தெரிவித்திருப்பர் என தமிழ்ச் செல்வன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் படைத்தரப்பில் 12 பேரைக் கொன்று அதிகாரி ஒருவரை சிறைப்பிடித்ததன் மூலம் போர் நிறுத்த உடன்படிக்கைக் காலத்தில் நிகழ்ந்த ஒவ்வொரு தாக்குதலையும் சிறீலங்காப் படையினரே நிகழ்தினர் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளனர் என்று தமிழ்ச் செல்வன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கருணா குழுவை நிராயுதபாணிகளாக மாற்றுவது இருமுனை யுத்தத்திற்கு வழிகோலும் என இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஹோகலிய ரம்புக்வல கூறியிருப்பது இலங்கை அரசின் யுத்த முன்னெடுப்பை புலப்படுத்தியிருப்பதாகவும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர்கண் காணிப்புக்குழுவிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

## காலங்கடந்த வங்கிக் கணக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சொத்துக்கள் முடக்கப்படுவதை தவிர்க்கும் நடவடிக்கைகளைத் நாம் மேற்கொண்டு வருவதாகவும் அதற்கு வாடிக்கையாளர்களின் உதவி தமக்கு பெரிதும் தேவை என்றும் இலங்கை வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எமது வங்கிக் கிளைகளில் செயற்படுத்தப்படாத நிலையில் உள்ள கணக்குகளின் விவரங்களை நாம் தற்போது திரட்டி வருகின்றோம். அத்துடன் இவை முடக்கப்படாமல் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் நாம் எடுத்து வருகின்றோம். இதற்கு வாடிக்கையாளர்களின் உடனடி ஒத்துழைப்பு தேவை.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக வீங்கிக் கிளைகளுடன் தொடர்புகளைப் பேணாத வாடிக்கையாளர்கள் பின்வரும் நடவடிக்கைகளில் ஏதாவது ஒன்றைச் செய்வதன் மூலம் தமது சொத்துக்கள் முடக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

அவையாவன:-

- ✦ வாடிக்கையாளர்களின் கணக்கில் வைப்புகள் அல்லது மீளப்பெறுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ✦ முகவரி மாற்றத்தை அறிவித்தல் அல்லது வேறு எழுத்துமூலமாக ஆவணங்களை வங்கிக்கு அனுப்பிவைத்தல்.
- ✦ வைப்புப் புத்தகத்தைப் பதிவுக்குச் சமர்ப்பித்தல்
- ✦ பாதுகாப்பு பெட்டகத்திற்கான காலம் பிந்திய வாடகையைச் செலுத்தல்.

**உறவினர்கள் தொடர்புகொள்ளலாம்**

இவைகளைச் செய்ய முடியாது போனால் வாடிக்கயாளர்களின் உறவினர்கள் வங்கியுடன் தொடர்பு கொண்டு வாடிக்கையாளர் பற்றிய விவரங்களை சமர்ப்பிப்பதன் மூலமோ அல்லது சிறு தொகைப் பணத்தை அவர்களின் கணக்கில் வைப்பிலிடுவதன் மூலமோ அவற்றைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இது தொடர்பாக மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் தம்முடன் நேரடியாகவோ அல்லது bocagmnp@hotmial.com என்ற மின் அஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொள்ள முடியும் என இலங்கை வங்கியின்வடவலய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் மேலும் தெரிவித்தார்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் போட்டிகள் ஆரம்பமாகின. போட்டிகள் இரண்டு தினங்கள் நடைபெற்ற நிலையில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் றியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம விடுத்த உத்தரவையடுத்து அவை இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அம்பாறை, திருகோணமலைப் பிரதேச பாடசாலைகள் சில வவுனியாவுக்கு வரத் தயக்கம் தெரிவித்ததையடுத்தே ஆளுநர் போட்டிகளை நிறுத்தியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் இந்தப் போட்டிகள் திருகோணமலையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளை நடத்த இணைப்பதிகாரி ஒருவர் ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் -

போட்டிகள் நடக்க வசதியாக மச்சர் ஸ்ரேடியத்தில் நிலைகொண்டுள்ள பொலீஸார் அகற்றப்படவுள்ளார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1-202)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவஞானபூரணி வைத்தியலிங்கம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானபூரணி வைத்தியலிங்கம் அவர்கள் நேற்று (15.07.2006) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு வைத்தியலிங்கம் (உரிமையாளர் வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், திருநிலைநாயகி, கே.வி.மகேந்திரன் (சட்டத்தரணி), விமலநாயகி, சொரூபராணி, தவராணி, கமலராணி, இந்திராணி, கே.வி.சுசீந்திரன், கே.வி.இரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கீர்த்திசிங்கம், காலஞ்சென்ற சிவராஜா, கனகரட்ணம், துவாரகன், சண்முகலிங்கம், சிறீஸ்கந்தராஜா, நந்தினி, பத்மலோஜினி, ஆகியோரின் அன்பு மாமியும், சசிகலா, சந்திரிகா, மோகனதாஸ், மகிந்தன், சாந்தினி, சேனாதிபதி, நரேஷ், நரேந்திரா, உமா, செந்தூரன், சைலேந்திரன், ஆரூரன், பிரதாயினி, பிரசாந்தன், பிரகலாதன், பிரவீன், அபிராமி, சஞ்சீவன், சரண்யா, வர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிகிரியைகளுக்காக யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும்.

இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*110, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*021 222 6999.*

தகவல்:
**மச்சான், மருமக்கள்**
*10/4, 2/1 உருத்திரா மாவத்தை,*
*கொழும்பு - 06.*
*011- 2361448.*


**விற்பனையாகின்றன**

2006.தரம்:5 மாணவருக்கான புலமைப்பரிசில்
உங்கள் பிள்ளைகள் சிறப்பு சித்திபெற
புதிய உத்திகளோடு எதிர்பார்ப்பு வினாக்களுடன்
திரு.கணேசலிங்கம் ஆக்கிய
**வெற்றித்தேர்வு-8.9.10**
இரண்டாந்தவணை அலகுகளை பூரணமாக உள்ளடக்கிய இலங்கை முழுவதும் விற்பனையாகின்றன!!
**தரம்:4.5.6.7.8.10**
2ம்தவணைப்பரீட்சைவினாப்பத்திரங்கள
**தரம்:9,11** மாதிரி வினாப்பபத்திரங்கள்
இப்பொழுது விற்பனையாகின்றன....
பூபாலசிங்கம் புத்தகசாலை.யாழ் நகர்.
கனகா-புத்தகசாலை. திருநெல்வேலி.
மொடேன் புத்தகசாலை.நெல்லியடி.
ஸ்ரீகாந்தா புத்தகசாலை. நல்லூர்.
செந்தூரன் புத்தகசாலை. சாவகச்சேரி.
ஈஸ்ற் லிங்க் புத்தகசாலை. திருமலை.
தரம்:5.16பக்கங்கள் கொண்ட
வெற்றிப் பாதைக்காய் வியாழன் வரும்

**உடன் விற்பனைக்கு**
Telephone booth, Comminication பாவனைக்கு உகந்த Coante, Internet Cafeக்கு உகந்த மேசை, சுழல் கதிரைகள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:T.P. 222 2557,0776145420.

**விஷேட சலுகை**
✦எப்பிரதேசத்திலும் வீட்டில் இருந்தவாறு உரையடக்கூடிய முறையில் டயலொக் C.D.M.A. மேசைத் தொலைபேசிகள் பொருத்தித்தரப்படும்.
டயலொக் 500/- பைக்கேச், மொப்ரெல் 300/- பக்கேச் இணைப்புகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
✦சகல விதமான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் அதற்கான உதிரிப்பாகங்களை பெற்றிடவும் சிறந்த முறையில் பழுது பார்த்திடவும்
✦அனைத்து விதமான கையடக்கத் தொலைபேசிகளையும் அண்லொக் செய்திடவும்



நியூ பவர் செலுலர் டிரேங் கம்பனி
205/ 01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0773- 518330, 077- 6660289.



(39)

**தேவை**
Computer Instractor M.S. Office, D.T.P.
[தெரிந்தவர்கள்]
நேரில் வரவும்
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி. இணுவில்.

**LOGIC**
P. கமல்
2007 - பகுதி II
திங்க. - புதன்- 3.30 - 4.30
2008 -திங். - புதன்
4.30. - 5.30.
ஆரம்பம் - 17.07.2006.
4.p.m.
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி. இணுவில்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CIMA இலங்கை பிரிவுக்கு புதிய தலைவர் தெரிவு



CIMA இலங்கைப் பிரிவின் புதிய தலைவராக சாந்திக்குமார் சதானந்தன் (FCMA, MBA) தெரிவு செய்யப்பட்டுள்ளார். 1984ஆம் ஆண்டு முதல் ஹேலீஸ் குழுவில் பணி புரிந்து வந்த சதானந்தன் பல சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார்.

ஹேலீஸ் குழுவில் போக்குவரத்துப் பிரிவான ஹேலீக் அட்வான்டிஸ் லிமிட்டெட்டின் குழுப் பணிப்பாளராக அவர் இப்பொழுது பதவி வகிப்பதுடன், குழுமநிதி, மனிதவள முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், கம்பனி வர்த்தக அபிவிருத்தி போன்ற பல்வேறு வர்த்தகப் பிரிவுகளுக்குப் பொறுப்பாகவும் இருந்து வருகின்றார்.

இவர் பொறியியல், உற்பத்தி, கப்பல் போக்குவரத்து, சர்வதேச சரக்கு விநியோக சேவை ஒன்றிணைந்த போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, பயணம் ஆகிய துறைகளில் நிதி மற்றும் பொது நிர்வாகத்தில் 30 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தையும் அவர் பெற்றுள்ளார்.

2005ஆம் ஆண்டில் முகாமைத்துவ தொழில்சார் அபிவிருத்திக் குழுவில் நியமனம் பெற்றது முதல் சதானந்தன் CIMAவுடன் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். 2001ஆம் ஆண்டில் அவர் அதே குழுவின் உபதலைவரானார். இதே வருடத்தில் CIMA இலங்கைப் பிரிவின் கவுன்சிலிற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் 2002 மற்றும் 2003 ஆகிய இரு ஆண்டுகளிலும் தலைவர், அங்கத்தவர் சேவைகள் குழு, 2005 இல் CIMA சர்வதேச வர்த்தகத் தலைவர்கள் உச்சி மாநாட்டின் மாநாட்டுத் தலைவராக (தொழில் நுட்பம்)வும், 2006 இல் வர்த்தக தலைவர்கள் உச்சி மாநாட்டுக் குழுவின் தலைவராகவும் மற்றும் பல குழுப் பொறுப்புகளையும் வகித்துள்ளார். 2004 ஆம் ஆண்டு அவர் உப தலைவராகவும், 2005ஆம் ஆண்டு பிரதித் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

CIMA தகைமைக்கு அப்பால், அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் MBA பட்டம் பெற்றிருப்பதுடன் 1997இல் கொழும்பு MBA அலுமினிச் சங்கத்தின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

தனது தெரிவு பற்றி சதானந்தன் பேசும்பொழுது, ''நான் CIMA இலங்கை பிரிவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள் ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சர்வதேச ரீதியாக வர்த்தக நடவடிக்கைகள் மீது மட்டும் தனியான கவனம் செலுத்தும் கணக்கீட்டு நிறுவனமான CIMA 158 நாடுகளின் 155,000 க்கு மேற்பட்ட அங்கத்தவர்களையும், மாணவர்களையும் கொண்டுள்ளது.

இலங்கையில் 11,000 மாணவர்களையும், 1,800 அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது. அவர்களில் பலர் பிரபல்யமான வர்த்தக நிறுவனங்களை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. பல வருடங்களாக, CIMA தனது பாடத்திட்டத்தையும் பயிற்சி முறைமைகளையும் விரிவாக்கி வந்துள்ளது.

இதன் மூலம் நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு ஆகியவற்றில் சிறந்த கல்வியறிவையும், பொருளாதாரம், சட்டம், வர்த்தக கணிதம், அளவீட்டு ஆய்வு, சந்தைப்படுத்தல், தாபன ரீதியான நடவடிக்கை, முகாமைத்துவ தகவல் முறைமைகள், செயற்பாட்டு மதிப்பீட்டு, கருத்திட்ட முகாமைத்துவம் போன்ற பல்வேறு துறைகள் பற்றி அறிவை உடைய வர்த்தக முகாமையாளர்களை உருவாக்குவதை உறுதிப்படுத்துகின்றது.

இந்த வகையில் அமைந்த பயிற்சிகளும் அறிவும் CIMA அங்கத்தவர்களை முடிவு எடுப்பதில் நெகிழச்சித் தன்மையுடையவர்களாகவும், பல்வேறு வகையான வர்த்தகத் தேவைகளுக்கு பதிலளிப்பவர்களாகவும் மாற்றி வர்த்தகங்களின் சாரதிகளாக விளங்க வைக்கும் என்பதில் ஆச்சரியமெதுவுமில்லை.

இந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இன்னும் இரண்டு கௌரவ உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மைக்ரோநெட்டின் நிர்வாகப் பணிப்பாளர் எம்.ஏ.எல்.அருனார பெர்னாண்டோ (FCMA, MBCS) பிரதித் தலைவராகவும், அரேபியாவைச் சேர்ந்த தல்மா கோர்ப்ரேசனின் ஆலோசகர் கௌரி சங்கர் FCMA உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ✱


## உங்கள் பற்களை விரல்களினால் துலக்குங்கள்




சிறிதளவு சுமுது பற்பசையை உங்கள் விரல்களில் எடுங்கள்



ஐந்து நிமிடங்களுக்கு மேல் முரசை கீழ்புறமாகவும் கீழ்முர்சை மேற்புறமாகவும் அழுத்தி தேய்க்கவும்.உள்முரசையும் மேற்கூறியவாறு செய்யவும ஒவ்வொரு இரவும் சுமுது பற்பசைய்யை பாவித்து உறுதியான பற்களை பெறுங்கள்.




நாள்தோறும் சுமுது பாவிப்பதன் மூலம் பற்காவி,முரசுகரைதல்,பல்லாடுதல், வாயில்துர்நாற்றம் வீசுதல் என்பவற்றை தடுக்கலாம

சுமுது ஆயுர்வேத பற்பசை
சுமுது பற்பசையை பாவித்து பற்கள், முரசைப் பாதுகாக்கவும்

சித்தாலேப ஆயுர்வேத வைத்தியரின் ஆராய்ச்சிப்பிரிவின் கண்டுபிடிப்பு
ஹெட்டிகொட இண்டஸ்ரீஸ் (பிரை) லிமிட்.
33/3, ஸ்ரீ தர்மராம வீதி, இரத்மலானை, இலங்கை. தொலைபேசி: 2736910 தொலைநகல்: 2735465
வடபுல விநியோகஸ்தர்
வணிக்கா மெடிக்கல்ஸ்,
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொபே: 021 222 6291, 021 222 2445
மின்னஞ்சல் : vanikaa@sltnet.lk


# மனமார வாழ்த்துகிறோம்



யாழ்ப்பாணச் சட்டத்துறை வரலாற்றில் முதன்முதலாக ஜனாதிபதி சட்டாலோசகராக (President's Counsel) 2006 ஆடி மாதம் 7ஆம் திகதியன்று உயர் நீதிமன்றத்தில் முதன் முதலாகத் தமிழில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம்(LL.B) அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம், உடுவில் முன்னைய அட்வக்கேற்
## செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் ச.ச.

குடாநாட்டில் தொழில் புரிந்த
சட்டத்தரணிகள்
'பிரசிடென்ற்ஸ் கௌன்சில்' என்ற
பெருமையை மட்டுமன்றி,
அங்கிருந்து அதனைப் பெறும்
முதலாவது பெண்ணென்ற
மற்றோர் பெருமையையும்
பெற்றிட்ட இவ்வேளை,
அன்பர்கள், நண்பர்கள்,
நல்லவர்கள், உறவினர்கள்
நன்றி மறந்திடாத நன்மக்கள்
எனப் பலரும்
உங்கள் உயர்வுகண்டு
உளமார வாழ்த்துகையில்,
நீண்ட நெடுங்காலம்
நெருங்கி ஊடாடி,
தொழில்முறைப் பயணத்தில்
தொழில்சார் உறவோடு
தொடர்ந்து வந்த நானும் - உங்கள்
உயர்வது கண்டு
உவகை கொண்டதனால்
நெஞ்சுநிறை நெகிழ்வோடு
நிறைவாக வாழ்த்துகின்றேன்!

யாழ்.மண்ணில்,
சட்டத் தொழில் புரிந்து
புகழ்பூத்த பலருள்ளே
தனக்கென்றோர் தனியிடத்தைத்
தக்கவைத்த பெருமகனார்
எஸ்.ஆர்.கனகநாயகம்
என்றவொரு பெரும்மலையின்
'யூனியர்'கள் சிலருள்ளே
அவர் நாமம் நிலைத்து நிற்க
அவர் தடத்தில் நடைபயிலும்
நங்கை நீ உன் வாழ்வை
இதுகாலை வரையாக
இத்துறைக்கே அர்ப்பணித்தாய்!

''முன்வைத்த காலை
பின்வைப்பதில்லை'' என்ற
முத்தோர் மொழிந்துவைத்த
முதுமொழிக்கேற்ப,
''பொறுப்பேற்ற வழக்கொன்றின்
மறுதிறத்தார் தரம் பார்த்து
மாறுபட்டு பேசுகின்ற
கூறுகெட்ட தன்மை தவிர்''
''காசு, பணம், தேடுதலே
கடமையதாய் எண்ணி என்றும்
தரப்பினரின் பின்னாலே
செல்லுதலைத் தவிர்''
''எம் தரப்பில் நியாயம் என
வாதாடும் வேளையிலே,
மன்றத்தார் மனம் நோகும் என்ற
எண்ணம் தவிர்''

கருத்துரை : க.மு.தர்மராசா
பிரசித்த நொத்தாரிசும்
சட்ட உதவியாளரும்

சட்டத் தொழில் செய்ய வருகின்ற
எவருக்கும்
அடிப்படைத் தத்துவமாய்
இவைதானே தேவையென்று

முன்னவராம் எங்கள் எஸ்.ஆர்
முன்னாளில் மொழிந்தவற்றை,
தாரகமாய் பேணுகின்ற
முதல் மகளாய் வாழுகின்றாய்!

உங்கள் கல்வியாண்டின் பின்னால்
புதுமுறை தோற்றம் பெற்றதனாலே
பழைய முறைகள் மாற்றம் பெற்று
'சட்டத்தரணி' முறை அமுலாச்சு
பழைய பாடத்திட்டம் - உங்கள்
இறுதிப் பரீட்சை என்பதனாலே
'நியாயவாதி'
(Advocate) பட்டம் பெற்றே
நீங்கள் தொழிலில் காலடி வைத்து
நாலெட்டாண்டு நல்தொழில் செய்தே
நாநிலம் போற்றும் நற்பெயர் பெற்றீர்!

யாழது மண்ணில், வாழ்தலை அஞ்சி
வேறிடம் நாடி ஏகினர் பல்லோர்
அவர்வழி சென்று ஒடுங்கிடவில்லை

அந்த நாளின் 'விதானை' மகளாய்
தந்தை வழியால் வீரம் பெற்றாய்
தொழில்முறை வழியாய்
துணிவினைப் பெற்றாய்

இவை அவை எல்லாம் ஒன்றிணைந்ததனால்
''அச்சம் தவிர்'' எனும் ஆளுமைகொண்டே
எது வந்தாலும் ஏற்றிடும் பண்பாய்
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்
வீரம் செறிந்த மறக்குலப் பெண்ணாய்
தாயக மண்ணில் சேவைகள் செய்தே
'மண்ணின் மகளாய்'
வாழ்தலைக் கொண்டாய்!
இத்துணை சீரும் சிறப்புகளோடும்
இயல்பாயமைந்த திறமைகளாலே
உங்கள் தொழில் உயர்வுகள் கண்டு
அரச விருதாய் வழங்கிடும் பாங்கில் 'ச.ச.'
(P.C) என்ற பெருமைசேர் பட்டம்
பெற்றிடும் இந்த இனிய நன்நாளது,
யாழது மண்ணின் சட்டத்துறையின்
பாரம்பரிய வரலாற்றேட்டில்
பொன்னெழுத்துகளால்
பொறிபடும் நாளே!

இந்த நாளில், இனிய நன்னாளில் - என்
நெஞ்சைவிட்டகலா நினைவுகளோடு
நல்லாரோடு நானும் இணைந்து
பெருமைகள்,
பேறுகள் பலவும் பெற்று நீண்ட நெடுநாள்
வாழ்கவென்று - மீண்டும் நெஞ்சம் நெகிழ
வாழ்த்துகின்றேனே!

ஆக்கம் : ஓர் அன்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org